# நர்மதாசங்கர்

குலாப்தாஸ் ப்ரோக்கர்



T
891.471 809 2
N 167 B

இந்திய

T
891.471 809
2
N 167 B

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# நர்மதாசங்கர்

ஆங்கில மூலம்:
குலாப்தாஸ் ப்ரோக்கர்

தமிழாக்கம்:
ஆதவன் சுந்தரம்

சாகித்திய அக்காதெமி

*Narmadhashankar*—Tamil translation by K. S. Sundaram (Aadhavan) of Gulabdas Broker's monograph in English, Sahitya Akademi, New Delhi (1985)
SAHITYA AKADEMI
REVISED PRICE Rs. 15·00

T
891.471 809 2
N 167 B

© குலாப்தாஸ் ப்ரோக்கர்
©Tamil Translation: Sahitya Akademi
First Published: 1985

Library IIAS, Shimla
T 891.471 809 2 N 167 B
00117395

சாகித்திய அக்காதெமி

*தலைமை அலுவலகம்:*

*ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001*

*கிளை அலுவலகங்கள்:*

*29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018*
*பிளாக் V–B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா 700 029*
*172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,*
*தாதர், பம்பாய் 400 014*

Indian Institute of Advanced Study
117395
14/12/04
SHIMLA

SAHITYA AKADEMI
REVISED PRICE Rs. 15·00

*அச்சிட்டோர்:* டயோசிசன் அச்சகம், சென்னை 600 007

## சமர்ப்பணம்

இந்த மகத்தான மனிதரை
முதன் முதலாக எனக்கு அறி
முகம் செய்வித்த ஸோஃபியா
வாடியா அம்மையாருக்கு

# நர்மதாசங்கர்

## I

பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில், பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலைபெறுமுன், பொதுவாக இந்தியாவில் நிலவிய சூழ்நிலை துயரத்தையும் அதிர்ச்சியையும் அளிப்பதாகவே இருந்தது; கல்வியறிவு அதிகம் பரவியிருக்கவில்லை; மக்கள் அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்தனர். பழைமைவாதமும் நிலப் பிரபுத்துவ மனப்பாங்கும்தான் செல்வாக்குப்பெற்று விளங்கின. மக்களின் சமூக நியதிகள், நெறிகள் பிற்போக்கிலும் பிற்போக் கானவையாக இருந்தன. பெண்களின் நிலை மிக மோசமாக இருந் தது; அவர்கள் சதா வீட்டு வேலைகளில் உழன்றுகொண்டிருக்க வேண்டுமென்றுதான் எல்லாரும் எதிர்பார்த்தார்கள். எங்கும் அழுக்கும் வியாதியும் நிலவின. மூட நம்பிக்கைகள் மக்களை முழுமையாக ஆட்கொண்டிருந்தன, விவேகமோ விசால மனப் போக்கோ எங்கும் மருந்துக்கும் காணப்படவில்லை.

சூரத் அந்நாட்களிலேயே குஜராத்தின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாய்த்தானிருந்தது. ஆனல் அங்கும் மேற்சொன்ன சூழ் நிலையே நிலவியது. இருட்டின பிறகு யாரும் வெளியே செல்வ தில்லை. அப்படியே செல்லவேண்டிவந்தால் ஒரு விளக்கை ஏற்றிக் கையில் எடுத்துச் செல்வார்கள். தற்செயலாக காற்றில் விளக்கு அணைந்துபோனல்—பெரும்பாலும் இப்படித்தான் நடக்கும்— வெளியே வரத் துணிந்த அந்த நபரைப் பீதி கவ்விக்கொள்ளும். ஒவ்வொரு மரத்தின்மேலும், ஒவ்வொரு வீதி முனையிலும், ஏதாவ தொரு பேயோ பிசாசோ தன்னை விழுங்கக் காத்திருப்பதாக அந்த ஆசாமிக்குத் தோன்றும். முதல் குஜராத்தி நாவலின் (1868ஆம் வருடம் வெளிவந்த ''கரண் கேலோ'') ஆசிரியரான நந்த்சங்கர் மெஹ்தாவின் சரிதையை அவருடைய மகன் விநாயக் நந்த்சங்கர் மெஹ்தா (இவர் ஒரு ஐ.ஸி.எஸ். ஆபீசர்) எழுதியுள்ளார். இந்தச் சரிதையில் அவர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் சூரத்தில் நிலவிய சூழ்நிலையை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தம் நூலின் 28ஆம் பக்கத்தில் அவர் கூறுகிறுர்:

''சோர்வளிக்கும் இருண்ட இரவு. தாரகைகள் சிந்தும் ஒரு சிறிது வெளிச்சத்தையும் மறைத்தவாறு கரிய கார்கால மேகங்கள்

வானில் கவிந்துள்ளன. நாட்டில் முனிசிபாலிட்டிகள் இன்னும் வந்தபாடில்லை; எனவே நெடுஞ்சாலைகளில் வெளிச்சத்தின் சுவடு கூட இல்லை. மேலும் சாலைகள் மேடும் பள்ளமுமாய், குண்டும் குழியுமாய் இருக்கின்றன. இத்தகைய ஒரு சாலையில் பதினைந்து, பதினாறு வயதுள்ள ஒரு சிறுவன் கையில் ஒரு லாந்தரைப் பிடித்த வாறு வேகமாக நடந்துகொண்டிருக்கிறான். பேய் பிசாசுகள் எங்கும் நிறைந்திருப்பதுபோன்ற சூழல். மேற்பார்வைக்குத் துணி வுள்ளவனாகத் தோன்றினாலும் உள்ளூர அந்த சிறுவனின் நெஞ்சு பயத்தில் வேகமாகப் படபடத்துக்கொண்டிருக்கிறது. அவனுடைய விரைவான நடை, விரைவாக வீடு சேரவேண்டுமென்ற ஆசையின் பிரதிபலிப்பே என்பதில் சந்தேகமில்லை. அத்தருணத்தில் திடீரென அவன் பின்னாலிருந்து ஒரு குரல் ஒலிக்கிறது: ''கொஞ்சம் நில்லு'' பெண் குரல் போலிருக்கிறது. சிறுவன் பீதி கொள்கிறான். பிசாசோ ஒருவேளை? பிள்ளைப்பேறின்போது உயிர்துறந்த ஏதாவது பெண்மணியின் ஆவி . . . அவன் கால்கள் பயத்தில் மரத்தாற் போலாகின்றன. அவன் சுய நினைவுடன் இருக்கப் பெரும் முயற்சி செய்கிறான்; தொடர்ந்து காயத்திரி மந்திரம் ஜபித்தவாறு குரல் வந்த திசையை நோக்கிப் போகிறான். அங்கு ஒரு கட்டிடத்தின் வெளியே இளம் பெண்ணொருத்தி கையில் ஏற்றப்படாத தீப மொன்றைப் பிடித்தபடி நிற்கிறாள். ''என் விளக்கு அணைந்து விட்டது. தயவு செய்து உன் விளக்கினால் அதை ஏற்றேன்'' என்று கூறுகிறாள். காற்றில் விளக்கு அணைந்துவிடாமலிருக்க, தன் புடைவைத் தலைப்பைத் திரைபோலத் தூக்கிப் பிடித்துக் கொள் கிறாள். சிறுவன் லாந்தரின் மூடியைத் திறந்து, அவளுடைய தீபத்தை ஏற்றுகிறான். ஆனால் அதே சமயத்தில் பலமான காற்று வீச, இருவர் விளக்குகளுமே அணைந்துபோகின்றன. அதுவரையில் எப்படியோ தைரியத்தைக் கையில் பிடித்துக்கொண்டிருந்த சிறுவன் இப்போது பீதியில் மூழ்கி, அங்கிருந்து ஓட்டம் பிடிக் கிறான்.''

மக்களிடையே நிலவிய வேறு பல மூட நம்பிக்கைகளும் இருந் தன. முதன் முதலில் ரயில்கள் ஓடத்தொடங்கியபோது அவை தங்களைச் சிறைப்படுத்த வந்திருக்கும் எஃகு பூதங்களென மக்கள் நினைத்து மிரண்டனர். புனித நதியான நர்மதைமீது பாலம் நிர்மாணிக்கப்பட்டபோது, பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே நதியில் உறைந்த கடவுளின் புனிதத்தைக் கெடுக்க முயலுவதாக மக்கள் நினைத்தனர். எனவே பாலத்தின் திறப்பு விழாவின்போது ரயில் இஞ்சின் ஏதோ யந்திரக்கோளாறு காரணமாக நடுப் பாலத் தில் நின்றுபோனபோது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். எல்லாரும் ஒரே குரலில் கூவினர்: ''கடவுள் சரியான பாடங் கற்பித்துவிட்

டார்!'' ஆனால் சிறிது நேரத்தில் இஞ்சின் மீண்டும் நகரத் தொடங்கியபோது அவர்கள் பேச்சற்றுப்போயினர். உடனேயே நேரெதிரிடையான எண்ண ஓட்டம் அவர்களிடையே வலுப் பெற்றது. ''இது பூதம் அல்ல. இது ஏதோ தெய்வீக சக்தி. இது நம் வழிபாட்டுக்குரியது'' என அவர்கள் உண்மையாகவே நம்பி இஞ்சினருகில் சென்று அதற்கு மாலையிட்டு அதன்மீது குங்குமப் பொட்டு வைத்தனர்.*

மக்களிடையே இவ்வாறு மூட நம்பிக்கைகள் நிலவியபோது அவர்களுடைய மூடத்தனத்தைத் தமக்குச் சாதகமாகச் சிலர் பயன் படுத்திக்கொள்ள முனைந்ததில் வியப்பில்லை. இதற்குப் பூசாரிகளை விட வேறு யார் தகுதிவாய்ந்தவர்களாக இருக்கமுடியும்? இவர்கள் கடவுளின் மறு அவதாரங்களெனத் தம்மைக் கூறிக்கொண்டனர். மன்னர்கள்கூடப் பெற்றிராத சலுகைகளையும் உரிமைகளையும் இவர்கள் பெற்றிருந்தனர். பிறருக்கு ஒழுக்கநெறியை உப தேசித்த இவர்களுடைய சொந்த வாழ்க்கை ஒழுங்கீனங்கள் நிறைந்ததாக இருந்தது. இதற்குச் சாதகமாக சாஸ்திரங்களைத் திரித்துக்கூறி சப்பைக்கட்டு கட்டுவதும் இவர்கள் வழக்கமாக இருந் தது. இந்தப் பூசாரிகளின் சீடர்கள் அவர்களுடைய கோரிக்கை களுக்கெல்லாம் கண்மூடித்தனமாக இணங்கினர். இந்தப் பூசாரி களால் மோசம் செய்யப்பட்ட பெண்களோ தாம் கடவுளின் அருளைப் பெற்றதாக எண்ணி மயங்கினர். இவ்வாறு பலவிதங்களி லும் செல்வாக்குப் பெற்று விளங்கிய பூசாரிகள் சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசுபவர்களை ஏளனத்துடன் பார்த்தனர். அவர்களை மீறிச் செயல்படுவதென்பது எளிதானதாக இருக்கவில்லை. பெண் களுக்கு கல்வி புகட்டுவதைப் பூசாரிகள் தீவிரமாக எதிர்த்தனர். அதைப்பற்றி யாராவது நினைக்கவும் துணிந்தால் உடனே, ''கல்வி யறிவு பெற்ற பெண்கள் இளம் வயதில் விதவையாகி விடுவர்'' எனக்கூறி பூசாரிகள் அவர்களை பயம் கொள்ளச் செய்வார்கள். விதவையாகிப்போதல் என்பதோ அக்காலத்தில் ஒரு பெரிய சாபம். தம் சகோதரிகளோ பெண்களோ விதவைகளாகக்கூடும் என்ற நினைவே மக்களை நடுக்கத்தில் ஆழ்த்தப் போதுமானது. எனவே பெண்களுக்குக் கல்வி புகட்டுவதில் யாரும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை.

சாதிப் பேய் மக்களை ஆட்டிவைத்தது. அந்தந்த சாதி மக்கள் அந்தந்த சாதிக் கட்டுப்பாடுகளின் கைதிகளாக இருந்தனர். இக் கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் துயருற்றார்கள்; கடுமையாய்த்

---

* 1868ஆம் வருடம் வெளியான மேரி கார்பென்ட்டர் எழுதிய'' இந்தியாவில் ஆறு மாதங்கள்'' என்னும் நூலிலிருந்து.

தண்டிக்கப்பட்டார்கள்: சாதியிலிருந்து வெளியேற்றப்படுபவர்கள் மீண்டும் அதனுள் அனுமதிக்கப்படுமுன் பலவிதமான தூய்மைச் சடங்குகள் மற்றும் பிராயச்சித்தங்களுக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ளவேண்டும். மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களையும்கூட அவமானத்தில் தலை குனியச்செய்யும் சடங்குகள், இவை.

கல்வி தேக்க நிலையில் இருந்தது. இருந்த பள்ளிக்கூடங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இவையும் மிக ஆரம்பப் பாடங்களை மேலோட்டமான முறையில் போதித்தன. ஆசிரியர்கள் வகுப்பறையில் உலகம் உருண்டையானதெனப் போதித்தனர். ஆனால் மாணவர்களைத் தனியே சந்தித்து உரையாடும்போது ஆசிரியர்கள் இவ்வாறு கூறுவார்கள்: ''உலகம் உருண்டையாக இருந்து அது இடைவிடாமல் சுற்றிக்கொண்டு மிருந்தால் நம் வீடுகள் இதற்குள் இடிந்து விழுந்திருக்காதா என்ன? இதெல்லாம் வெறும் பொய், ஆனால் என்ன செய்ய, இந்தப் பொய்யைச் சொன்னால்தான் பரீட்சையில் தேறலாம்.''*

பள்ளிகளில் போதிக்கப்பட்ட இலக்கணமும், இதேபோல, வெறும் ஆரம்பப் பாடமாகவே இருந்தது. மொழி, இலக்கியம் ஆகியவை சீராகவோ விரிவாகவோ கற்பிக்கப்படவே இல்லை. குஜராத்தியில் அப்போது வசனம் என்ற பெயரில் எதுவும் இருக்கவில்லை. மத்திய காலத்துக் கவிதைகள் தாம் உண்டு. குஜராத்தி மொழியையோ அதன் இலக்கியத்தையோ மாணவர்கள் கற்பது உயர்வானதாகக் கருதப்படவில்லை; சமூகத்தில் உயர்மட்டத்தில் இருந்தவர்கள் அம்மொழியைத் துச்சமாகக் கருதினர். சம்ஸ்கிருதம், பாரசீகம் அல்லது விரஜ பாஷை ஆகியவற்றைக் கற்பதே மேலோர்க்கு ஏற்ற செயலாகக் கருதப்பட்டது.

இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம். ஆனால் இதுதான், சுருக்கமாக, பிரிட்டிஷாரின் வரவுக்கு முன் இந்தியாவில்—குறிப்பாக குஜராத்தில்—நிலவிய சூழ்நிலை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நிலைமை சற்றே மாற்றம் கண்டது. இதற்கு ஓரளவு பிரிட்டிஷார் தம்முடன் கொண்டுவந்த புதிய கருத்துக்கள், வாழ்க்கை முறைகள் காரணம். பிரிட்டிஷாரின் கருத்துக்கள், நடைமுறைகளைச் சுவீகரித்துக் கொண்ட சில இந்தியர்கள் இவற்றைத் தம் சமூக வாழ்வில் கடைப்பிடிக்க முன் வந்ததும் ஒரு காரணம். பின் சொன்ன சாராரில் குறிப்பிடத்தக்கவர்கள் துர்காராம் மெஹ்தாஜியும் (1809-1878), தல்பத்ராம் தயாபாயும் (1820-1898). முன்னவர் ஆசிரியர்; பின்னவர் கவி. இந்த இருவரும் மக்களிடையே விழிப்புணர்ச்சி

* மஹிபத்ராம் எழுதிய ''தயாராம் சித்ரா'' என்ற நூலிலிருந்து.

ஏற்படச் சில இயக்கங்களை முன் நின்று நடத்தினர். மக்கள் மெல்லத் தமது அறியாமையையும் தன்மானமற்ற வாழ்க்கையை யும் உணரலாயினர். கல்வி முறையிலும் சீர்திருத்தங்கள் சில ஏற் படத் தொடங்கியிருந்தன. துணிச்சலும் கற்பனையும் மிக்க, செயல் திறன் கொண்ட, ஒருவர்மட்டும் தோன்றிவிட்டால் சமூக வாழ்வில் பெரும் புரட்சியொன்று அவர் மூலம் விளைவதற்குச் சாதகமான சூழ்நிலை.

அத்தகைய ஒருவர் விரைவிலேயே தோன்றினர். குஜராத் மாநிலத்தின் சூரத் நகரில் 1833ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 24-ந் தேதி பிறந்தார் அவர். அவர் பெயர் நர்மதாசங்கர் லால் சங்கர் தவே.

## II

நர்மதாசங்கர் சூரத்தில் பிறந்தாலும் அவருடைய இளமைப் பருவம் சூரத்தில் கொஞ்சம், பம்பாயில் கொஞ்சம் என்று கழிந்தது. அவர் முதன் முதலாகப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தது பம்பாயில்தான். அது நடந்தது இவ்வாறு:

சூரத்வாசியான அவருடைய தந்தை லால் சங்கர் தவே ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ''நாகர்—பிராம்மண'' வகுப்பைச் சேர்ந்தவர்; ஓரளவு படித்தவர். குஜராத்தியைத் தவிரச் சிறிது சம்ஸ்கிருதமும் அவர் கற்றிருந்தார். அவருடைய கையெழுத்து மிக அழகாயிருக்கும்.

அந்நாட்களில் புத்தகங்களைத் தயாரிக்க ''லித்தோகிராஃப்'' முறைதான் பயன்படுத்தப்பட்டது; எனவே நல்ல கையெழுத்து உள்ளவர்களுக்கு எங்கும் வரவேற்பு இருந்தது. பம்பாயில் காப்டன் ஜெர்விஸ் என்பவர் பள்ளி மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு அழகான கையெழுத்து உள்ள சிலர் தேவைப்பட்டார்கள். குஜராத்தியில் அழகாகவும் பிழையின்றியும் எழுதக்கூடிய சிலரைத் தமக்குச் சிபாரிசு செய்யும்படி சூரத்தில் ஜட்ஜாக இருந்த ஜான்ஸன் என்பவருக்கு அவர் எழுதினார். இவ்வாறு அவருக்குத் தெரியவந்த நபர்களுக்கு சூரத்தில் அவர் ஒரு பரீட்சையை நடத்தினார். லால் சங்கர் தவேயும் இந்தப் பரீட்சையை எழுதினார். தேர்வானவர்கள் பட்டியலில் முதல் பத்துக்குள் அவருடைய பெயர் இருந்தது. அப்போது ஒரு சங்கடமான நிலை உருவாயிற்று. அவருடைய தந்தை நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருந்ததால், அச்சமயத்தில் லால் சங்கர் சூரத்தைவிட்டு எங்கும் போகக்கூடாதென அவருடைய அன்னை தடுத்தாள். அவருக்கு அளிக்கப்படவிருந்த மாதச் சம்பளம் முப்பது ரூபாய்—அக்காலத்தில் ஒரு பெருந்தொகை. ஆனாலும் தாய் தடுத்ததால், வேலையை ஏற்க மறுத்துவிடுவதாக லால் சங்கர் இருந்தார். இந்தக் கட்டத்தில்தான் அவருடைய தந்தையின் நெருங்கின உறவினர் ஒருவர் குறுக்கிட்டார். இந்த உறவினர் அவர்களுடைய குடும்பத்துக்கு கிட்டதட்ட ஆறாயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்திருந்தார். ''லால் சந்த் இந்த வேலையை ஏற்காவிட்டால் தம்முடைய கடனை இவர்கள் எப்போது திரும்பித் தரப்போகிறார்கள்?'' என்று அவர் பயந்தார். இந்த பயத்தை அவர் அக்குடும்பத்தாரிடமே வெளிப்படையாகக் கூறித் தம்

அதிருப்தியை அவர்கள் உணரச் செய்தார். அவர்களைப் பலவாறு இடித்துக் காட்டவும் செய்தார். இதனால் ரோஷமடைந்த லால் சங்கர் உடனடியாக அவ்வேலையை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்தார்.

இவ்வாறு, நர்மதாசங்கர் பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் வயதையடைந்தபோது அவருடைய தந்தை லால் சங்கர் பம்பாயில் இருந்தார். நர்மதாசங்கர் ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் பட்டார். பள்ளிக்கூடம் அவருக்குப் பிடித்திருந்தது; படிப்பும் வந்தது. ஆனால் அடிக்கடி பம்பாய்க்கும் சூரத்துக்குமிடையே போய் வந்தவாறு இருக்கவேண்டியிருந்ததால் அவருடைய படிப்பு சீராக முன்னேற முடியவில்லை. அரிச்சுவடியின் குறிப்பிட்ட ஒரு எழுத்தை அவரால் சரியாக உச்சரிக்கமுடியவில்லையென்பதால் சூரத் பள்ளியில் ஆரம்ப வகுப்பிலேயே அவரை நீண்ட காலம் வைத்திருந்தார்கள். ஆனால் இந்தக் கண்டம் தாண்டிய பிறகு சூரத்திலும் பம்பாயிலும் அவருடைய படிப்பு நன்றாகவே சென்றது. பள்ளிக்கூடத்தில் சில பரிசுகளும் வாங்கினார். பூகோளமும் வான சாஸ்திரமும் அவருக்குப் பிரியமான பாடங்களாக இருந்தன. இந்த மகிழ்ச்சியை அவருடைய பிற்காலத்துக் கவிதைகள் சிலவற்றி லும் காணமுடிகிறது. மகாராஷ்டிரத்து அந்தணர்கள் சிலரிட மிருந்து வேதங்களைக் கற்கவும் அவர் முனைந்தார்; ஆனால் இதில் அவரால் அதிகம் முன்னேற முடியவில்லை. எனினும் பிற்காலத்தில் சாஸ்திரங்களில் அவர் கொண்ட ஈடுபாட்டுக்கு இது ஒரு நல்ல அடிப்படையாக அமைந்தது.

தம்முடைய பதினேராவது வயது வரையில் வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் அவர் படித்தார். படிப்பில் ஆர்வமுள்ளவராக வும் பரிசுகள் பல பெருமளவுக்குத் திறமையுள்ளவராகவும் இருந்தும் அவர் மிகுந்த கூச்சமுள்ளவராக இருந்தார். அவருடைய இளமைப் பருவம் முழுவதும், பள்ளியிலும் சரி, வேறிடங்களிலும் சரி, இந்த கூச்ச சுபாவம் நீடித்தது. யாரிடமும் எதுவும் வாய் திறந்து பேசமாட்டார். ஆனால் எல்லாம் தன் விருப்பத்தின்படி நடக்கவேண்டுமென்றும் எதிர்பார்ப்பார். இவ்வாறு நடக்காவிடில் எதிர்ப்பைத் தெரிவிக்கவோ ஆர்ப்பாட்டம் செய்யவோ மாட்டார். மாறாக முகத்தைத் தூக்கிக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவார். இந்த நாட்களில் புதிய மனிதர்கள் யாராவது எதிரே வந்தால் சங்கோசம் தாளாமல் அம்மாவின் பின்னால் ஒளிந்து கொண்டு விடுவாராம் அவர். ஆனால் அவருடைய அன்னை ஒரு துணிச்சலான பேர்வழி. ஒரு தடவை போலி சன்யாஸி ஒருவர் அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தார். வாயிலிருந்து புகை வெளி யிட்டும் வேறு சில சாதாரண வித்தைகள் காட்டியும் அவளுடைய

கணவரை எப்படியோ சன்யாஸி மயக்கிவிட்டார். அவருக்கு ஏதாவது துணிமணிகள் கொடுத்தனுப்புமாறு அவளிடம் கணவர் கூறினர். ஆனால் அந்த சன்யாஸி வெறும் வேஷதாரி என்பதை அவள் எப்படியோ கண்டு கொண்டாள். அவர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அவள் எச்சரிக்கவும், அந்த சன்யாஸி பயந்து ஓடிவிட்டார். நர்மதாசங்கர் தமது சுயசரிதையில் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பின்னளில் போலி மத குருக்களையும் சமூகத்தில் உலவும் இதர வேஷதாரிகளையும் அம்பலப்படுத்துவதில் அவர் காட்டிய தீவிரத்துக்கு இந்த இளம் பருவ நிகழ்ச்சியே அடிப்படையாக இருந்திருக்கலாம்.

அவருடைய பதினேராவது வயதில் அவருக்குத் திருமணம் நடந்தது. மணமகள், சூரத்தைச் சேர்ந்த சூரஜ்ராம் சாஸ்திரி என்பவருடைய மகள். தக்க வயதை அடைவது வரையில் தன் பெற்றோர் வீட்டிலேயே அவள் இருந்து வந்ததால் இந்தத் திருமணத்தால் நர்மதாசங்கரின் வாழ்க்கையில் உடனடியாக எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அவருடைய படிப்பு தொடர்ந்தது.

பதினேராவது வயதில் அடியெடுத்து வைத்த நான்கு மாதங்களுக்குப் பின் அவர் ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். இப் பள்ளிக்கூடத்தில் உபகாரச் சம்பளம் பெற விரும்பிய மாணவர்களுக்காகச் சில ஆங்கில ஆசிரியர்கள் விசேஷ வகுப்புகள் நடத்தி வந்தனர். இது நர்மதாசங்கருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. மிஸ்டர் கிரஹாம், மிஸ்டர் ரீட் போன்ற சில ஆசிரியர்கள் நடத்திய பாடங்களில் நர்மதாசங்கர் எப்போதும் முதலாவதாக வந்ததால் இந்த ஆசிரியர்களின் விசேஷ அன்புக்குப் பாத்திரமானர் அவர். அந்நாட்களில் நடந்த ஒரு நிகழ்ச்சி இந்த மாணவருக்கிருந்த அசாதாரணமான தன்னம்பிக்கையைப் புலப்படுத்தும்.

பிளாக்வெல் என்னும் பெயருள்ள ஒரு ஆசிரியர் கணக்கு வகுப்பு எடுத்து வந்தார். ஒரு நாள் ஒரு அல்ஜீப்ரா கணக்குக்கு நர்மதாசங்கர் சரியான விடையைக் கண்டுபிடித்தபோதிலும் வாத்தியார் சொல்லிக்கொடுத்த வழியிலன்றி வேறு வழியில் அவர் கணக்குப் போட்டதால் அவர் போட்ட கணக்கு சரியில்லையென்று வாத்தியார் சொல்லிவிட்டார். ஆனல் சிறுவனுக்கோ தான் செய்தது சரியென்றும் வாத்தியார்தான் தப்புச் செய்கிறுரென்றும் நிச்சயமாகத் தோன்றியது. மிஸ்டர் மாக்டௌகல் என்ற மேல் வகுப்பு ஆசிரியரிடம் அவர் முறையிட்டுக் கொண்டார். இந்த ஆசிரியர் சிறுவன் கடைப்பிடித்த வழிதான் சரியானதென்றும் வாத்தியாருடைய வழி தவறென்றும் கூறிவிட்டார். இச்சம்பவம் நர்மதாசங்கருக்கு மிகுந்த தன்னம்பிக்கையளித்தது.

நர்மதாசங்கர் இப் பள்ளியில் சுமார் ஐந்து வருடங்கள் படித்தார். வகுப்பில் மூன்ருவது மாணவராக அவர் தேர்வு பெற்று, உபகாரச் சம்பளம் பெற்ருர். இக் காலகட்டத்தில் கவிதை, குறி கணிதம் (algebra), சரித்திரம், வடிவியல் (geometry) ஆகிய பாடங்கள் அவருக்கு மிக விருப்பமானவையாயிருந்தன. அவர் உழைத்துப் படிக்கும் மாணவர்களில் ஒருவராயிருந்தார்; யாரும் அவர்மீது குறை காணவில்லை. ஒரு முறை ஏதோ பரீட்சையில் முதலாவதாகத் தேறியதற்காக அவருக்குப் புத்தகங்கள் பரிசு வழங்கப்பட்டன. இப்புத்தகங்கள் கவிதை, சரித்திரம், வான சாஸ்திரம் ஆகியவை பற்றினதாகும். இப்புத்தகங்கள் அவர்மீது ஆழ்ந்த பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்பதை அவருடைய பிற்காலத்திய படிப்பு ருசிகள் தெளிவாக்குகின்றன.

இக் காலகட்டத்தில் கட்டுப்பாடான ஒரு வாழ்க்கைக்கு அவர் பழக்கப்பட்டிருக்கவும் வேண்டும். சாதாரணமாக அப்போதெல்லாம் தம்முடைய ஒரு நாள் எவ்வாறு கழியுமென்பதை அவர் இவ்வாறு விவரித்திருக்கிருர்:

''தினசரி காலையில் நாலு மணிக்கு என் தந்தை படுக்கையை விட்டு எழும்போது நானும் எழுந்துவிடுவேன். முந்தின இரவு நான் எழுதிவைத்திருக்கும் பாடங்களை அந்த நேரத்தில் படிப்பேன். அதன் பிறகு சமஸ்கிருத பாடங்களைத் தயார் செய்துகொள்வேன். எனக்கு சமஸ்கிருதம் சொல்லிக் கொடுத்து வந்த திரு. அம்பா சங்கர் வீட்டுக்குச் செல்வேன். காலை எட்டு மணிக்கு அங்கிருந்து திரும்பி வருவேன். குளித்துவிட்டுப் பிரார்த்தனை செய்வேன். ஒன்பதரை மணிக்கு என் தந்தையுடன் அமர்ந்து சாப்பிடுவேன். பத்தரை மணிக்குப் பள்ளிக்கூடம் செல்வேன்.

''ஐந்து மணிக்குப் பள்ளியிலிருந்து திரும்பியதும் மொட்டை மாடிக்குச் சென்று அங்கு வீசும் காற்றை அனுபவிப்பேன். மாலையில் வீட்டில் விளக்குகள் ஏற்றப்பட்டவுடன் என் புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு பாடங்களைப் படிப்பேன். இரவு எட்டரை மணிக்குச் சாப்பாடு, பிறகு மறுபடி பத்தரை மணிவரை படிப்பு. சிராவண மாதமாயிருந்தால் சிவன் கோயிலுக்குச் செல்வேன். ஜன்மாஷ்டமி, சிவராத்திரி போன்ற தினங்களில் இரவில் சாப்பிட மாட்டேன்.''

இத்தகைய கட்டுப்பாடான இளம் பருவ வாழ்க்கையினுல் பிற்காலத்தில் கடுமையான உழைப்புக்கு அஞ்சாதவராக அவர் மலர்ந்தார். ஆனுல் அவருடைய வேறு சில இளம் பருவத்துப் பழக்கங்கள், ''இவரா பின்னர் அத்தகைய மனிதரானுர்!'' என ஆச்சரியப்பட வைப்பவை. பிற்காலத்தில் தீவிர பகுத்தறிவாளனுக

விளங்கிய அவர், அந்தச் சிறு வயதில் தெய்வ நம்பிக்கை மிகுந்தவ ராக இருந்தார். அவர் பள்ளிக்குச் செல்லும் வழியில் ஒரு காளி கோயில் இருந்தது. ஒவ்வொரு தடவையும் அந்தக் கோயிலைத் தாண்டிச் செல்லுகையில் அவர் காளியின் முன் குனிந்து வணங்கி இவ்வாறு முணுமுணுப்பார்: ''நான் ஒரு பாபி. தாயே, என்னை மன்னித்து எனக்கு அருள்புரிவாய்'' இப்படிக் கூறியபின் படபட வென்று கன்னத்தில் போட்டுக்கொள்வார். ஒரு முறை அவர் இப்படிச் செய்துகொண்டிருந்தபோது அருகே வேறு ஏதோ வேலை யில் ஈடுபட்டிருந்த ஒருவர் அதைப் பார்த்து, ''இன்னும் பலமாக அடித்துக்கொள்'' என்று கேலியாகக் கூறினார். நர்மதாசங்கருக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதன்பின் யாராவது அக்கம் பக்கத்தில் இருக்கிறார்களா என்று முதலில் கவனித்து, யாருமில்லை யென்று நிச்சயப்படுத்திக்கொண்ட பிறகே அவர் கோவிலுக்குள் கன்னத்தில் போட்டுக்கொள்ள ஆரம்பித்தார். முதல் 'ராங்க்'கில் வரவேண்டுமென்பது போன்ற நோக்கங்களுடன் தாம் இவ்வாறு செய்யவில்லையென்றும் எப்படியோ இது தமக்கு ஒரு பழக்கமாகி விட்டதென்றும் நர்மதாசங்கர் பிற்பாடு இதுபற்றிக் கூறினார். ஒருவேளை இன்றைய மனோதத்துவ நிபுணர்களால் இதற்கு விரிவான விளக்கங்கள் தர முடியலாம்.

1850ஆம் வருடம் செப்டம்பரில் அவருக்கு ஏற்பட்ட சில உணர்வுகளும் இன்றைய மனோதத்துவ நிபுணர்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியவை. இக்காலத்தில் தம்மிடம் ஒரு பெரிய மாறுதலைத் தாம் உணர்ந்ததாக நர்மதாசங்கர் கூறுகிறார். கெட்ட சகவாசமேதும் அவருக்கு இல்லாதபோதும், பாலின்பம் பற்றிய நூல்களெதையும் அவர் படிக்காதபோதும், அவர் கண் ணோட்டத்தில் ஒரு நுட்பமான மாறுதல் ஏற்பட்டது. பெண்க ளுடைய ''வாசனை''யைத் தாம் உணரத் தொடங்கினதாக அவர் கூறுகிறார். தம்மைச் சுற்றியிருந்த பெண்கள் பேசுவதை ரகசிய மாக ஒட்டுக்கேட்டு, அதன் மூலம் அவர் கிளர்ச்சி பெற்று வந்தார். காதல் கதைகளை நிறையப் படிக்கத் தொடங்கினார்; பெண்களின் தோழமைக்காக ஏங்கத் தொடங்கினார். இந்த எண்ணங்களிலிருந்து அவரால் விடுபட முடியவில்லை. கூச்ச சுபாவம் காரணமாய் தம் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் முடியவில்லை. தனிமைத் துயர் அவரை வாட்டியது; தம் பிரச்சினைக்குத் தீர்வென்னவென்று புரியாமல் அவர் குழம்பினார்.

இச் சந்தர்ப்பத்தில் நல்ல வேளையாக விதி அவருடைய துணைக்கு வந்தது. அவருடைய தாய் 1850ஆம் வருடம் நவம்பர் 23-ந் தேதி சூரத்தில் மரணமடைந்தார். இது அவருக்கு ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. தன் அறையில் ஜன்னலருகே மணிக்

கணக்கில் அமர்ந்து வெயில் ஏறுவதையும் இறங்குவதையும் வெறித்துப் பார்த்தபடி இருந்தார். இந்நிலே பல நாள் நீடித்தது, உலகத்தைத் துறந்துவிடலாமா எனத் தீவிரமாக யோசித்தார். இக் கருத்தை வலியுறுத்தும் கவிதைகளை அடிக்கடி முணுமுணுத்தபடி இருந்தார். படிப்பில் அவருக்கிருந்த ஆர்வமெல்லாம் மறைந்தது. என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை.

இந்தக் கட்டத்தில் இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. சூரத்தி லிருந்து அவருடைய மாமனுர் கடிதமெழுதினுர். தம்முடைய மகள் பருவமடைந்து விட்டாளென்றும், நர்மதாசங்கர் சூரத் துக்கு வந்து அவளுடன் அங்கே குடித்தனம் செய்யத் தொடங்கலா மென்றும் அவர் எழுதியிருந்தார். ஆனுல் நர்மதாசங்கரின் தந்தையோ, பையன் தன்னுடன் பம்பாயில் வந்து தங்கி அங்கே குடித்தனம் தொடங்க வேண்டுமென்று விரும்பினுர். இத் தருணத் தில் நர்மதாசங்கர் எதிர்பாராதவிதமாகக் காலரா நோயால் பீடிக்கப்பட, அவர் சூரத்திற்கே செல்லும்படி ஆயிற்று. பெண் துணைக்காக ஏங்கிக்கொண்டிருந்த நர்மதாசங்கருக்கு இது ஆறுத லாக இருந்தது. சூரத்திலேயே ஒரு வேலை தேடிக்கொள்ள அவர் நிச்சயித்தார். அவருடைய மூன்று ஆங்கிலேய ஆசிரியர்கள் அவருக்கு மிக உயர்வான சான்றிதழ்கள் அளித்திருந்தனர். இவர் களில் ஒருவர் அவருக்கு சரித்திரமும், இலக்கியமும் போதித்த மிஸ்டர் ஆர். டி. ரீட். அவர் கொடுத்த சான்றிதழ் இவ்வாறிருந்தது:

''எல்ஃபின்ஸ்டோன் நிறுவனத்தின் காலேஜ் பிரிவு மாணவரான நர்மதாசங்கர் லால் சங்கர் சென்ற ஒன்றரை வருடங்களாக என்னிடம் சரித்திரம் மற்றும் ஆங்கில இலக்கியம் கற்று வருகிறுர். அவருடைய உழைப்பையும் திறமையையும் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். அவருடைய சூழலின் பின்னணியில் பார்க்கும்போது ஆங்கில மொழியில் அவர் அடைந்துள்ள தேர்ச்சி பிரமிப்பூட்டுகிறது. புராதன சரித்திரத்திலும் நவீன சரித்திரத்திலும்—குறிப்பாக இந்திய சரித்திரத்தில்—அவர் பெரிதும் முன்னேற்றம் காட்டியுள்ளார். 1849 (1850)ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற தேர்வில் அவர் அவ்வகுப்பிலேயே மூன்ருவதாக வந்தார். 'கிளேர்' அல்லது முதல் வருடத்தின் சிறப்பு மாணவராக தேர்ந் தெடுக்கப்பட்டு யாவருடைய நன்மதிப்புக்கும் பாத்திரமானவ ராயிருந்தார். அவர் பம்பாயை விட்டுப் போகவேண்டி வந்து விட்ட நிர்ப்பந்தம் (சில நாட்களுக்காகத்தான் என்று நம்பு கிறேன்) எனக்கு மிக வருத்தத்தையளிக்கிறது.

மிகவும் திறமையுள்ள மாணுக்கர் அவர் என்பதில் சந்தேக மில்லை. நானறிந்த வரையில் அவருடைய நடத்தை சிறிதும் குறை சொல்ல இடமில்லாததாகவே இருந்து வந்துள்ளது.

எல்ஃபின்ஸ்டோன் நிறுவனம்,
பிப்ரவரி 14, 1851

இந்த முக்கியமான சான்றிதழ்களை எடுத்துக்கொண்டு நர்மதா சங்கர் உடனடியாகத் தாம் பிறந்த ஊரான சூரத்துக்குப் பயணமானுர்.

# III

சூரத்துக்குப் பயணமாகுமுன் நர்மதாசங்கர் பம்பாயில் சோம்பேறியாக இருக்கவில்லை. பாடங்களைக் கருத்தாகப் படித்து வந்ததுடன், நண்பர்கள் சிலருடன் ரசாயனப் பரிசோதனைகளில் ஈடுபட்டு வந்தார். அவருடைய அறைதான் அவர்கள் கூடுமிடமாக இருந்தது. இந்தச் சந்திப்புகள் அவருடைய படிப்பார்வத்தை மேலும் வளர்க்கும் தூண்டுகோல்களாக உதவின. நண்பர்கள் எல்லாருமாகப் பணம் போட்டுப் புத்தகங்கள் வாங்கிதமக்கென ஒரு நூலகத்தை உருவாக்கினர். இதுவும் நர்மதாசங்கரின் அறையில்தான் இருந்தது. இந்த நூலகம் அவர்களுடைய படிக்கும் பழக்கத்தை வளர்த்தது; புதிய யோசனைகளை தோற்றுவித்தது. பிரிட்டிஷாரின் பலத்துக்கும் செல்வாக்குக்கும் காரணம் அவர்களுடைய படிக்கிற பழக்கமும் கனமான பல விஷயங்களைப் பற்றி விரிவாகச் சர்ச்சை செய்கிற பழக்கமும்தான் என நர்மதாசங்கரும் அவருடைய நண்பர்களும் நம்பினர். தாமும் அவ்வாறே செய்ய நிச்சயித்தனர். மாதத்தில் நான்கு முறைகள் கூடி முக்கியமான விஷயங்களைக் குறித்து சர்ச்சை செய்வதென முடிவாயிற்று. இவற்றில் இரண்டு கூட்டங்களில் நண்பர்கள் தாம் எழுதிய கட்டுரைகளைப் படிப்பார்கள். மற்ற இரண்டு கூட்டங்களுக்குப் பொதுமக்களையும் கூப்பிட்டு சமூக சீர்திருத்தங்களின் தேவைபற்றி உரையாற்றுவார்கள். சமூக வாழ்க்கையிலும் பழக்க வழக்கங்களிலும் பிரிட்டிஷார் இந்தியர்களைவிட மேம்பட்டவர்களாக இருந்ததாலேயே அவர்களால் இந்தியர்களை அடக்கியாள முடிந்ததென நம் இளம் நண்பர்கள் கருதினர். மேலும் சமூக சீர்திருத்தங்கள் பற்றி அக்காலத்தில் எங்குமே பேசப்பட்டு வந்தது.

தமது திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு நான்கு நண்பர்களும் சங்கமொன்று நிறுவி அதற்கு ''யுவன் புருஷோனி அன்னியோந்நிய புத்திவர்த்தக சபா'' என்று பெயரிட்டனர். ''அறிவை நாடும் இளைஞர்களின் பரஸ்பர உதவிச் சங்கம்'' என்பதாக இதனை மொழிபெயர்க்கலாம். இச்சங்கத்தின் முதல் தலைவராக நர்மதாசங்கர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இச்சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டத்தில் நர்மதாசங்கர் நிகழ்த்திய உரையே அவருடைய முதலாவது மேடைப்

பேச்சு. பூலேஷ்வர் என்னும் இடத்தினருகிலிருந்த ஒரு ஹால் சில நண்பர்களின் உதவியால் அவர்களுக்கு இலவசமாகக் கிடைத்தது. சுமார் நூறு பேர்கள் உட்காரக்கூடிய ஹால் அது. இளம் நர்மதா சங்கர் இந்த நூறு பேர்கள் முன்னிலையில், 'சங்கம் அமைப்பதன் அனுகூலங்கள்' என்ற பொருள் பற்றிப் பேசினார். இந்தப் பேச்சுக்குப் பெரும் வரவேற்பு இருந்தது. அதை அப்படியே எழுதி வைத்துக்கொண்டு, அதே ஆண்டு ஜூலை மாதத்தில் சூரத் நகரில் மறுமுறை அதே பேச்சைப் பேசினார். பின்னர் அந்தப் பேச்சை மட்டும் தனியே புத்தகமாகவும் வெளியிட்டார். அவருடைய எழுத்து அச்சேறியது அதுவே முதல் தடவை. அது மட்டுமல்ல, குஜராத்தி மொழியிலேயே முதலாவது குறிப்பிடத்தக்க வசனப் படைப்பாகவும் அது அமைந்தது. குஜராத்தி மொழியின் வசன இலக்கிய முன்னோடியாகத் தாம் விளங்கப் போகிறோமென்று அவருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

இதையடுத்து மூன்றாண்டுகளுக்கு அவர் சூரத்திலேயே இருந்த போதிலும் (1851ஆம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் 1854ஆம் வருடம் ஜனவரி மாதம் வரை) குறிப்பிடத்தக்கதாக வேறெதுவும் செய்ததாகத் தெரியவில்லை. முதலில் அவருக்குப் பள்ளிக்கூட ஆசிரியர் வேலை கிடைப்பதுகூடச் சிரமமாக இருந்தது. சில நாட்களுக்கு இஷ்டம்போலச் சுற்றிலைந்து திரிந்தார். அவருடைய தந்தை வேறு பம்பாயில் இருந்தார்; இவருக்கோ வேலையில்லை. இந்நிலையில் பெண்கள் தொடர்பான ஆசைகள் அவர் மனதை மிகவும் அலைக்கழித்தன. அதிர்ஷ்டவசமாக இக்கட்டத்தில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த கௌரவமான பெண்மணி ஒருத்தியுடன் அவருக்குச் சிநேகம் ஏற்பட்டது. மனைவியும் சூரத்திலேயே இருந்தாள்தான். இருந்தாலும் இத்தகைய பிற ஸ்திரீகளின் சிநேகம் அப்போதும் சரி, பிற்காலத்திலும் சரி, அவருடைய வாழ்க்கையின் ஒரு அம்சமாக விளங்கியது. மனதைத் திருப்புவதற்காக, தன்னையொத்த ருசிகள் உள்ள சிலர் அடங்கிய சங்கமொன்றை அவர் அமைத்தார். சங்கத்தின் அங்கத்தினர்கள் தமது கருத்துக்களை அச்சு வாயிலாகப் பரிமாறிக்கொள்ள வசதியிருந்தால் நன்றாயிருக்குமென்று பட்டது. எல்லாரும் கூட்டாகச் சேர்ந்து ஒரு அச்சகத்தை வாங்கினர். அவர்களுடைய சங்கத்துக்கு ''ஸ்வதேஷ்—ஹிதேச்சு'' (நாட்டின் நலம் விரும்புவோர்) என்று பெயரிட்டனர். அவர்கள் பிரசுரித்து வந்த வாரப் பத்திரிகையின் பெயர் ''ஞான ஸாகர்'' (அறிவுக் கடல்). பம்பாயில் அமைக்கப்பட்ட சங்கத்தைப்போல இந்தச் சங்கத்திலும் அங்கத்தினர்கள் சொற்பொழிவு நிகழ்த்தும் நடைமுறை இருந்து வந்தது. தாம் பம்பாயில் நிகழ்த்திய உரையை அவர் எழுதி வைத்திருந்தார். அதை

மீண்டும் இங்கே வாசித்தார். ஆனல் ஓராண்டுக்குள் இந்த இளைஞர் குழுவின் உற்சாகம் குன்றிப் போயிற்று. அவர்களுடைய சங்கம், அவர்கள் நடத்திய வாரப் பத்திரிகை இரண்டுமே மூடப் பட்டன.

1852ஆம் ஆண்டு அவருக்கு ஒரு சாதாரண வேலை கிடைத்தது; சூரத் அருகேயிருந்த ராண்தேர் என்னும் ஊரில் பள்ளி ஆசிரியர் உத்தியோகம். சில காலத்துக்கு சூரத்திலிருந்து ராண்தேருக்குப் படகில் சென்று வருவதும் பள்ளியில் வேலையில்லாத போது கடலில் நீராடுவதும் அவருக்கு மகிழ்வூட்டி வந்தன. மனமிருக்கும்போது அவர் நன்ருகவே பாடங்களைப் போதித்து வந்தார். ஒருமுறை தர்மசங்கடமான நிலையொன்று ஏற்பட்டது. ஒருநாள் அதிகாலை நேரத்தில் அவர் சுகமாக இளைப்பாறிக்கொண்டிருந்தபோது திடீரென்று கல்வி இலாகாவின் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கிரஹாம் வந்து சேர்ந்தார். ஆசிரியர் தம் இருக்கையில் இல்லை; மாணவர்களோ இங்குமங்கும் ஓடி அமர்க்களம் செய்து கொண்டிருக்கின்றனர். இன்ஸ்பெக்டர் வகுப்புக்கு வெளியே நின்றிருந்த நர்மதாசங்கரைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தார். அவரைப் பார்க்கும்போதே அப்போதுதான் தூங்கியெழுந்து வந்திருந்தாரென்று தெளிவாகத் தெரிந்தது. இரவு வெகு நேரம் கண்விழித்து வேலை செய்துகொண்டிருந்ததாகவும் அதனல் காலையில் எழுந்திருக்கத் தாமதமாகிவிட்டதாகவும் நர்மதாசங்கர் மன்னிப்புக்கோரும் குரலில் கூறினர். மேற்கொண்டு அவரை எதுவும்கேளாமல் இன்ஸ்பெக்டர் மாணவர்களைக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். எல்லாக் கேள்விகளுக்கும் அவர்கள் சரியாகப் பதிலளித்தனர். இன்ஸ்பெக்டர் திருப்தியுற்று ஆசிரியரைப் பாராட்டினர். மாணவர்களிடம், இத்தகைய நல்ல ஆசிரியரைப் பெறுவதற்கு நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று கூறினர்.

ஆனல் நர்மதாசங்கருக்கு இந்த வாழ்க்கை சில நாட்களில் அலுத்துப் போயிற்று. நகர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டிருந்த அவருக்கு அந்தப் பட்டிக்காடு வெறுப்பையளித்தது. சூரத்துக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு அங்கு அதே வேலையைச் செய்யத் தொடங்கினர். ஆனல் அந்த வேலையும் அவருக்கு அலுத்து விட்டிருந்தது. துடிப்பும் சுறுசுறுப்பும் மிக்க இளைஞரான அவருக்கு பள்ளி ஆசிரியர் வேலை மனநிறைவு தரமுடியவில்லை. அதைவிடப் பெரிய வேலைகளுக்காக அவர் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதற்கிடையில் அவருடைய மனைவி மகப்பேற்றின்போது திடீரென இறந்து போனள். அவளுக்கு அப்போது பதினேழு வயதே ஆகியிருந்தது. பிறந்த குழந்தையும் உயிருடன் இல்லை.

இந்த நிகழ்ச்சி நர்மதாசங்கர் சூரத்தைவிட்டுச் செல்வதற்கு இன்ஞெரு காரணமாக அமைந்தது. சில நாள் தீவிர சிந்தனேக்கும் பயனற்ற கடிதப் போக்குவரத்துக்கும் பிறகு, இறுதியாக 1854ஆம் வருடம் ஜனவரி மாதம் 2-ந் தேதி அவர் தமது வேலேயை ராஜிஞமாச் செய்தார். அடுத்த நாளே படகு மூலம் பம்பாய்க்குப் பயணமானுர்.

சூரத்தில் அவர் கழித்த நாட்களே அவர் இவ்வாறு விவரிக்கிருர்: ''1851ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி முதல் 1854ஆம் வருடம் ஜனவரி மாதம் 2-ந் தேதி வரையில் நான் குஜராத்தியிலோ ஆங்கிலத்திலோ ஒரு சின்னப் புத்தகம் கூடப் படிக்கவில்லே. ஹார்க்னஸ் என்பவருக்கு ஒரே ஒரு கடிதம் ஆங்கிலத்தில் எழுதினேன், அவ்வளவே. 'ஞான ஸாகர்' பத்திரிகைக்காகக் கூட நான் எதுவும் எழுதவில்லே. தௌலத்ராம்தான் எழுதி வந்தார். கஞ்சா, அபின் ஆகியவற்றை உட்கொண்டு பெண்களிடையில் பெரிய பிரபுவின் தோரணேயில் நான் உலவி வந்தேன். தனியாக இருக்கும்போது புகழடைவது எப்படி (பணம் அல்ல), காதலிகளேப் பெறுவது எப்படி என்றெல்லாம் யோசித்தவாறு என் பொழுதைக் கழிப்பேன். அந்தச் சமயத்தில் சமூக சீர்திருத்தங்களேப்பற்றி நான் சிறிதும் கவலேப்படவில்லே; அவற்றை எவ்வாறு அமுல்படுத்துவதென்பது பற்றி எனக்கு எவ்வித யோசனேயும் இருக்கவில்லே.''

முழுக்க முழுக்கத் தன் சிநேகிதர்கள் வட்டத்தில்தான் அவர் மூழ்கிக் கிடந்தார், அந்தக் காலத்தில். அந்தக் காலகட்டத்தில் சூரத்துக்கு விஜயம் செய்த பிரபல கவிஞர் தல்பத்ராமின் கூட்டங்களுக்கு அவர் சென்றபோதிலும், அவர் சொன்ன கவிதைகளில் அதிக கவனம் செலுத்தவில்லே. நண்பர்களுடன் பொழுதைக் கழிக்கும் ஓர் உபாயமாகவே அவருக்கு அந்தக் கூட்டங்கள் இருந்தன. அக்காலத்தில் கவிஞர்கள் அபூர்வம்; எனவே அத்தகைய ஒரு அபூர்வப் பிறவியின் தரிசனத்துக்காகத்தான் நர்மதாசங்கர் சென்ருர். மேலும் கவி அரங்கம் ஒன்றில் இளம் கவி ஒருவருக்கு அவையினர் புகழாரம் சூட்ட முற்படுகையில், திடீரென அது நடைபெற வொட்டாமல் தல்பத்ராம் தன் சொந்தக் கவிதையொன்றைப் பாடத் தொடங்கிஞர். இந்த நிகழ்ச்சி நர்மதாசங்கரின் மனதில் தல்பத்ராமின்பால் வெறுப்பைத் தோற்றுவித்தது. இந்த வெறுப்பு இறுதி வரை நீடித்தது.

பம்பாய்க்குத் திரும்பியபோது நர்மதாசங்கருக்கு வயது இருபத்தொன்று. இன்னமும் அவர் வாழ்க்கையில் நிலேபெறவில்லே. இலக்கியத்தின்பாலும் சமூக சீர்திருத்தங்களின்பாலும் அவருக்கு ஈடுபாடு இருந்தபோதிலும் இரு துறைகளிலுமே அவர்

இன்னமும் தீவிரமாக இறங்கவில்லை. நிறைய விஷயங்களைக் கற்க வேண்டும், ஒவ்வொன்றைப் பற்றியும் ஆழ்ந்த அறிவு பெற வேண்டும், என்ற தாகம் நிரம்ப இருந்தது. இந்த நோக்கம் ஈடேற பம்பாய் நகரமே ஏற்ற இடமாதலால் அவர் பம்பாய்க்குக் கிளம்பி வந்திருந்தார்.



Indian I... ...dance
117395

## IV

1854ஆம் வருடம் ஜனவரி மாதம் நர்மதாசங்கர் பம்பாயில் வந்து இறங்கினுர். வேலேயோ ஊதியத்துக்கான மார்க்கமோ எதுவுமில்லே. ஆனுல் அவருடைய தந்தை இருந்தார், மகனுக்கு எல்லாவித உதவிகளேயும் செய்ய அவர் தயாராக இருந்தார். ஜீவ ராஜ் பாலு என்னும் செல்வந்தரிடம் அவர் நர்மதாசங்கரை அனுப்பி வைத்தார். ஜீவராஜ் பாலு மிகவும் தயாள குணம் படைத்தவர். அவர் நர்மதாசங்கரைத் தம் மகனுக்கு ஆங்கிலம் கற்றுத் தருமாறு பணித்து, மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் தருவதாகக் கூறினுர். காலே பதினெரு மணி முதல் மாலே நான்கு மணி வரையில் நர்மதாசங்கர் அந்தச் சிறுவனுடன் கழிக்க வேண்டும். வேலே சுவாரஸ்யமானதுதான், ஆனுல் அந்தச் சிறுவ னுக்குப் படிக்கும் உத்தேசம் சிறிதும் இருக்கவில்லே. நர்மதா சங்கர் அந்தப் பையனுடன் மல்லுக்கு நின்று அலுத்துப் போய் ஐந்தே மாதங்களில் அந்த வேலேயை உதறிவிட்டு வந்தார். தன்னுல் சரிவர நிறைவேற்றமுடியாத ஒரு பணிக்காக ஊதியம் பெறுவது அவருக்குப் பிடிக்கவில்லே. அடுத்து தானே ஒரு மாணுக் கஞக மாறினுர். ஒரு பண்டிதரிடம் சம்ஸ்கிருதம் கற்றுக் கொள்ளத் தொடங்கினுர். சில மாதங்களுக்குப்பின் இதற்கும் முற்றுப்புள்ளியிட்டார்.

இதெல்லாம் ஐந்து மாதக் கதை. இந்த மாதங்களில் உடலுக்கு அதிகம் வேலேயில்லே, ஆனுல் மூளே எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி வந்தது. இடைவிடாத சிந்தனேயோட்டம். அவருடைய வார்த்தைகளில்:

''ஒரு பக்கம் என்னுடைய கல்வி மற்றும் பதவியின் மூலம் நான் புகழடையப் போகும் நாளே எதிர்பார்த்திருந்தேன்—சட்டம் படித்து பாரிஸ்டர் பரீட்சையெழுத விரும்பினேன்; ஒரு கிராம முன்சீப் ஆகி மக்களுடைய பயபக்திக்கு ஆளாக விரும்பினேன்; ஸர் வில்லியம் ஜேம்ஸ் போல ஒரு மொழியியல் வல்லுனஞகி சம்ஸ் கிருதம், பாரசீகம், ஆங்கிலம், உருது, இந்தி, மராத்தி முதலிய பல மொழிகளில் தேர்ச்சி பெற விரும்பினேன்; மீண்டும் கல்லூரிக்குச் செல்ல விரும்பினேன், ஆங்கிலேயருக்கு டியூஷன் சொல்லிக்கொடுப்பவஞகி சுதந்திரமான வாழ்க்கை நடத்த அதை ஒரு வாய்ப்பாக்கிக்கொள்ள விரும்பினேன். கூடவே சூரத்தில் நான் தழுவியிருந்த நடத்தை, பழக்கவழக்கங்கள் ஆகியவை

குறித்த பச்சாதாபமும் என் உள்ளத்தில் நிறைந்திருந்தது. அவை பாபகரமானவையென நான் உணரத் தொடங்கியிருந்தேன். நான் நவமுன செயல்களைச் சந்தேகப்பட்டவற்றை வேறு யாரோ செய்ததைப்போல என் அப்பாவிடம் விவரித்து, அவை கண்டிக்கத் தக்க குற்றங்கள்தாமா, என அவரிடம் கேட்பேன். உலகாயத நோக்கில் அவை குற்றங்களே என என் தந்தை கூறி, ஆனால் ஒருவன் உண்மையிலேயே அவை குறித்துப் பச்சாதாபம் கொண்டால் அந்தப் பாபங்கள் கழுவப்பட்டுவிடுமென்பார். நான் சூரத்திலிருந்த என் அன்புக்குரியவர்களை விட்டுப் பிரிந்து அவர்களிடமிருந்து வெகு தொலைவில் வந்துவிட்டிருந்தேன். இந்தப் பிரிவும் எனக்கு வேதனையளித்தது. உலக வாழ்க்கையின் அர்த்தமின்மை, பொருளீட்டுவதன் பயனில்லாமை, துறவு, ஆகியன தொடர்பான எண்ணங்கள் என் மனதைத் தீவிரமாக ஆட்கொண்டிருந்தன. இந்த மனநிலையில் நான் பலமுறை என் தந்தையிடம், 'நம் இருவருடைய மனைவியரும் இறந்துவிட்டனர். இனி நாம் ஏன் உயிருடனிருக்கவேண்டும்? தூரத்தில் எங்காவது கிராமத்துக்குச் சென்று எளிய வாழ்க்கை வாழுவோம். அறிவை மென்மேலும் வளர்த்துக்கொள்வோம். இந்தத் தேடல் தரும் இன்பத்தில் நம்மை ஆழ்த்திக்கொள்வோம். நதிக்கரையிலோ ஏரிக்கரையிலோ அமர்ந்து அமைதியாக நாட்களைக் கழிப்போம்' என்று கூறி வரலானேன்.

இந்த மனநிலையில் நர்மதாசங்கர் ஒருமுறை 'சுதேசி புத்தகக் கழகம்' என்னும் வாசகசாலையில் அமர்ந்திருந்தார். அங்கு புத்தகப் பரிமாற்றத்துக்காக சிவப்பாக ஒரு இளைஞன் வந்திருந்தான். அவனுக்கும் அவருக்குமிடையில் எப்படியோ பேச்சுத் தொடங்கியது. அந்த இளைஞனின் பெயர் ஜவேரிலால் உமியா சங்கர். அவன் நர்மதாசங்கருக்கு, மீண்டும் கல்லூரியில் சேரும்படி ஆலோசனை கூறினான். தானும் கல்லூரியில் சேர இருப்பதாகச் சொன்னான். இந்த யோசனை அவருக்குச் சரியாகப்பட்டது. அவர் உடனே கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரி வாழ்க்கை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. நடுவில் சொந்தக் காரணங்களால் இரண்டு மாதங்களுக்குப் படிப்பை நிறுத்தி வைக்க வேண்டி வந்த போதும், அதையும் மீறிக் கடுமையாக உழைத்து வருடாந்திரப் பரீட்சையில் 'வெஸ்ட் ஸ்காலர்ஷிப்' என்னும் மாதம் பதினைந்து ரூபாய் உதவி நிதி பெற்றார்.

ஆனாலும் அவருடைய மனம் படிப்பில் முழுமையாக ஈடுபடவில்லை. அந்நாளில் தனக்கு கணிதம் கற்பித்த தாதாபாய் நௌரோஜியை மட்டுமே அவரால் பின்னர் நினைவுகூர முடிந்தது. நர்மதாசங்கருடைய ஆங்கிலப் புலமையை நௌரோஜி பாராட்டி

ளுராம். நர்மதாசங்கர் ஐம்பப் பேச்சுகளில்தான் அதிக நேரத்தைச் செலவிட்டு வந்தாரென்பதும் உண்மை. தான் இங்கிலாந்து செல்லப் போவதாகவும் பெரிய மனிதனுகப் போவதாகவும்—இப்படிப் பீற்றிக்கொண்டேயிருப்பார். இந்த மனநிலையில் தமது ஆசிரியர்கள் என்ன சொல்கிறுர்கள் என்பதைப் பெரும்பாலான நேரங்களில் அவர் கவனிக்கவில்லே. இத்தகைய ஐம்பங்கள் காரண மாகவும் எப்போதும் கவலேயற்ற குஷால் பேர்வழியாக அவர் தென்பட்டதாலும் ஐவேரிலாலும் பிற நண்பர்களும் அவரை ''லாலாஜி'' என அழைத்தனர்.

இவ்வாறு படிப்பில் பொதுவாக அவர் அசிரத்தை காட்டி வந்தாலும் கவிதை வகுப்பில் மட்டும் அவர் மிகவும் உற்சாகமாக அதில் ஈடுபடுவார். ஃபால்க்னரின் ''கப்பல் விபத்து'' என்ற கவிதை அவரை மிகவும் கவர்ந்த ஒன்று. வோர்ட்ஸ்வர்த் எழுதிய சில கவிதைகளும் அவரை மிகவும் கவர்ந்தன. இக்கவிதைகளி லிருந்த இயற்கைக் காட்சி வர்ணனேகள் அவரை ஈர்த்தன. ''கப்பல் விபத்து'' என்ற கவிதையில் கப்பல் ஊழியர்களின் தீரமும் அவருக்கு உற்சாகமளித்தது. இதனுல் தூண்டப்பட்டு அவர் தாமே ஆங்கிலத்தில் நூறு வரிகளுள்ள ஒரு கவிதை எழுதி அதை ப்ரொபசர் ரீடிடம் காண்பித்தார். ரீட் அதைப் படித்து உரக்கச் சிரித்து ''இனி நீ ஆங்கிலத்தில் கவிதையெழுத முயல வேண்டாம்'' என்றுர்.

ஆனுல் விதை ஊன்றப்பட்டுவிட்டிருந்தது. அதே வருடம் செப்டம்பர் மாதத்தில் தீரா பகத் என்ற பிரபல குஜராத்திக் கவிஞரின் ஆன்மீக உணர்வு மிளிரும் கவிதைகளே அவர் படிக்க நேர்ந்தது. இந்தக் கவிதைகள் அவர் உள்ளத்தை அப்படியே கொள்ளே கொண்டு விட, போகுமிடங்களிலெல்லாம், பொருத்த மிருக்கிறதோ இல்லேயோ, இக்கவிதைகளேக் கூறி வரத் தொடங்கி ஞர். அச்சமயத்தில் அவருடைய மனதை ஆக்கிரமித்திருந்த துறவு உணர்வுகளே அக்கவிதைகளின் அடிச்சரடாகவும் அமைந் திருந்தன. தாமே அந்தப் பாணியில் சில கவிதைகளே அவர் புனேந்து பார்த்தார். இம் முயற்சி மனதுக்கு மிகவும் இதம் தருவ தாக இருந்ததை உணர்ந்தார். இந்த இதம் அச்சமயத்தில் அவ ருக்குத் தேவையாகத்தான் இருந்தது. அவர் முன்பு செய்ய விரும்பிய காரியங்கள்—படித்தல், பணம் சம்பாதித்தல், மனேவி யைப் பெறுதல்—அவருக்கு மகிழ்வூட்டின; எனவே அவை மதிப் புள்ளவையாயிருந்தன. கவி புனேதலும் அதேபோல இப்போது மகிழ்வூட்டியது. எனவே தான், 'அதை ஏன் தொடர்ந்து செய்தவாறிருக்கக்கூடாது? ஆம், இதை மட்டுமே தான் செய்ய வேண்டும், கேவலம் ஒரு பிடி நெல்லுக்காகக் கவலேப்படக்கூடாது,

அதை எப்படியாவது சம்பாதித்துக் கொள்ளலாம்.' இவ்வாறு அவர் கவிஞரானூர். இது அவருக்குப் பெயரும் புகழும் ஈட்டித் தந்தது. அவருடைய வாழ்வின் கதியையே அது மாற்றிவிட்டது.

முதல் கவிதையை எழுதிய நாள் அவருக்குச் சரியாக நினைவில்லை. ஆனல் தமக்கு இருபத்திமூன்ருவது வயது நிறைந்த நாளை (1855ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 21ந் தேதி) தாம் கவிதையெழுதத் தொடங்கிய நாளாகக் கொண்டாட அவர் முடிவு செய்தார்.

அநேகமாகத் தினந்தோறும் ஏதாவது கவிதை புனையத் தொடங்கினர் அவர்.

முழுக் கவனத்தையும் பாடங்களில் செலுத்தாமல் தன் நேரத்தின் பெரும்பகுதியை அவர் கவி பாடுவதில் செலவிட்டு வந்ததால் வருடாந்திரப் பரீட்சையில் அவர் விரும்பியவாறு உபகாரச் சம்பளத்துக்குரிய மதிப்பெண்களைப் பெறமுடியாமல் போயிற்று. தனித்த சாதனை ஏதுமின்றி, வெறுமனே பரீட்சையில் தேறினர், அவ்வளவுதான்.

அவருடைய போக்கில் வேறு சில மாற்றங்களும் ஏற்பட்டன. முன்பே அவர் தொடர்பு கொண்டிருந்த இளைஞர்களின் சங்கத்தில் மீண்டும் சேர்ந்து அதன் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டார். இப்போது அச்சங்கத்தின் பெயர் ''புத்திவர்த்தக சபை'' என்பதாக மட்டும் இருந்தது. அங்கு அவர் உரைகள் நிகழ்த்தியதுடன் தம் கவிதைகளையும் வாசித்தார். அவையோர் கவிதை நுணுக்கங்களை அறிந்தவரல்லர், அவரை ஒரு கவியாக அறிந்தவருமல்லர். எனினும் அவருடைய கவிதைகளுக்கு அவர்கள் உற்சாகமான முறையில் வரவேற்பளித்தனர். அச் சமயத்தில் பம்பாயிலிருந்த யாருக்கும் குஜராத்தியில் கவிதை புனையும் முறைகள் பற்றி ஏதும் தெரியாமலிருந்ததும் இதற்கு ஒரு காரணம். குஜராத்தின் இதர பகுதிகளில் அப்போது மிகவும் பிரபலமாக விளங்கிய கவிஞர் தல்பத்ராமைப் பற்றிக்கூட பம்பாயில் யாரும் கேள்விப்பட்டிருக்கவில்லை. தல்பத்ராம் மற்றும் இதர குஜராத்திக் கவிஞர்களின் படைப்புகளை ஊன்றிப் படித்து, அவர்களுடைய கவிதைகளின் பாணியிலேயே தம் கவிதைகளை இயற்றியிருந்தார் நர்மதாசங்கர். இவ்வாறு அவர்களுடைய பாணியைத் தாம் நகல் செய்திருந்தது உள்ளூர அவரை உறுத்தியது; அதே சமயத்தில் பம்பாய் மக்கள் தமது அறியாமை காரணமாக, அவர் முற்றிலும் புதிய சாதனையொன்று நிகழ்த்திவிட்டதாக மயங்கி அவரைப் பாராட்டியதும் அவருக்குக் கசக்கவில்லை. மகிழ்ச்சித் ததும்ப அப்பாராட்டுகளை ஏற்றுக்கொண்டார்.

ஆனால் அவர் மனம் அமைதியற்று இருந்தது. யாப்பிலக்கணம் அறியாத இந்த மூட ரசிகர்களை வேண்டுமானால் அவர் ஏமாற்ற லாம்; ஆனால் உண்மையிலேயே அவர் ஒரு சிறந்த கவிஞராக மலர விரும்பினால் யாப்பு விதிகளை அவர் முறையாகக் கற்க வேண்டி யிருக்கும். மாதப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த ஒரு கட்டுரை யின் மூலம், குஜராத்தியில் யாப்பிலக்கணம் குறித்த நூலின் பெயர் 'பிங்கள சாஸ்திரம்' என அவர் அறிந்தார். இந்த சாஸ்திரத்தின் பிரதி எங்கேயாவது கிடைக்குமாவென்று தேடலானார்.

பம்பாயில் எங்கும் அது கிடைக்கவில்லை. என்ன செய்வது? சம்ஸ்கிருதம் அல்லது பிராகிருத மொழிகளில் இப்பொருள் பற்றி ஏதாவது புத்தகங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கலாமா? ஆனால் இந்த மொழிகளிலும் பம்பாயில் எதுவும் கிடைக்கவில்லை. இனி? கவிஞர் தல்பத்ராமுக்கு எழுதிக் கேட்கலாமா? இல்லை, வேண்டாம். சூரத்தில் ஒரு இளங்கவிஞருக்குப் பாராட்டுக் கிடைக்கத் தொடங்கியத் தருணத்தில் தல்பத்ராம் மேடையைக் கைப்பற்றிய நிகழ்ச்சி அவருக்கு நினைவு வந்தது. ஏன், அந்த இளங் கவிஞருக்கே எழுதிக் கேட்டாலென்ன? அவர் இப்போது மேலும் முதிர்ச்சி பெற்ற ஒரு கவிஞராக வளர்ந்திருக்கலாம். மன்மோகன் தாஸ் ரஞ்சோதாஸ் என்ற அக்கவிஞருக்கு பணிவும் மரியாதையும் தொனிக்கும் கடிதமொன்று எழுதினார் அவர். யாப்பிலக்கணம் பற்றிய சில நூல்களைத் தமக்கு சிபாரிசு செய்யும்படியும், கவித் துறையில் நுழைந்துள்ள தமக்கு யோசனைகள் வழங்கும்படியும் அவர் அக்கடிதத்தில் கேட்டிருந்தார். தம்முடைய சில கவிதை களையும் அக்கடிதத்துடன் அனுப்பி, அவற்றைத் திருத்தியனுப்பு மாறும் அவை பற்றிய கருத்துகளை எழுதியனுப்புமாறும் கோரி யிருந்தார்.

நர்மதாசங்கர் பதில் வருமென்று மிக ஆவலுடன் காத்திருந் தார். ஆனால் எத்தகைய பதிலும் வரவில்லை. அவருக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. ஆனால் ''ச்ருத போதா'' என்னும் சம்ஸ் கிருத நூலை நண்பர் ஒருவர் மூலமாகப் பெறமுடிந்தது. அவருக் குச் சற்றே ஆறுதல் அளித்தது. மராட்டிய பண்டிதர் ஒருவரின் உதவியால் இந்நூலை அவர் படித்துப் புரிந்துகொண்டார். சமஸ் கிருதச் செய்யுள் வடிவங்கள் பற்றி அறிய இந்நூல் உதவியது. ஆனால் குஜராத்திக் கவிதைகளுக்குரிய 'தேசி மாத்ரா' என்னும் யாப்பு முறை பற்றி அந்நூலிலிருந்து தெரிந்துகொள்ள முடிய வில்லை. அவர் சில நாட்களுக்கு 'தேசி மாத்ரா'வில் கவிதை இயற்றுவதை நிறுத்தி, சம்ஸ்கிருத யாப்பு முறையை ஒட்டியே கவிதைகள் புனைந்து வரலானார்.

தக்கதொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார் அவர். தனது இரண்டாம் திருமணத்தை முன்னிட்டு அவர் விரைவிலேயே சூரத்துக்குச் செல்லவேண்டியிருந்தது. அங்கு நிச்சயம் பிங்கள சாஸ்திரம் பற்றிய நூல் ஏதாவது கைக்கு வருமென்று அவர் நம்பினார். அதன் மூலம் மரபுவழிக் கவிதை பாடுவதில் அவர் புலமையும் தேர்ச்சியும் பெற்றுத் திகழலாம்.

# V

1856ஆம் வருடம் மே மாதத்தில் அவர் சூரத்துக்குச் சென்ருர். அங்கு தஹிகௌரி என்னும் பெண்ணுடன் அவருக்கு இரண்டாம் கல்யாணம் நடந்தது. கல்யாணத்திலும், கல்யாணச் சடங்குகளிலும் அவர் வேண்டிய சில சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தம் தந்தையாருடனும் இதர உறவினர்களுடனும் சச்சரவுகளில் அவர் மும்முரமாயிருந்துவிட்டபடியால் அங்கு புத்தகங்களைத் தேட அவருக்கு அவகாசம் கிடைக்காமல் போயிற்று. திருமணமான கையுடன் அவர் பம்பாய் திரும்பினுர். அவருடைய கல்லூரியும் படிப்பும் அவருக்காகக் காத்திருந்தன. ஆனுல் மீண்டும் கல்லூரிக்குச் செல்லத் தொடங்கியபோதுதான் தமக்குப் படிப்பில் சிரத்தையேயில்லாமல் போய்விட்டதை அவர் உணர்ந்தார். கவிதைகள் இயற்றுவதிலும், சம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் எழுதிப் பெரும்புகழ் பெறுவதிலும்தான் இப்போது அவருடைய நாட்டமெல்லாம் இருந்தது. மேலும் தான் இப்போது வயது வந்த வாலிபனுகி விட்டபடியால் ஏதாவது வேலையை ஏற்றுக்கொண்டு குடும்ப பாரத்தைச் சுமப்பதில் தந்தைக்கு உதவி செய்வதே ஏற்புடையதாக இருக்குமென்றும், கல்லூரியில் தமது நேரத்தை வீணடிப்பது அழகல்லவென்றும் அவர் எண்ணினுர். அவருடைய தந்தையும் ஏதாவது வேலையை ஏற்றுக்கொள்ளும்படி அவரை வற்புறுத்தி வந்தார். ஓய்வு நேரத்தில் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் கற்றுக்கொள்ளலாமென்றும் கவிதைகள் எழுதலாமென்றும் கூறிவந்தார். இத்தகையதோர் பின்னணியில் அவர் தம் கல்லூரி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க நிச்சயித்தார். பெருத்த குழப்பத்துக்கும் தயக்கத்துக்கும் பிறகே அவர் இவ்வாறு முடிவு செய்தார். அவருடைய பிரின்ஸிபால் ஹார்க்னெஸ் அவருக்கு அருமையான நற்சான்றிதழ் ஒன்று வழங்கினுர்.

அந்த நற்சான்றிதழின் துணையுடன் அவர் வேலை தேடுவதில் முனைந்தார். அவர் கல்லூரியில் இருந்தபோதே கச் மகாராஜா பிரின்ஸிபால் ஹார்க்னெஸ்ஸுக்கு எழுதிய கடிதமொன்றில் தமக்கு ஆங்கிலம் போதிக்கக்கூடிய ஒரு நல்ல ஆசிரியர் தேவையென்று குறிப்பிட்டிருந்தார். அவர் தெரிவு செய்த சம்பளமும்—நூறு ரூபாய்—கௌரவமானதாகவே இருந்தது. ஹார்க்னெஸ் அந்த வேலைக்கு நர்மதாசங்கரையே சிபாரிசு செய்தார். ஆனுல் மகாராஜாவுக்கு 'நாகர் பிராம்மண' வகுப்பைச் சேர்ந்தவர்க

ளென்றால் பிடிக்காது. எனவே நர்மதாசங்கருக்கு அவ்வேலை தரப் படவில்லை. யாப்பிலக்கணம் பற்றிய சில நூல்கள் கச்சில் இருப்ப தாகக் கேள்விப்பட்டிருந்த நர்மதாசங்கர் அங்கு செல்ல மிகவும் ஆவலுடன் இருந்தார். அங்கு சென்று மகாராஜாவுக்கும் கவி புனைவதில் ஆர்வமேற்படுத்தினால் அங்கு தம் வேலையை நிரந்தரப் படுத்திக்கொள்ளலாம், பிறகு அங்கு ஒரு கவிஞர் என்ற ஹோதா வுடன் நிம்மதியாக நாட்களைக் கழித்து வரலாம்—என்றெல்லாம் மனக்கோட்டை கட்டியிருந்தார். ஆனால் பாவம்! இந்த ஆசை கள் நிறைவேறாமல் போயின. இதன் பிறகு இன்னொரு வேலைக் காக அவர் முயன்றார். ஆனால் அதிலும் தோல்வியே.

வேலை கிடைக்காததால் அவர் சோம்பேறியாகி விடவில்லை. அவர் தொடர்ந்து கவிதைகள் புனைந்து வந்தார்; அந்தணர் ஒருவரிடமிருந்து சம்ஸ்கிருதம் கற்கவும் தொடங்கினார். 'விருத்த ரத்னகர' என்ற நூலை முழுவதும் படித்து முடித்தார். ரகுவம்சத் தின் சில ஸர்க்கங்களையும் படித்தார். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் தினசரியில் ஒரு விளம்பரம் கண்டார். 'கோஸ்வாமி' பிரிவைச் சேர்ந்த வைணவப் பூசாரிகளின் வம்சாவளி மற்றும் வர லாறு பற்றிய சிறந்த கட்டுரை எழுதுபவருக்கு நூறு ரூபாய் பரிசு அளிக்கப்படுமென்று அவ்விளம்பரம் அறிவித்தது. நர்மதாசங்கர் அப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பினார். நல்லறிஞரும், ஒரு பெரிய கோவிலின் வைணவ பீடத்தை அலங்கரித்தவருடன் தொடர்பு கொண்டிருந்தவருமான சாஸ்திரி வைஜ்நாத் என்பவ ரிடம் இதுபற்றிச் சில புத்தகங்களை வாங்கலாமென்று அவர் சென் றார். அக்கோவிலில் அப்புத்தகங்கள் இருந்தனதான்; ஆனால் அவற்றைக் கோவிலுக்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதிப் பதற்கு அவருக்கு உரிமையில்லை. எனவே அவர் நர்மதா சங்கருக்கு ஒரு நல்ல யோசனை கூறினார். அப்புத்தகங்கள் யாவும் சூரத்தில் இருந்தனவென்றும் அங்கு இவற்றை எளிதில் பெற முடியுமென்ப துமே அந்த யோசனை. நர்மதாசங்கருக்கு இந்த யோசனை பிடித் தது. சூரத்தில் இப்புத்தகங்கள் கிடைக்காவிட்டாலும் பிங்களம் பற்றிய புத்தகங்கள் கிடைக்கலாமென்று அவர் நினைத்தார். எனவே தந்தையிடம் தம்மை சூரத்துக்கு அனுப்புமாறு மிகவும் வற்புறுத்திக் கூறி, அவர் சம்மதித்தவுடன் அங்கு அவசரமாய்க் கிளம்பிச் சென்றார். அங்கு வைணவப் பூசாரிகளைப் பற்றிய நூல் களேதும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எந்தப் புத்தகத்துக் காக அவர் தவித்துக்கொண்டிருந்தாரோ அந்தப் புத்தகத்தை அங்கே கண்டார்—'சுதேசி' யாப்பு முறை பற்றிய புத்தகம்.

இத்தகைய நூல்களுக்கான அவருடைய தேடல் அவர் வாழ்க்கையில் ஒரு ரம்மியமான, சிலிர்ப்பூட்டுகின்ற அத்தியாயம்.

இந்தத் தேடலில் அவர் அடைந்த வெற்றியே அவரைப் பல துறைகளில் முன்னேடியாகத் திகழ வைத்தது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல கண்டுபிடிப்புகளைப் போல இந்தக் கண்டுபிடிப்பும் தற்செயலாகவே நிகழ்ந்தது. சூரத்தில் தம்முடைய பழைய நண்பர் ஒருவரைச் சந்தித்தார். இந்த நண்பர் 'ஞானபாரதி' பிரசுரமாகி வந்தபோது அந்த வேலைகளில் அவருக்குத் துணையாக இருந்தவர். அவரிடம் தாம் தேடிக்கொண்டிருந்த நூலைப் பற்றி நர்மதாசங்கர் கூற, இருவருமாகச் சேர்ந்து சூரத் நகர் வீதிகளில் அப்புத்தகத்துக்காகத் தேடி அலைந்தார்கள். இறுதியாக சிறிதும் எதிர்பாராத ஒரு சூழலில், எதிர்பாராத ஒரு மனிதரிடம் அப்புத்தகத்தைக் கண்டுபிடித்தார்கள். ஒரு கொத்தனரிடம்! அக்கொத்தனரின் பெயர் கோவர்த்தன். அவன் கவிதைகளிலும் பாடல்களிலும் ஈடுபாடு உள்ளவன். நர்மதாசங்கர் தற்செயலாகத் தாம் இயற்றிய கவிதைகள் சிலவற்றை அவன் முன் பாட, அவன் அகமகிழ்ந்து போனன். தான் வெறும் ரசிகன் தானென்றும், ஆனல் தன் குரு லால்தாஸ் ஒரு பெரிய கவிஞரென்றும் கூறினன். அவருடைய புத்தகங்களெல்லாம் தன்னிடம் இருப்பதாகவும் கூறினன். இதைக் கேட்டதும் ஒருவேளை தான் தேடிக்கொண்டிருந்த புத்தகம் அவற்றிடையே இருக்கலாமோவென்ற சந்தேகம் நர்மதாசங்கருக்கு ஏற்பட்டது. விவரமறிந்ததும் கொத்தன் அவரை ஒருநாள் பொறுக்கச் சொன்னன். அந்த ஒரு நாளில் தன்னிடமிருந்த நூல்களிடையே தேடிப் பார்த்து அவர் கேட்ட நூல் இருந்தால் எடுத்துத்தருவதாகச் சொன்னன். நர்மதாசங்கருக்கோ ஒரு கணம் கூடப் பொறுக்கமுடியாத பரபரப்பு!

மறுநாள் நர்மதாசங்கர் அந்தக் கொத்தனின் வீட்டுக்குச் சென்றபோது அங்கு அவன் ஒரு பெட்டி நிறையப் புத்தகங்களை அவருடைய பரிசீலனைக்காக எடுத்து வைத்திருந்தான். கவி ஆவலுடன் அந்தப் பழைய நூல்களிடையே தேடினர். என்ன ஆச்சரியம்! அவர் தேடி வந்த ஒரு புத்தகம் நிஜமாகவே அங்கு இருந்தது. அதன் பெயர் ''சாந்த் ரத்னவளி.'' கவி அந்நூலைத் தன்னுடன் எடுத்துச் செல்ல விரும்பினர். ஆனல் கொத்தனர் அதற்கு அனுமதி தரவில்லை. நர்மதாசங்கர் வேண்டுமானல் அப்புத்தகம் முழுவதையும் பிரதி எடுத்துக்கொள்ளலாம். ஆனல் அந்த அரிய நூலை விட்டுக் கொடுக்கத் தன்னல் இயலாதென்று அவன் கூறினன். நர்மதாசங்கர் ஒத்துக்கொண்டார். அவர் தினசரி அந்தக் கொத்தனரின் வீட்டுக்கு பேனா, இங்க் புட்டி சகிதம் சென்று அப்புத்தகத்திலிருந்து ஒவ்வொரு நாளும் சில பக்கங்கள் வீதம் பிரதி செய்து வரலானர். சில நாட்களுக்குப்

பின் அந்தக் கொத்தனுக்கு நர்மதாசங்கர்மீது கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும் அந்த நூலின் (கையெழுத்துப் பிரதி) சில பக்கங்களைத் தம்முடன் வீட்டுக்கு எடுத்துச் செல்லவும், அடுத்த நாள் இந்தப் பக்கங்களைத் திருப்பிக் கொடுத்து வேறு பக்கங்களை எடுத்து வரவும் முடிந்தது. இந்த ஏற்பாடு நர்மதாசங்கருக்கு மிக உதவியாக இருந்தது. சில நாட்களிலேயே புத்தகம் முழுவதையும் அவர் பிரதி செய்து முடித்து விட்டார். அதன்பின் அந்நூல் கவிதை புனைவதில் அவருக்கு மிகவும் கைகொடுத்தது. 'தோரா', 'சௌபாய்' போன்ற பல பாரம்பரிய யாப்பு முறைகள் அல்லது பண்களின் அளவைகள் அதில் அடங்கியிருந்தன. அவருக்கு நல்ல சம்ஸ்கிருத அறிவு இருந்ததால் அப்புத்தகம் முழுவதையும் தானாகவே படித்துப் புரிந்துகொள்ள முடிந்தது.

சூரத்துக்குச் சென்ற வேலை இவ்வாறு வெற்றிகரமாக முடிந்த பிறகு, புத்துணர்ச்சியுடனும் புதிய பல கருத்துக்களுடனும் அவர் பம்பாய் திரும்பினார். உடலெங்கும் ஒரு சுறுசுறுப்பு, ஒரு தன்னம்பிக்கை.

1857ஆம் வருடம் ஜனவரி மாதம் அவர் கல்வியறிவற்ற ஒரு தம்பதியையும் கல்வி பெறாத ஒரு தம்பதியையும் ஒப்பிடும் கவிதையொன்றை எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவருடைய தந்தை ஒரு மாதப் பத்திரிகையில் வந்திருந்த தல்பத்ராமின் சில கவிதைகளை நர்மதாசங்கரிடம் காண்பித்தார். இக்கவிதைகள் பிங்கள சாஸ்திரத்தின் தேவைகளை விளக்கும் வகையில் அமைந்திருந்தன. அவருடைய தந்தை, யாப்பிலக்கண சூத்திரங்களையே கவிதைப்படுத்திவிட்ட அக்கவியின் திறனை வியந்தார். நர்மதாசங்கர் உடனே ஏளனமாகச் சிரித்து, ''அது அப்படியொன்றும் சிரமமானதல்ல'' என்றார். இதற்குத் தந்தை கூறினார்: ''பிங்கள சாஸ்திரத்தைப் பற்றி நீயும் ஒரு நூல் எழுதினால் உன்னையும் கெட்டிக்காரனென்று ஒப்புக்கொள்வேன்''. நர்மதாசங்கர் அந்தக் கணமே தான் எழுதி வந்த கவிதையைப் பாதியில் விட்டு, பிங்கள சாஸ்திரத்தைப் பற்றி ஒரு நூலெழுதுவதில் முனைந்தார். நூலின் முதல் சில பகுதிகளைப் பார்த்த அவருடைய தந்தை மிகவும் மகிழ்ந்து அவரைப் பாராட்டினார். அடுத்த சில நாட்களுக்கு கவி அவ்வேலையிலேயே தீவிரமாக முனைந்திருந்து மார்ச் மாதத்துக்குள் நூலை முடித்தார். அவர் தன் தந்தையிடம் நூல் முழுவதையும் புதிதாகப் பிரதி எடுக்குமாறு கேட்டுக்கொண்டு, பின் ஏப்ரல் முதல் வாரத்தில் லித்தோகிராஃப் அச்சுமுறை மூலம் அதனைப் பிரசுரித்தார்.

நூல் விமரிசகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. மகிபத்ராம் ரூப்ராம் என்ற இலக்கிய உலகப் பெரும்புள்ளி புத்தகத்தை வெகுவாகப் பாராட்டியதுடன் அதன் ஆசிரியர் சிறந்த கவிஞர்கள் வரிசையில் இடம்பெறத் தகுந்தவர் என்று கூறினர். கவி தல்பத்ராம் எழுதினர்: ''கவிதை புனைவதெப்படி என்பது பற்றி இது வரை யாருமே நூல் எழுதியதில்லை. பம்பாயிலுள்ள திரு. நர்மதா சங்கர் அண்மையில் அத்தகைய ஒரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். இத்தகைய ஒரு நூலைத் தயாரிக்க அவர் உண்மையிலேயே மிகவும் சிரமப்பட்டிருக்க வேண்டும். குஜராத்தி மொழியில் இத்தகைய நூல் வெளிவருவது இதுவே முதல் தடவை.'' இதனுல் ஊக்கம் பெற்ற நர்மதாசங்கர் ஒரு பெரும் பண்டிதரின் உதவியுடன் அலங்கார சாஸ்திரம் பற்றிய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கி, அந்த ஆண்டு டிசம்பருக்குள் அவற்றைப் படித்து முடித்தார்.

இக்காலகட்டத்தில் அவர் கோகுல்தாஸ் தேஜ்பால் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலைபார்த்து வந்தார். சர்க்கார் பள்ளிக்கூடத்தில் வேலை பார்ப்பது மேலும் கௌரவமானதாயிருக்குமென்று அவருக்குத் தோன்றியதால் ''எல்ஃபின்ஸ்டோன் ஸ்தாபன மத்தியப் பள்ளி''யில் ஆசிரியர் பதவிக்கு மனுச் செய்து, விரைவில் அங்கு ஆசிரியராக நியமனம் பெற்ருர்.

அடுத்த ஆண்டு ஜனவரியில் ''அலங்கார் பிரவேஷ்'' என்னும் தமது அடுத்த நூலை எழுதத் தொடங்கினுர் அவர். ரஸங்களைப் பற்றிப் படிக்கவும் முற்பட்டார். அதே ஆண்டு ஜூன், ஜூலை இறுதிக்குள் ''அலங்காரம்'' மற்றும் ''ரஸம்'' பற்றிய இந்த இரு நூல்களும் பிரசுரமாயின.

அவருள் நிரம்பியிருந்த சுறுசுறுப்புணர்வும் வாலிப வேகமும் ஒருபுறமிருக்க, குஜராத்தி மொழியில் அந்நாள்வரை இத்தகைய நூல்களெதுவும் கிடையாதென்ற விஷயமும் அவருக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியது. இந்தத் தகவல்களைச் சேகரிப்பதில் என்னென்ன சிரமங்கள் உள்ளனவென்பதையறிந்த அவர், இத்துறைக்கு வரும் புதியவர்களுக்கு இச்சிரமங்கள் ஏற்படாமலிருக்கட்டும் என்று விரும்பினுர். இத்துறை தொடர்பான தகவல்களனைத்தையும் ஒரே நூலில் திரட்டித் தந்ததன்மூலம் பிற்காலத்தில் இத்துறையில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் யாவற்றுக்கும் அவரே ஒருவிதத்தில் மூலகர்த்தாவாக விளங்குகிருர்.

ஆராய்ச்சி நூல்களுடன் கூடவே அவருடைய கவிதைப் பணியும் தொடர்ந்தது. அவ்வருடம் ஏப்ரல்—மேயில் அவருடைய

கவிதைகளின் இரு தொகுப்புகள்—நர்மகவிதா (தொகுதி–1), நர்மகவிதா (தொகுதி–2) என்ற தலைப்புகளில்—வெளிவந்தன.

இவ்வாறு குறுகிய காலகட்டத்தில் அடுத்தடுத்து வந்த நூல்களால் அவருடைய புகழ் வெகு விரைவாகப் பரவியது. மக்கள் 'கவி' என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினர். இன்றும், அவர் தமது முதல் கவிதையை எழுதிய நூற்றிருபத்தாறு ஆண்டுகளுக்குப் பின், இந்தப் பட்டம் அவர் பெயருக்கு முன்னல் விடாமல் தொற்றிக்கொண்டிருக்கிறது. அந்நாளையச் சூழல் இப்போது இல்லை, கவிதையைப்பற்றிய கருத்துகள் பெரும் மாறுதலுக்குள்ளாகிவிட்டன, இன்றைய வாசகன் அவருடைய கவிதைகளில் கவித்துவமேயில்லையென்று கூறுகிறன். என்றலும் நர்மதா சங்கர் இன்றும் ''கவி நர்மதாசங்கர்'' என்றே குஜராத் முழுவதிலும் அறியப்படுகிறர்.

அவர் வேண்டியது வெற்றி. இப்போது அந்த வெற்றி அவரது வாயிலில் காத்திருந்தது. பிரபல தல்பத்ராம்கூட நர்மதா சங்கர் ஆசிரியராக இருந்த ''புத்தி வர்த்தக்'' பத்திரிகைக்குக் கவிதைகள் அனுப்பி வந்தார்—அதுவும் நர்மதா சங்கரின் நிபந்தனைகளுக்குட்பட்டு! நிச்சயம் இவையெல்லாம் அவர் எதிர்பார்த்ததற்கும் மேலான வெற்றிகள்தாம். அவருடைய புத்தகங்கள் நன்கு விற்பனையாயின; அவருடைய கவிதைகளை எல்லாரும் படித்தார்கள்; அனைவர் உதட்டிலும் அவருடைய நாமம் தவழ்ந்தது. இன்னமும் சிறப்பான படைப்புக்களம் மற்றும் புகழ் மாளிகையின் வாசல்கள் அவர் முன்னே திறந்துகிடந்தன. இந்தப் புதிய சூழலில் தான் பார்த்து வந்த பள்ளிக்கூட ஆசிரியர் வேலை மிகவும் கௌரவமற்றதாக அவருக்குத் தோன்றத் தொடங்கியது. தமது புகழ் வளர அவ்வேலை ஒரு தடையாயிருக்குமென்று பட்டது. காலை 10·30 மணி முதல் மாலை 5·30 மணிவரை பள்ளிக் குழந்தைகள் போட்ட கூச்சலில் புகழ்த் தேவியின் இனிய இசை அமுங்கிப் போவதாக அவர் உணர்ந்தார். இனி தான் அந்தத் தேவியின் உபாசகனகவே இருக்கவேண்டுமென்ற நிச்சயமான முடிவுக்கு வந்தார். அதன் பொருட்டு அவர் எல்லாத் தளைகளிலிருந்தும் தம்மை விடுவித்துக்கொள்ளவேண்டும்; அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும்; உடலுயிர் ஆன்மா யாவற்றையும் தமக்கு விருப்பமான வேலைக்கு அர்ப்பணித்து, இந்த அலுப்பூட்டும் சள்ளை வேலையைத் துறக்கவேண்டும்.

தம்முடைய இந்த எண்ணங்களைப் பள்ளியில் தம்முடன் வேலை பார்த்த சக ஆசிரியர்களிடம் அவர் வெளிப்படுத்தியபோது, அவர் கருத்து சரிதானென்று அவர்களும் ஆமோதித்தனர். இது வேலையை விடவேண்டுமென்ற அவருடைய ஆசையை மேலும்

உறுதிப்படுத்தியது. மெல்ல மெல்ல இந்த ஆசை ஒரு அசைக்க முடியாத தீர்மானமாக உருவெடுத்தது. இந்தத் தீர்மானத்துக்கு வந்தபின் எந்தச் சக்தியும் அவருக்குக் குறுக்கே நிற்கமுடியவில்லை. தனது தந்தையிடம்கூட இதைப்பற்றித் தெரிவிக்கவில்லை அவர். 1858-ஆம் வருடம் நவம்பர் மாதம் 23ந் தேதி திடீரென்று தம் பள்ளிக்கூட வேலையை ராஜிநாமா செய்து, முழுநேரமும் தம்மைச் சரஸ்வதியின் சேவைக்கு அர்ப்பணித்துக்கொண்டார். கடைசி முறையாகப் பள்ளிக்கூடம் சென்று வீடு திரும்பிய அவர் தம் பேனாவைப் பார்த்து, கண்களில் கண்ணீருடன் கூறினார்: ''இனி நான் உன் மடியில் என்னைக் கிடத்திக்கொள்கிறேன்.'' இனி தாம் சரஸ்வதியின் சேவகனாக மட்டுமே இருப்பதென்றும் வேறு யாரிடமும் சேவகம் செய்வதில்லையென்றும் அவர் முடிவு செய்தார்.

மகனின் முடிவைக் கேட்ட தந்தை கோபம் கொள்ளவோ அல்லது அவருடன் தர்க்கம் செய்ய முயலவோ இல்லை. ''இப்போது என்ன அவசரம், மகனே!'' என்று மட்டும் கூறினார்.

ஆனால் பகடையை உருட்டியாயிற்று. இனி பின்வாங்குவதற்கில்லை. இந்த முடிவை எடுத்தபோது நர்மதாசங்கருக்கு இருபத்தைந்து வயதே ஆகியிருந்தது, நிலையான வருமானம் எதுவும் கிடையாது. அவர் செய்த தியாகம் உண்மையிலேயே மகத்தானது தான். இன்றும்கூட இந்தியாவில் எழுத்தை மட்டுமே நம்பிப் பிழைப்பதென்பது எவ்வளவு அசாத்தியமானதென நாம் அறிவோம். பின் அந்நாளில் நிலைமை இன்னமும் சிரமமானதாக அல்லவா இருந்திருக்க வேண்டும்? கவிதை, இலக்கியம் முதலியவற்றை சமூகத்துக்குத் தேவையான சரக்குகளாகவே மதிக்காத காலம் அது. ஆனால் இவ்வாறு துணிச்சலான முடிவுகளை எடுப்பதும் பின் அம்முடிவிலிருந்து நழுவாமலிருப்பதும்தான் நர்மதாசங்கரின் இயல்பு.

கவியாயிருந்தாலென்ன, அவருக்கும் வயிற்றுப்பாட்டுப் பிரச்சினை உண்டு. நிலையான வருமானமின்றி, தந்தைக்கு ஒரு பாரமாக விளங்கவும் விரும்பாத நிலையில் அவர் செய்யக்கூடியது என்ன? அவருக்குக் கவிதையில்தான் உண்மையான ஈடுபாடு. சமூக ஒழுக்கத்தில் அக்கறை உள்ளவர், பொதுப்பணியில் நாட்டமுள்ளவர். பேசாமல் ஹரிகதா காலட்சேபக்காரராகப் போய் விட்டாலென்ன என்று தோன்றியது, அவ்வழியில் வயிற்றுப் பாட்டுக்கு வழி செய்து கொள்வதுடன் தம் அறிவையும் அவர் விருத்தி செய்துகொள்ளலாம். அந்நாட்களில் குஜராத்தில் ஹரிகதா பத்ததியில் காலட்சேபம் செய்பவர்கள் யாரும் கிடையாது. அவருக்கோ நல்ல மொழியறிவு இருந்தது, செய்யுள்களைப் பாடுகின்ற முறைகளும் தெரிந்திருந்தது. எனவே அவருடைய

சம்ஸ்கிருத அறிவை இன்னும் கொஞ்சம் விருத்தி செய்துகொண்டு குஜராத்தி மொழியில் ''காலட்சேபத்துக்கு'' ஏற்ற சில கதைகளை தயார் செய்து வைத்துக்கொண்டால் அதைக்கொண்டு பிழைப்பு நடத்தலாம். தமது இந்தப் புதிய வாழ்வுக்கு அஸ்திவாரமாகக் கொஞ்சம் நிதி திரட்டிக்கொள்ள எண்ணிச் சில பணக்கார இந்து வியாபாரிகளை அவர் அணுகினார். ஆனால் அவர்களிடமிருந்து அவர் எதிர்பார்த்த அளவு பணம் பெயரவில்லை.

எனினும் அவர் பூனா சென்றார். அங்கு தமது சம்ஸ்கிருதக் கல்வியைத் தொடங்கினார். ''லகு கௌமுதி'' என்ற நூலின் சில பகுதிகளையும், காளிதாசரின் ''விக்ரமோர்வசீயம்'' நாடகம் முழுவதையும் அவர் பூனாவிலிருக்கும்போது படித்து முடித்தார். அங்கிருக்கும்போது காவிய சாஸ்திரமும் பயின்றார் அவர். இது அவருடைய மனதுக்கு மிக உவப்பாக இருந்தது. கவிதைக் கலையின் கூறுகள்பற்றித் தம் ஆசிரியர்களுடன் நீண்ட உரையாடல்களில் ஈடுபடுவார். இதன்மூலம் பிங்களம், ரஸம், அலங்காரம் ஆகியவை பற்றிய அவருடைய அறிவு மேலும் வளர்ந்தது.

நான்கு மாதங்கள் இவ்வாறு தமது அறிவைப் பெருக்கிக் கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டபின், 1859ஆம் வருடம் மார்ச் மாதம் 20ந் தேதி அவர் பம்பாய் திரும்பினார்.

# VI

கதாகாலட்சேபக்காரர் ஆகவேண்டுமென்ற நர்மதா சங்கரின் கனவு கனவாகவேதான் நின்றுவிட்டது. கையில் கொஞ்சம் காசில்லாமல் அந்த வாழ்க்கையை மேற்கொள்ள இயலாது. வேலையிலிருந்து ஒய்வு பெற்றபோது அவருக்குக் கிடைத்த பண மெல்லாம் பூனாவில் செலவழிந்து விட்டிருந்தது. அங்குமிங்கும் பரபரப்பாகத் தேடினார், ஆனால் வேலையெதுவும் சீக்கிரத்தில் கிடைப்பதாயில்லை. அவருக்கோ, தந்தைக்குத் தான் ஒரு பார மாக இருப்பது மிகவும் உறுத்திக்கொண்டேயிருந்தது.

இத்தகைய நெருக்கடியான கட்டத்தில்தான் சௌராஷ்டிரா வில் வேலை பார்த்து வந்த ஹரிசங்கர் என்பவரைப்பற்றி அவர் கேள்விப்பட்டார். அவருக்குக் கிடைத்த தகவல்களின்படி இந்த ஹரிசங்கர் ஒரு இளைஞர், பக்திமான், 'ஸ்வாமிநாராயண்' பிரி வைச் சேர்ந்தவர், ஒரு ஆசிரியரும்கூட. இந்த ஹரிசங்கரைத் தம்முடன் கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டால் இருவருமாக வயிற்றுப்பாட்டுக்கு ஒரு வழி தேடிக்கொள்ளலாமென்று அவருக் குத் தோன்றியது. அவருக்குப் படிக்க நேரமும் கிடைக்கும்; சமூகம், ஒழுக்கம் ஆகியவைபற்றிச் சொற்பொழிவாற்றலாம். இந்த ஹரிசங்கரைப்போய்ப் பார்த்தாலென்ன? அவர் பவநகருக்கு எண்பது மைல் தூரத்தில்தான் வசித்து வந்தார். பவநகர் அந் நாளில் ஒரு முக்கியமான சுதேசி சமஸ்தானம்; அதன் இளவரசர், திவான் இருவருமே விஷயமறிந்தவர்கள்; கலை, இலக்கியம் ஆகிய வற்றில் ருசி உள்ளவர்கள். நர்மதாசங்கர் அதுவரை சுதேசி சமஸ்தானம் எதையும் பார்த்ததில்லை; கேள்விதான் பட்டிருந் தார். அத்தகைய ஒரு சமஸ்தானத்தைப் பார்க்க வேண்டு மென்ற இயற்கையான ஆவலும் அவருள் இருந்தது. வழக்கம் போல, தன் தந்தையிடம்கூடத் தெரிவிக்காமல் அவர் பவநகருக் குக் கிளம்பிச் சென்றார். பலவித தொல்லைகள், சுவையான பயண அனுபவங்கள், ஆகியவற்றுக்குப் பிறகு இறுதியாக அவர் பவநகர் போய்ச் சேர்ந்தார். அங்கு விசாரித்ததில் ஹரிசங்கரைப்பற்றி அவருக்குக் கிடைத்த தகவல்கள் தவறானவையென்று தெரிந்தது. ஹரிசங்கர் அப்போது ஏதோ தவறான நடவடிக்கைக்காகச் சிறை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிந்தது. ஹரிசங்கர் வசித்த இடம் பவநகரிலிருந்து அவர் நினைத்ததைவிடவும் தூரத்தில் இருந்ததா கவும் அவர் அறிந்தார். எனவே ஹரிசங்கரைச் சந்திக்கும் திட் டத்தை அவர் கைவிட்டார்.

பவநகர இளவரசர் நர்மதாசங்கரை மிக்க மரியாதையுடன் வரவேற்ருர். திவானும்—அவரும் நர்மதாசங்கரின் வகுப்பைச் சேர்ந்தவர்—அவரிடம் மிக்க மரியாதையுடன் நடந்துகொண்டார். ஆனுல் திவான் காட்டிய பரிவில் ஒரு அகம்பாவம் கலந்திருந்த தாக நர்மதாசங்கருக்குத் தோன்றியது. இதை நர்மதாசங்கரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பம்பாய் திரும்பியதுமே, திவான் தமக்கு அளித்த பரிசுகளின் பெறுமானத்துக்குப் புத்த கங்கள் வாங்கி, அவற்றை திவானின் மகன்களுக்குப் பரிசாக அனுப்பிவைத்தார். பவநகர் சமஸ்தானத்திலிருந்து ஒரு சிறிய வேலை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது உண்மைதான்; ஆனுல் அதன்மூலம் பெருத்த சன்மானமேதும் கிடைத்துவிடவில்லை. பம்பாயிலிருந்து பவநகருக்குக் கிளம்பும்போது அவருடைய நிதி நிலை எப்படி கவலைக்கிடமாக இருந்ததோ அப்படியேதான் அங் கிருந்து திரும்புகிறபோதும் இருந்தது.

பவநகரிலிருந்து திரும்பும் வழியில், மற்ருேர் சுதேசி சமஸ் தானமான பரோடாவில் அவர் சிலநாள் தங்கினுர். அங்கு, இடைக்காலக் கவிஞர்களில் இறுதியானவரானதயாராமைப்பற்றிச் சில தகவல்கள் கிடைத்தன என்பதைத் தவிர வேறு உபயோக மாக எதுவும் நிகழவில்லை. இரு சமஸ்தானங்களிலுமாகச் சுமார் இருபது நாட்கள் கழித்தபிறகு அவர் பம்பாய் திரும்பினுர்.

பம்பாயின் பரபரப்பான சமூக கலாசார வாழ்வில் மீண்டும் அவர் மூழ்கிப் போனுர். கல்வித் துறையில் அரசாங்கம் புதிதாக ஏதோ செய்ய முயன்று வந்தது; முன்னேற்றக் கருத்துகளுள்ள சிலர் சமூகத்தில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டுமென்பதில் தீவிரமாக இருந்தனர். பம்பாய்க்குத் திரும்பியவுடனேயே மிஸ்டர் ஈ. ஐ. ஹொவார்ட் என்ற சர்க்கார் அதிகாரியிடமிருந்து நர்மதாசங்கருக்குக் கீழ்க்கண்ட கடிதம் வந்தது:

''இந்திய மொழிகள் பாடப் புத்தகக் கமிட்டியின் அங்கத்தின ராக இருக்கத் தாங்கள் ஒப்புக்கொண்டால் எனக்கு மகிழ்ச்சியா யிருக்கும். குஜராத்தி எழுத்துக்களைக் கூட்டி எழுதும் முறைகள் பற்றித் தீர்மானமான சில முடிவுகளெடுக்க விரும்புகிருேம்.''

கவி இந்த அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஆனுல் வேறு பல அலுவல்கள் அவருடைய முழு நேரத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டன.

பம்பாய்க்குத் திரும்பியபின் மறுபடி பூனுவுக்குச் சென்று ஹரிகதா காலட்சேபக்காரராகும் தமது திட்டத்தை அமுல்படுத்த முயல வேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார். ஆனுல் அதே தருணத்தில் கவி தல்பத்ராம் தமது கண்களில் ஏதோ சிகிச்சை

பெறுவதற்காகப் பம்பாய் வரும் செய்தி அவரை எட்டியது. தல்பத்ராமை நேருக்கு நேர் சந்திக்கப் பயந்து கொண்டுதான் அவர் பூனுவுக்கு ஓடிப்போக விரும்புவதாக நண்பர்கள் அவரைக் கேலி செய்தனர். அவ்வளவுதான்; நர்மதாசங்கர் உடனே பூனு செல்லும் திட்டத்தைக் கைவிட்டார். தல்பத்ராம் பம்பாய்க்கு வந்தவுடன் அவரைச் சந்தித்தார். அந்த முதிய கவிஞர் இவரிடம் மிக அன்பாக நடந்துகொண்டார். பிரபல மராத்தி பண்டிதரான பௌதாஜியிடம் தம்மை அழைத்துச் செல்லுமாறு அவர் நர்மதா சங்கரைக் கேட்டுக்கொள்ள, நர்மதாசங்கர் அவ்விதமே செய்தார்; பௌதாஜி அவருக்கு நன்கு பரிச்சயமானவர்தாம். இன்னொரு நாள் இரு கவிஞர்களுமாகச் சேர்ந்து கர்ஸன்தாஸ் முல்ஜி என்ற சமூக சீர்திருத்தவாதியின் கூட்டமொன்றுக்குச் சென்றனர். கூட்டத்தின் முடிவில் தல்பத்ராம் தமது சில கவிதை களைப் பாடிக் காட்டினர்; அவை நர்மதாசங்கருக்கு மிகவும் பிடித் திருந்தன. தம்மைவிட வயதில் முதியவரும் அன்புள்ளம் கொண்டவருமான தல்பத்ராமுடன் தமக்கு அபிப்பிராயபேதமும் மோதலும் ஏற்படப் போகிறதென அவர் அப்போது சிறிதும் எதிர் பார்த்திருக்கவில்லை.

அது நடந்தது இவ்வாறு—பம்பாய் நகர் அதுவரை நர்மதா சங்கர் என்ற கவிஞரை மட்டுமே அறியும். தல்பத்ராமைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்திருந்ததோடு சரி. இப்போது அவர் பம்பாய் வந்திருப்பதாக அறிந்தவுடன் அவரைப் பார்க்க எல்லாருக்கும் ஆவலாக இருந்தது. இரு கவிஞர்களிடையே ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்து, யார் சிறந்த கவிஞரென்று தெரிய ஒரு போட்டி மாதிரி ஏற்பாடு செய்தாலென்ன என்றும் சிலருக்குத் தோன்றியது. இலக்கியப் போஷகரும் கவிதாபிமானியுமான ஒரு செல்வந்தர் வீட்டில் இரு கவிஞர்களும் சந்திக்க ஏற்பாடு செய்யப் பட்டது. நகரின் உயர்வர்க்கத்தினரும் அறிவு ஜீவிகளும் அந்தப் போட்டியைக் காணக் கூடியிருந்தனர். கூட்டத்துக்கு அழைக்கப் பட்ட நர்மதாசங்கர், வழக்கத்துக்கு விரோதமாக, மிக அடக்க மாகப் பதில் கூறினர். கூட்டத்துக்கு முந்தின நாள் தம்மை அழைக்க வந்த நண்பரிடம், "நான் அவசியம் கூட்டத்துக்கு வருகிறேன்; ஆனல் கவிதைகளைக் கேட்கவே தவிர பாடுவதற்கு அல்ல" என்று சொன்னர். இல்லை, நர்மதாசங்கர் தம் கவிதை கள் சிலவற்றை அவசியம் அங்கு கூற வேண்டுமென்று நண்பர் வற்புறுத்தினர். விநாயக்ராவ் வாசுதேவ் என்ற மராட்டிய அறிஞர்—அந்நாட்களில் பம்பாய் அரசின்கீழ் கீழை நாட்டு மொழி களின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்தவர்—நர்மதா சங்கர் தம் சிறந்த கவிதைகளுடன் கூட்டத்துக்கு வரவேண்டு

மெனக் குறிப்பு அனுப்பியிருப்பதாக நண்பர் கூறினுர். ஆனல் நர்மதாசங்கர் அசைந்து கொடுக்கவில்லே. அன்று வீடு சேர்ந்த வுடன், முதிய கவிஞரான தல்பத்ராமுடன் எவ்விதப் போட்டியி லும் தாம் ஈடுபடுவதில்லேயென அவர் நிச்சயித்தார். ஏனெனில் ஒருவேளே தமது கவிதைகள் சிறந்தனவாகக் கருதப்பட்டால் முதியவர் அவமானமடைய நேருமே! எனவே அவர் குறிப்பிட்ட இடத்துக்கு தமது கவிதைகள் எதையும் எடுத்துக்கொள்ளாம லேயே சென்ருர்.

தல்பத்ராமும் நர்மதாசங்கரும் அவர்களுடைய ஒரு பொதுவான நண்பரும் மாலே 5 மணிக்கு அவ்விடத்தையடைந்த போது மக்கள் பெரும் எண்ணிக்கையில் அங்கு கூடியிருந்தனர். குஜராத்திகள், மராட்டியர்கள் என்ற இரு சாராருமே அங்கு இருந்தனர். நுண்ணிய ஒரு எதிர்பார்ப்பு உணர்வு அவர்களிடையே நிலவியது. முதலில் தல்பத்ராமிடம் அவருடைய கவிதைகளேக் கூறும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் அருயாசமான பாணியில் தமது கவிதைகளேக் கூற, மக்கள் மிக்க மகிழ்ச்சியுடன் கைதட்டி ஆரவாரம் செய்து அவரைப் பாராட்டினர். அடுத்து நர்மதாசங்கரின் முறை வந்தது. தமது கவிதைகளேச் சொல்லும் படி அவரைக் கேட்டபோது அவர் அடக்கத்துடன் கூறினுர்: ''நாம் இங்கு தல்பத்ராமைக் கௌரவிக்கக் கூடியுள்ளோம். எனவே அவருடைய கவிதைகளே மட்டுமே கேட்பதே முறை. நானே உங் களில் ஒருவன் (பம்பாய் வாசி). என் கவிதைகளேத்தான் நீங்கள் பலமுறை கேட்டிருக்கிறீர்களே?''

ஆனல் அங்கு கூடியிருந்தோர் அவரை அவ்வளவு எளிதில் விடுவதாயில்லே. மென்மேலும் அவரை வற்புறுத்தினர். விநாயக் ராவ் வாசுதேவ்தான் மிக அதிகமாக வற்புறுத்திஞர். இறுதியாக நர்மதாசங்கர் பேசுவதற்கு எழுந்தார். இத்தகைய கவியரங்குகள், கவிதைப்போட்டிகள் ஆகியவற்றில் நிரம்ப ஈடுபாடு உள்ளவர் தான் அவர். கவிதைகளேச் சொல்லிக் காட்டுவதற்கு ஆயத்தமாக வரவில்லேயாதலால் முதலில் சற்றே தயங்கினுர்; கையில் புத்தகங் களும் எடுத்து வந்திருக்கவில்லே. ஆனல் விநாயக்ராவ் வாசுதேவ் அருகிலேயே இருந்து அவரை ஊக்கப்படுத்தியவாறே இருந்தார். சற்று நேரத்தில் நர்மதாசங்கருக்குச் சூடு பிடித்தது; உற்சாகமாகத் தம் கவிதைகளேக் கூறத் தொடங்கினுர். அவர் இவ்வாறு தம் கவிதைகளேக் கூறக் கூற, அருகிலிருந்த விநாயக்ராவ் அவர் முதுகில் தட்டி மென்மேலும் அவருக்கு உற்சாக மூட்டினுர், ''சபாஷ், நர்மதாசங்கர், சபாஷ்! இந்த அழகிய கவிதையை நீ எப்போது எழுதினுய்?'' என்றெல்லாம் கூறியவாறு. அவர் கவிதைகளேச் சொல்லிய பாணி நன்ருகவே இருந்தது; விநாயக்

ராவின் ஆரவாரமான பாராட்டுரைகளோ அவருக்கு ஆகாயத்தில் மிதப்பது போன்ற உணர்வேற்படுத்தின. ஒரே கஷ்டம் என்னவென்றால் தனக்கு மென்மேலும் கைதட்டல்கள் கிடைக்கக் கிடைக்க, தல்பத்ராமின் முகம் வெளிறிக் கொண்டே போவதை அவர் கவனித்தார். நர்மதாசங்கர் விநாயக்ராவின் பாதத்தின்மீது தன் பாதத்தால் இலேசாக மிதித்து, ஆரவாரத்தைக் கொஞ்சம் மட்டுப்படுத்திக் கொள்ளும்படி அவருக்குச் சைகை செய்ய முயன்றார். ஆனால் அவர் இதைப் புரிந்துகொண்டால்தானே?

மாலை முடிந்ததும் நர்மதாசங்கரின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தாமே தல்பத்ராமைவிடச் சிறந்த கவிஞரென்றும் தல்பத்ராம் தம்மீது பொறாமைப் படுகிறாரென்றும் அவருக்குத் தோன்றி விட்டது. தல்பத்ராமின்பால் இந்தப் பொறாமை கலந்த போட்டியுணர்வுகள் அவருடைய ஆயுள் முழுவதும் நீடித்தன; அவருடன் சுமுகமான உறவுகொள்ள இயலாமல் செய்தன. பார்க்கப்போனால் அமைதியானவரும் இனிய சுபாவமுள்ளவருமான தல்பத்ராம் இருவரில் சிறந்த கவிஞரென்றுகூடச் சொல்லலாம்.

இந்த நிகழ்ச்சியுடன் தொடர்புள்ள ஒரு அம்சம் அன்றைய பம்பாய் நகரில் நிலவிய மத, கலாசார ஒற்றுமைக்குச் சான்றாக விளங்குகிறது. விநாயக்ராவ் வாசுதேவ் என்ற பிரபல மராட்டிய அறிஞர் எவ்வாறு அங்கிருந்த சபையோரிடையே சிறப்பிடம் பெற்று, அந்நாளைய இரு சிறந்த குஜராத்திக் கவிஞர்களைக் கேட்டு மகிழ வந்திருந்தாரென்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். இதைத் தவிர, மகாராஷ்டிராவின் சிறந்த பண்டிதர்களில் ஒருவரான டாக்டர் பௌதாஜி என்பவருக்கும் கவி நர்மதா சங்கருக்குமிடையே ஆழ்ந்த நட்பு நிலவியது. வேறு பல மராட்டிய அறிஞர்களும் இலக்கியப் புள்ளிகளும் கூட இவ்வாறு குஜராத்தியரின் கலை, இலக்கிய வாழ்வுடன் சம்பந்தப்பட்டிருந்தனர். பார்ஸிகள் பலர் குஜராத்திக் கவிஞரிடமும், குஜராத்திக் கவிதைகளிடமும் ஒரே பைத்தியமாக இருந்து வந்தனர். சில ஐரோப்பியர்களும் கூட இம்மொழியையும் அதன் இலக்கிய மரபுகளையும் மிக நேசித்தனர். பம்பாய் அந்நாட்களில் பல கலாசாரங்களும் இணைந்து இறவாடும், மனத்தளவில் பரந்த ஒரு நகரமாக விளங்கியது. அந்தப் பொற்காலத்தில், நர்மதாசங்கர் போன்ற உற்சாகமும் துடிப்பும் மிக்க ஒரு கலைஞன் முழுமையாக மலர்ந்து மணம் பரப்ப ஏற்ற ஒரு நகரமாகப் பம்பாய் விளங்கியது. மீண்டும் அந்தப் பழைய பம்பாய் திரும்பாதா என இப்போது நமக்கு ஏக்கம் உண்டாகிறது!

அந்நாட்களில் மக்களிடையே நிலவிய தோழமையையும் நேச உணர்வுகளையும் விளக்க ஒரே ஒரு உதாரணம் போதுமானது. தல்பத்ராமுடன் நிகழ்ந்த ''போட்டி''க்குப் பிறகு, டாக்டர் பௌதாஜி ஒரு நாள் நர்மதாசங்கரைச் சந்தித்து, இரு கவிஞர்களுக்காகவும் தான் நிதி திரட்ட முயலுவதாகச் சொன்னார். எனவே அவர் தொடர்ந்து கவிதைகள் எழுதி வர வேண்டுமென்றும் சொன்னார். இந்தத் திட்டம் வெற்றி பெறவில்லையென்றாலும், நர்மதாசங்கர் கதாகாலட்சேபக்காரராகும் ஆசையைத் துறக்க இது காரணமாயிற்று. இனி தான் வெறும் கவிஞராக மட்டுமே இருப்பதென அவர் முடிவு செய்தார்.

# VII

தல்பத்ராம் பம்பாய்க்கு வந்திருந்ததை ஒட்டி நிகழ்ந்த மற்ெருரு சம்பவம், நர்மதாசங்கரின் ஆளுமை மற்றும் அவருடைய நடவடிக்கைகளின் மற்ருேர் அம்சத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது. பம்பாயின் சமூக வாழ்க்கையைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது. ஏற்கெனவே நாம் கூறியதுபோல, கவிதையில் ஆர்வமுள்ள சில செல்வந்தர்கள் கூடி, இந்த இரு கவிஞர் களிடையே கவிதைப் போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இவர்களுக்கு இந்தப் போட்டியின் நினைவே ஒரு ரகசியமான கிளு கிளுப்பை ஏற்படுத்தியது. நர்மதாசங்கர் நிச்சயம் தல்பத்ராமிடம் தோற்கப் போகிருரென்றும் இவர்களில் சிலர் ரகசியமாக நம்பினர்.

இந்தப் போட்டிக்கு முந்தின நாள் மாலையில் நண்பரொருவர் நர்மதாசங்கரை அவர் வழக்கமாக மாலை நேரங்களில் செல்கிற ஒரு புத்தகக் கடையில் சந்திக்கச் சென்ருர். அங்கு நர்மதாசங்கரைப் பார்த்தவுடனேயே நண்பர் கூறினர்: ''நாளை தெரியும், நீர் அசலான சரக்கா இல்லையா என்று.'' நண்பர் எதைக் குறிப்பிடுகிரு ரென்று நர்மதாசங்கருக்குப் புரியவில்லை; கவியரங்கைப் பற்றி அதுவரை அவருக்குத் தகவல் ஏதும் இல்லை. அந்நாளைய வைணவப் பூசாரிகள் சிலருக்கு எதிராக அவர் பல கட்டுரைகள், கவிதைகள் எழுதியதுடன் காரசாரமான சொற்பொழிவுகளும் நிகழ்த்தியிருந்தார். ஒருவேளை இவை தொடர்பாகத் தம்மீது யாராவது மான நஷ்ட வழக்குத் தொடர்ந்திருக்கிருர்களோ என்று அவர் எண்ணினர். இந்த எண்ணம் அவருள் ஆவேசத்தை எழுப்ப, அவர் கூச்சலிட்டார்: ''தாம் வசிக்கும் பேட்டையிலுள்ள கட்டிடங்களின் கூரைகளில் எத்தனை ஓடுகள் இருந்தனவோ அத்தனை எதிரிகள் தமக்கு ஏற்பட்டாலும் சரி, தாம் தம் நம்பிக்கை களை மாற்றிக்கொள்ள முடியாதென முழங்கினர் மார்ட்டின் லூதர். நான் சொல்கிறேன், இந்த ஓடுகளைச் சின்னஞ்சிறு துண்டுகளாக உடைத்தால் எத்தனை துணுக்குகள் இருக்குமோ அத்தனை எதிரிகள் எனக்கு ஏற்பட்டாலும் சரி, இந்தப் பூசாரி களுக்கு எள்ளளவும் மரியாதை தர மாட்டேன்'' என்ருர்.

இதிலிருந்து, நர்மதாசங்கர் இயங்கி வந்தது இலக்கிய உலகில் மட்டுமல்ல என அறிந்துகொள்ளலாம். பதினெட்டு வயதில் அவரை வீறுகொண்டெழச் செய்த சமூக சீர்திருத்த இயக்கம் இந்த

இடைக் காலத்தில் மேலும் சக்தி வாய்ந்த ஒன்ருக வளர்ந்திருந்தது; நர்மதாசங்கர் அந்த இயக்கம் சார்ந்த பல முக்கியமான பொறுப்புகளை வகித்து வந்தார். கர்ஸன்தாஸ் முல்ஜி என்ற அசாதாரணமான துணிச்சலும் விவேகமும் மிக்க சீர்திருத்தவாதிக்கும் அவருக்குமிடையே நெருங்கிய நட்பு நிலவியது. கர்ஸன் தாஸின் சுறுசுறுப்பையும் துணிவையும் அறிந்துகொள்ள ஒரு சிறிய உதாரணம் போதுமானது.

கர்ஸன்தாஸ் சிறு வயதிலேயே தனது பெற்ருேரை இழந்து விட்டிருந்தார்; அவருடைய தாய் வழி அத்தை ஒருத்திதான் அவரை வளர்த்தாள். இந்த அத்தை ஆசாரமான மனப் போக்குள்ளவள். கர்ஸன்தாஸ் தமது புரட்சிகரமான கருத்துகளை அவளெதிரில் வெளிப்படுத்தாமல் அவற்றைப் பரம ரகசியமாகப் பாதுகாத்து வந்தார். ஒரு முறை விதவைகளின் மறுமணம் பற்றிய சிறந்த கட்டுரை எழுதுபவருக்கு நூற்றைம்பது ரூபாய் சன்மானம் கொடுப்பதாக ஒரு விளம்பரம் வந்தது. கர்ஸன்தாஸ் விதவைகள் மறுமணம் செய்துகொள்வதை ஆதரித்தார்; அதுபற்றிய சில தீர்மானமான கருத்துக்களைக் கொண்டிருந்தார். இந்தக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்ள அவர் மிகவும் விரும்பினுர். ஆனுல் இதற்கான முஸ்தீபுகளில் அவர் தன் அத்தையின் பார்வைக்குத் தப்பி, மிக ரகசியமாகத்தான் ஈடுபடவேண்டியிருந்தது. அத்தைக்குத் தெரிந்தால் பத்ரகாளியாகிவிடுவாள். ஆனுல் இவ்வாறு அவர் ஜாக்கிரதையாக இருந்தும்கூட, அத்தைக்கு எப்படியோ விஷயம் தெரிந்துபோயிற்று; அவள் கோபத்தில் தாறுமாருகக் கூச்சலிடத் தொடங்கினுள். என்ன பாபகரமான செயல்! அவள் வீட்டில், அவளெதிரேயே இத்தகைய செயல்களில் ஈடுபட அவனுக்கு என்ன துணிச்சல்! இது ரொம்ப மோசம், நன்றிகெட்ட தனம். இதை அவள் ஒரு கணமும் சகியாள். இதற்காக அவன் தகுந்த தண்டனை பெறவேண்டும்.

தண்டனை கிடைக்கத்தான் செய்தது. அத்தையின் வீட்டை விட்டு வெளியேறித் தனியே வசிக்கவேண்டியிருந்ததுதான் அந்தத் தண்டனை. மிகவும் சிரமமாய்த்தானிருந்தது; பாடுபட்டு உழைக்க வேண்டியிருந்தது. ஆனுல் தன் கொள்கைகளில் அவர் உறுதியாக இருந்தார். வயதாக வயதாக, இக்கொள்கைகள் அவரைப் பலதரப்பட்ட திசைகளில் இழுத்துச் சென்றன; பலதரப்பட்ட கூட்டங்களில் கலந்துகொள்ள வைத்தன. ஒரு முறை வெவ்வேறு நாடுகளில் பயணம் செய்வதன் பயன்களைப் பற்றி அவர் பிரசங்கம் செய்தார். இந்தப் பிரசங்கத்தை நர்மதாசங்கரின் 'புத்தி வர்த்தக மண்டலம்' தான் ஏற்பாடு செய்திருந்தது. இந்தப் பிரசங்கம் நர்மதாசங்கரை மிகவும் கவர்ந்தது. அதுவே அவர்களிடையே நீடித்த நட்பு ஏற்பட ஒரு துவக்கமாக அமைந்தது.

கர்ஸன்தாஸ் முல்ஜி, ஒரு குறிப்பிட்ட வயதையடைந்த பிறகு, தமது சமூக சீர்திருத்தப் பணிக்காகக் குறிப்பிட்ட ஒரு களத்தைத் தேர்ந்தெடுத்து அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். வைணவ மதத்தினரான அவர், வைணவப் பூசாரிகள் தமது செல்வாக்கு, வளமை, அதிகாரம் ஆகியவற்றைப் பெருக்கிக் கொண்டே போவதற்காக என்னென்ன கீழ்த்தரமான நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபட்டு வந்தார்களென்பதை நன்கு அறிந்திருந்தார். தாமே நாளிதழ் ஒன்று வெளியிடத் தொடங்கி அதில் இந்தப் போலி வேஷதாரிகளைத் தொடர்ந்து தாக்கி வந்தார் அவர். நாளிதழுக்கு ''சத்யபிரகாஷ்'' என்று பொருத்தமாகப் பெயரிட்டிருந்தார். நர்மதாசங்கரும் இக் காரியத்தில் ஒரு கூட்டாளியானார். வைணவப் பூசாரிகளுக்கெதிராகக் கட்டுரைகள், கவிதைகள் எழுதித் தரவும் சொற்பொழிவுகள் ஆற்றவும் தொடங்கினார். இதனால்தான், ''நாளை தெரியும்...'' என நண்பர் கூறியவுடன் சட்டென்று யாரோ தனக்கெதிராக மான நஷ்ட வழக்குதான் தொடர இருக்கிறார்களோ என அவர் நினைத்துவிட்டார்.

அப்படியேதும் நடக்கவில்லை. ஆனால் நர்மதாசங்கர் எப்போதும் சமூக சீர்திருத்த இயக்கங்களின் முன்னணியில் இருந்து வந்தார். தன்னுடைய சொந்த ஊரான சூரத்திலேயே 1859ஆம் வருடம் ஏப்ரலில் அவர் ஒரு சிறிய சீர்திருத்த இயக்கமொன்றைத் தொடங்கியிருந்தவர்தான். அவ்வருடம்தான் தான் மத சம்பந்தமான எல்லா வகை மூடநம்பிக்கைகளிலிருந்தும் விடுதலை பெற்றதாக அவர் கூறுகிறார். இந்த மனநிலையிலிருந்தபோதுதான், அவருடைய ஜாதிக்காரர்கள் மட்டுமே பங்கேற்றிருந்த விருந்து ஒன்றில் அவர் கலந்துகொள்ள நேர்ந்தது. அந்த ஜாதிக்குள்ளே இரண்டு உட்பிரிவுகள் இருந்தன—'நாகர் கிருகஸ்தர்கள்' என்பவர் ஒரு பிரிவினர்; 'நாகர் பிராம்மணர்கள்' என்பவர் மற்றோர் பிரிவினர். நர்மதாசங்கர் பிந்தைய பிரிவைச் சேர்ந்தவர். முந்தைய பிரிவைச் சேர்ந்தவர்கள் தம்மைப் பற்றிய மிகையான எண்ணமும், அதன் காரணமாய் மண்டைக் கனமும் உள்ளவர்களாயிருந்தனர். இரு உட்பிரிவினரிடையேயும் தாம்தான் உசத்தி என அவர்களுக்கு ஓர் எண்ணம். இரு பிரிவினரும் சேர்ந்து விருந்துண்ணும் சந்தர்ப்பங்களில், 'கிருகஸ்தர்கள்' பிரிவைச் சேர்ந்த பெண்டிர் ரவிக்கையணியலாம், ஆனால் 'பிராம்மணர்' பிரிவைச் சேர்ந்த பெண்டிர் ரவிக்கையணிதல் கூடாது என ஒரு வழக்கம் அனுசரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கத்துக்கு எல்லாரும் வாய் பேசாமல் அடிபணிந்து வந்தனர். ஆனால் நர்மதாசங்கர் இவ்வழக்கத்தை எதிர்த்தார். இத்தகைய ஒரு விருந்தில் கலந்துகொள்ள அவருக்கு அழைப்பு வந்தபோது தமது குடும்பத்துப் பெண்களை அவர்களது முழு உடையும் அணியச் செய்து அவர்களை அழைத்துப் போனார்.

இதனால் பலர் எரிச்சலும் கோபமும் அடைந்தபோதிலும், அந்நாளிலிருந்து இந்த வெறுக்கத்தக்க நடைமுறை அடியோடு ஒழிந்துபோயிற்று.

நர்மதாசங்கர் இன்னொரு துணிச்சலான காரியமும் செய்தார். அந்நாளைய பிரபல குஜராத்திப் புள்ளிகளில் ஒருவரான மஹிபத்ராம் ஏதோ ஒரு வெளி நாட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருக்கையில் இது நடந்தது. கடல் கடந்து செல்வதை மிகவும் பாபகரமான செயலாகக் கருதிய காலம் அது. இத்தகையவர்களுக்கு உதவுகிறவர்களும்கூடப் பாபிகளாகக் கருதப்பட்டனர். நர்மதாசங்கர்தான் மஹிபத்ராமை வெளிநாடு செல்லுமாறு ஊக்குவித்ததாக அவரைப் பலர் குற்றம் சாட்டினர். உண்மையில் அவருக்கு இதைப் பற்றி எதுவுமே தெரியாது. மஹிபத்ராமின் இந்தச் செயலைக் கண்டித்து அவருடைய ஜாதிக்காரர்கள் ஒரு சுற்றறிக்கை தயாரித்து, கையெழுத்துக்காக எல்லாரிடமும் அனுப்பி வைத்தனர். ஆனால் நர்மதாசங்கர், அவருடைய தந்தை, அவருடைய நண்பன் ஜவேரிலால் உமியா சங்கர் ஆகியோர் இந்தச் சுற்றறிக்கையில் கையெழுத்திட மறுத்தனர். இதற்காகச் சில காலம் அவர்கள் ஜாதியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டனர்; ஆனால் இதற்காக அவர்கள் கவலைப்படவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அவர்கள் ஜாதிக்குள் அனுமதிக்கப்பட்டனர் என்பது உண்மைதான். ஆனால் தமது கொள்கைகளுக்காக நர்மதாசங்கர் எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராக இருந்ததற்கு இந் நிகழ்ச்சியும் ஓர் உதாரணம்.

ஜதுநாத்ஜி மகாராஜ் என்ற பிரசித்திபெற்ற வைணவப் பூசாரியுடன் நிகழ்த்திய மோதலே, நர்மதாசங்கருக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்தது. அந்தப் பூசாரி தந்திரமும் சாதுரியமும் மிக்கவர்; தேனொழுகப் பேசுகிறவர். துர்க்காராம் மெஹ்தாஜி என்ற சீர்திருத்தவாதியுடன் ஏற்பட்டிருந்த பரிச்சயத்தின் மூலம், சீர்திருத்தவாதிகளின் பலவீனங்களை இந்தப் பூசாரி புரிந்துகொண்டிருந்தார். இனிய வார்த்தைகள், செயல்கள்மூலம் அவர்களை எளிதில் மயக்கிவிடலாமென்று அறிந்துகொண்டிருந்தார். இந்தப் பூசாரி பம்பாய்க்கு வந்த சமயத்தில் நர்மதாசங்கரும் அவருடைய நண்பர்களும் சமூக சீர்திருத்தப் பணிகளில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். முன்பு நர்மதாசங்கர் எந்தச் சங்கத்தில் தனது முதல் சொற்பொழிவை ஆற்றியிருந்தாரோ அந்தச் சங்கம் இப்போது வேறு தலைவர்களைக் கொண்டிருந்தது. வெறும் சொற்பொழிவாற்றுவதுடன் அச்சங்கத் தலைவர்கள் இப்போது திருப்தியடையவில்லை. இவர்களுடைய முயற்சிகள் காரணமாக, பெண்களுக்கென தனிப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்

பட்டு வந்தன. ஆசார மனப்போக்குள்ள பிற்போக்குவாதிகளுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. முன்பே சொன்னபடி, பெண்கள் பள்ளிக்கூடம் சென்றால் இளம் வயதிலேயே விதவையாகி விடுவார்களென்று இந்தச் சாரார் நம்பினர். சமூகத்தில் விதவைகளின் நிலையோ மிகக் கேவலமாக இருந்தது. விதவைகள் மறு மணம் செய்துகொள்ள வேண்டுமென்று சீர்திருத்தவாதிகள் விரும்பினர். ஆனால் பழைய மரபில் ஊறியவர்களோ இதை எண்ணிப் பார்க்கவும் தயாராயில்லை. விதவைகளின் மறு மணத்தை வலியுறுத்தி நர்மதாசங்கர் பல கவிதைகள் எழுதி வந்தார்; சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்.

இக்கவிதைகளும் சொற்பொழிவுகளும் யுத்த கோஷங்கள் நிரம்பியனவாக இருந்தன. ஆம்; இரு வேறு போர் முகாம்களிடையே பொறி பறந்தவண்ணமிருந்தது. சீர்திருத்தவாதிகள் போருக்கு ஆயத்தமாகவே இருந்தனர். ஆனால் ஜதுநாத்ஜி இதற்குத் தயாராயில்லை. பிளவைத் தூர்க்கவே அவர் முயன்றார்; சீர்திருத்தங்களை அவசரமின்றி நிதானமாக அமுல்படுத்தலாமே என்றார். பெண்களுக்குக் கல்வியா? அதிலொன்றும் தவறில்லையே! இதைப் பற்றி நர்மதாசங்கருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தாம் தயார்.

மகாராஜ் நர்மதாசங்கரைப் பார்க்க விரும்புவதாக அவரிடம் தகவல் வந்தது; அவர் மகாராஜ் தங்கியிருந்த 'பைகல்லா' பிரதேசத்துக்குக் கிளம்பிச் சென்றார். ஆனால் அவர் சென்ற வேளை சரியில்லை. அவர் அங்கே போனபோது மகாராஜ் எங்கோ அவசரமாக வெளியே கிளம்பிக்கொண்டிருந்தார். இன்னொரு முறை அவர் சென்றபோது மகாராஜ் பிற்பகல் நேரத்து ஓய்வை அனுபவித்துக்கொண்டிருப்பதாகவும் அவரைப் பார்க்க இயலாதென்றும் நர்மதாசங்கரிடம் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்களிடையே உறவு பழுதடைந்தது; ஆனால் அது தீவிர மோதல் எதற்கும் வித்திடவில்லை; ஏனென்றால் வேறொரு சந்தர்ப்பத்தில் மகாராஜ் ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் தலைமை தாங்கினார். அவருடைய இந்தச் செயல் ஆசாரவாதிகளான அவருடைய சீடர்களுக்குக் குழப்பத்தையும் சங்கடத்தையும் அளித்தது; அவர்கள் வாயடைத்துப் போயினர். சீர்திருத்தவாதிகளோ இச்செயலால் உற்சாகமடைந்தனர். இவர்களில் சிலர் மகாராஜின் இத்தகைய நடவடிக்கைகளை அவருடைய மனமாற்றத்தின் அடையாளமாக எண்ணி மயங்கினர். ஆனால் நர்மதாசங்கருக்கு நம்பிக்கையேற்படவில்லை. தங்களுடன் சமரசம்கொள்ள விரும்புவதுபோல நடித்தாலும், மகாராஜ் பயங்கரமான ஒரு எதிரியே என அவர் நினைத்தார். தமது எதிரி நானாவிதமான ஆயுதங்

களைப் பெற்றிருப்பதாகவும் மிகவும் தந்திரசாலியென்றும் அவருக் குப்பட்டது. பெண்கள் கல்வியைப்பற்றிய அவருடைய மாறுபட்ட தொனியும் பேச்சும் வெறும் சாகஸமின்றி வேறென்ன? சீர்திருத் தங்கள் வேண்டுமென்பது பற்றி ஜதுநாத்ஜி உண்மையிலேயே சிரத்தையுள்ளவராக இருந்தால் விதவைகள் மறுமணத்துக்கு அவர் ஒப்புதல் தரட்டுமே, பார்க்கலாம்! அல்லது இதை அவர் எதிர்க்கும் பட்சத்தில் இதைப் பற்றி நர்மதாசங்கருடன் பொது மேடையில் விவாதம் புரிய அவர் தயாராக இருப்பாரா? நர்மதா சங்கர் இந்தச் சவாலை ஏற்கத் தயார்.

நர்மதாசங்கரும் அவருடைய சில நெருங்கிய நண்பர்களும் ஜதுநாத்ஜி வெறும் கபட வேஷதாரிதான் என நினைத்தனர். பொது மேடைகளில் ஒருவிதமாகவும், தனது ஆசார சீலர்களான சீடர்களுடன் தனித்து இருக்கையில் வேறொரு விதமாகவும் அவர் பேசி வருகிறாரோ என அவர்கள் சந்தேகித்தனர். எனவே கவி தனது எழுத்துக்கள், பேச்சுக்கள் மூலம் பிற்போக்குவாதிகளைத் தொடர்ந்து சாடி வந்தார். ஆனால் பொது மேடையில் தம்முடன் விவாதம் செய்ய வருமாறு அவர் ஜதுநாத்ஜிக்கு விடுத்த அறை கூவல் அவருடைய சில நெருங்கிய நண்பர்களையும் உறவினர்களையும் அதிருப்திக்குள்ளாக்கியது. இ வ் வ ா று செய்யவேண்டாமென அவர்கள் உபதேசித்தனர்.

ஆனால் நர்மதாசங்கரின் போர்க் கோலம் மகாராஜையும் அவ ருடைய சீடர்களையும் உற்சாகத்திலாழ்த்தியது. தாம் விரித்திருந்த வலையில் நர்மதாசங்கர் தானே வ ந் து சிக்கிக்கொள்வதாக அவர்கள் நினைத்தனர். மகாராஜ் நர்மதாசங்கரின் அறைகூவலை ஏற்று, தாம் தேர்ந்தெடுத்திருந்த ஒரு இடத்துக்கு நர்மதாசங்கரை அழைத்தார். நர்மதாசங்கர் இந்த அழைப்பை ஏற்றுக்கொண் டார். சீர்திருத்தவாதிகளான அவருடைய நண்பர்கள் பலர் இந்தச் சர்ச்சையில் பங்குபெற விருப்பமின்றி விலகியிருந்தனர்; மகாராஜின் நோக்கங்களைத் தாம் சந்தேகிக்க விரும்பவில்லையெனக் கூறினர். ஆனால் நர்மதாசங்கர் இதையெல்லாம் பொருட்படுத்த வில்லை.

இறுதியாக, நர்மதாசங்கர் விவாதத்தில் பங்கு பெறச் சென்ற போது அவருடன் கிஷன்தாஸ் பாவா என்ற 'பயில்வான்' சிநேகிதர் உடன் சென்றார். விவாதம் நடக்கவிருந்த இடத்தில் ஏதாவது கலாட்டா ஏற்பட்டு நர்மதாசங்கர் தாக்கப்படலாம் என்பதால் பயில்வான் கூடவே சென்றார்போலும். இதைத் தவிர இரண்டு, மூன்று இதர நண்பர்களும் அவருடன் சென்றனர்.

இந்த விவாதம் கவியின் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்; அவருடைய கொள்கைத் துணிவையும் அஞ்சா

நெஞ்சத்தையும் நன்கு எடுத்துக்காட்டுவது. இதற்கீடான இன்னொரு விறுவிறுப்பான நிகழ்ச்சி அவருடைய வாழ்க்கையில் நடைபெறவில்லையென்றே கூறலாம்.

மரபில் ஊறிய ஆசாரசீலர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்த ஒரு பிரதேசத்தில் விவாதம் நடந்தது. நாற்புறமும் சுவரால் சூழப்பட்ட ஒரு ஹால். ஹாலுக்குள்ளும் வெளியேயும் கூட்டம் பிதுங்கி வழிந்தது. ஹாலுக்குள் இருந்த மகாராஜின் பக்த கோடிகளின் எண்ணிக்கை இருநூறு. வெளியே இருந்தவர்களோ எண்ணூறுக்கும் மேல். மகாராஜ் மிகவும் தந்திரசாலி. நர்மதாசங்கர் எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர் என்பதை அறிந்திருந்த அவர், மெல்ல மெல்ல உசுப்பியவாறு அவரைப் பெரும் ஆவேச நிலைக்கு அழைத்துச் சென்றார். நர்மதாசங்கரின் குரல் உயர்ந்தது, வார்த்தைகளில் கனல் தெறிக்கலாயிற்று. இச்சந்தர்ப்பம் பார்த்து, சாஸ்திரங்கள் புனிதமானவையென்றும் கடவுளால் உருவாக்கப்பட்டவையென்றும் நர்மதாசங்கர் ஒப்புக்கொள்கிறாரா என்று கேட்டார் மகாராஜ். அந்த நேர ஆவேசத்தில் நர்மதாசங்கர் சட்டென்று ''இல்லை, அவை கடவுளால் உருவாக்கப்படவில்லை'' என்று கூறிவிட்டார். அவ்வளவுதான்! ஹால் அமளி துமளிப்பட்டது. பலர் உரத்த குரல்களில் தமது கோபத்தையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். கூட்டம் வெறிபிடித்தது போலாகிவிட்டிருந்தது. நர்மதாசங்கர் உடனே கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துமாறு மகாராஜுக்கு எச்சரிக்கை விடுத்தார். தான் தாக்கப்பட்டால் அதற்கு மகாராஜ் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றார்.

அத்தருணத்தில் நர்மதாசங்கரின் நண்பனென்று சொல்லக் கூடிய ஒரே ஒருவர் கூட அந்தப் பரந்த கூட்டத்தில் இருக்கவில்லை. ஏதாவது அமளி நேர்ந்தால் அவரைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அவருடன் வந்திருந்த கிஷன்தாஸைக் கூட நர்மதாசங்கர் தம் தந்தைக்குத் துணையாக அனுப்பிவிட்டிருந்தார். ஆம்! தம் மகனுக்கு ஏதாவது ஆபத்து நேரக்கூடுமென்று பயந்து அவருடைய தந்தை மகனுக்குத் துணையாயிருப்போமென்று அக்கூட்டத்துக்கு வந்திருந்தார். ஆனால் தந்தையை அங்கே பார்த்ததும் நர்மதாசங்கர் கூட்டத்தில் ஏடாகூடமாக ஏதாவது நேர்ந்தால் அவர் சிரமப்படப்போகிறாரே என்று கவலைப்பட்டு, தமது பயில்வான் நண்பனுடன் அவரை வீட்டுக்கு அனுப்பிவைத்தார். அங்கு நிலவிய சூழ்நிலை பரபரப்பு மிகுந்ததாகவும் அதே சமயத்தில் அச்சமூட்டுவதாகவும் இருந்திருக்க வேண்டும். ஒரு பக்கத்தில், விஷமம் செய்வதற்கென்றே காத்திருந்த காலிகளின் கும்பல்; இன்னொரு பக்கம், தனக்குத் துணை செய்ய யாருமே இல்லாத இந்தத் துணிச்சலான ஆசாமி. அக்கூட்டத்தின் நடுவே நெஞ்சை நிமிர்த்தி

நின்றவாறு அவர் எச்சரிக்கைகள் விடுத்துக் கொண்டிருந்த காட்சியை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. அவருடைய எச்சரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகத் தான் இருந்தன. அபாயம் நேரப்போகிறதென்று உள்ளுணர்வு கூற, நர்மதாசங்கர் யாரும் எதிர்பாராதவண்ணம் அந்த இடத்தைவிட்டு அவசரமாக வெளியேறத் தொடங்கினார். அவருடைய ஷூக்கள் சட்டெனக் கிடைக்கவில்லை; அவர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் வெறும் ஸாக்ஸுடனேயே நடந்து சென்றார். வெளியே இருந்த மக்களுக்கு அவர்தான் நர்மதாசங்கர் என்று தெரியாது. அவர்கள் அவரிடமே ஆவலுடன் கேட்டனர்: ''எங்கே அந்த அற்பப் பதர்?'' நர்மதாசங்கர் உடனே வெளியே சாலையை நோக்கிக் கையைச் சுட்டிக் காட்டி, ''அதோ பாருங்கள், அங்கே போகிறான்'' எனக் கூறியவாறே யாரும் அவரை அடையாளம் கண்டுகொள்ளுமுன் ஓட்டமாக ஓடிவிட்டார். அவர் தப்பிச் சென்ற தகவல் பரவியதும் அவருடைய வீட்டைச் சுற்றிக் கூட்டம் கூடியது; ஆனால் அதற்குள்ளாக அவர் வீட்டில் தன் அறைக்குள் நுழைந்து வெளியே தாளிட்டுக் கொண்டு விட்டார். அங்கே அவர்களுடைய வசவுகள் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தன.

இவ்வாறு நிலைமையைத் துணிவுடன் சமாளித்துவிட்ட போதிலும், அந்நிகழ்ச்சி அவரைச் சோர்வில் ஆழ்த்தியது. தன் தோழர்கள் தன்னை மோசம் செய்துவிட்டதாக அவர் எண்ணினார். கொள்கை வேறுபாடு காரணமாக அல்ல, கோழைத்தனம் காரணமாகவே தனது தோழர்கள் விவாதம் நடந்த இடத்துக்கு வராமலிருந்ததாக அவருக்குத் தோன்றியது. நிகழ்ச்சி முடிந்த பின்னரும் கூட அவர்கள் கோழைகளாகவே நடந்து கொண்டனர். சாஸ்திரங்கள் கடவுளால் உருவாக்கப்பட்டவையல்ல என்று அவர் சொன்னதை மட்டும் வைத்துக்கொண்டு அவரை விமரிசித்து எழுதி வந்தனர். நர்மதாசங்கர் தமக்கே உரிய அவசர பாணியில், இவர்கள் வெறும் பேச்சு வீரர்கள்தான், கைதட்டல்களுக்காக வேண்டிக் கொட்டி முழக்குவார்களே தவிரச் செயலில் இறங்க மாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தார்.

இதன் பிறகு அவரும் அவருடைய சீர்திருத்த நோக்குப் படைத்த நண்பர்களும் வேறு பல சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் ஒன்று சேர்ந்து ஈடுபட்ட போதிலும், பழைய தோழமையும் நேசமும் அவர்களிடையே நிலவவே இல்லை.

குஜராத்தையே ஒரு கலக்குக் கலக்கிய பிரபல மகாராஜ் மான நஷ்ட வழக்கின்போது இந்த விரிசல்களை அனைவரும் நன்கு உணர முடிந்தது. இந்த வழக்கிலும் வாதி ஜதுநாத்ஜி மகாராஜ்தான்.

ஆனால் இம்முறை அவருடைய தாக்குதலுக்கு இலக்கானவர் நர்மதாசங்கர் அல்ல, அவருடைய நண்பரும் இன்னொரு பிரபல சீர்திருத்தவாதியுமான கர்ஸன்தாஸ் முல்ஜிதான்.

முன்னரே குறிப்பிட்டதுபோல, கர்ஸன்தாஸ் முல்ஜி சமுதாய முன்னேற்றம் தொடர்பான சஞ்சிகை ஒன்றின் ஆசிரியராக இருந்தார். இச்சஞ்சிகையின் பெயர் 'சத்ய பிரகாஷ்.' நேர்மையுடனும் துணிவுடனும் கருத்துக்களை வெளியிட்டு வந்தது இந்த சஞ்சிகை. குறிப்பாக வைஷ்ணவ மகாராஜ்களின் நடத்தை, அவர்கள் தொடர்பான ஊழல்கள், சூதுவாதுகள் ஆகியவற்றை வெட்ட வெளிச்சமாக்குவது இப்பத்திரிகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்து வந்தது. இந்த மகாராஜ்கள் இந்த சஞ்சிகையை எப்படியாவது தொலைத்துக் கட்ட வேண்டுமென்று வெகு நாட்களாகக் காத்திருந்தனர். இந்த சஞ்சிகைக்குப் போட்டியாக இவர்கள் தமது சொந்தப் பத்திரிகை யொன்றைத் துவங்கினர். ஆனால் அதற்கு மக்களிடையே அதிக ஆதரவு இல்லை. எனவே இவர்கள் வேறு சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருந்தனர்.

அத்தகைய வாய்ப்பு விரைவில் வந்தது. 1860ஆம் வருடம் அக்டோபர் மாதம் 21ஆம் தேதியிட்ட 'சத்ய பிரகாஷ்' இதழில், 'பண்டைய இந்து தர்மம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாயிற்று. அக்கட்டுரையைப் பார்த்ததும், தம் எதிரியைப் பழிவாங்க அது ஒரு நல்ல வாய்ப்பை அளிப்பதாக மகாராஜ்களுக்குத் தோன்றியது. 1861ஆம் வருடம் மே மாதம் 14ஆம் தேதியன்று, கர்ஸன்தாஸ் முல்ஜிக்கும் அவருடைய தினசரிக்குமெதிராக மான நஷ்ட வழக்குத் தொடுத்தார், ஜதுநாத்ஜி. அவர் கோரிய நஷ்ட ஈட்டுத் தொகை ஐம்பதினாயிரம் ரூபாய்.

இந்த வழக்கு இருபத்து மூன்று நாட்கள் நீடித்தது. அந்த நகரில் மட்டுமல்ல, அந்தப் பிராந்தியம் முழுவதிலுமே பரபரப்பை ஏற்படுத்திவிட்டது இந்த வழக்கு. சனாதனிகள் மகாராஜின் பக்கமும், முற்போக்காளர்கள் கர்ஸன்தாஸின் பக்கமுமாகப் பிரிந்து நின்றனர். இந்தப் பிந்தைய கூட்டத்தில் ஹிந்துக்கள், பார்ஸிகள், வில்ஸன் கல்லூரி ஸ்தாபகரான டாக்டர் வில்ஸன் துரை முதலிய பலரும் இருந்தனர். வழக்கு, முற்போக்குவாதிகளுக்கு ஒரு பெரும் வெற்றியாக முடிந்தது. மகாராஜும் அவருடைய சகாக்களும் மண்ணைக் கவ்வினர். நாடெங்கிலும் கோலாகலம் பரவியது. நர்மதாசங்கரும் இந்த வெற்றியைக் கொண்டாட ஓரிரு கவிதைகள் எழுதினார்தான். ஆனால் உள்ளூர அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. சீர்திருத்த முகாமின் முன்னணியில் நின்று செயலாற்றிக் கொண்டிருந்த தமக்கும் தம்முடைய சகாக்களுக்கும் கிடைத்திருக்க வேண்டிய புகழையெல்லாம் கர்ஸன்தாஸ் ஒருவரே

அநியாயமாக அபகரித்துக் கொண்டதாக அவர் கருதினூர். ஏற்கெனவே அவருள் குமைந்துகொண்டிருந்த அவநம்பிக்கையையும் நிராசையையும் இந்நிகழ்ச்சி அதிகப்படுத்தியது. சீர்திருத்த முகாமின் இதர தலைவர்களுக்கும் அவருக்குமிடையே பிளவு அதிகரித்தது.

எனினும் சில திசைகளில் அவர்கள் இன்னமும் இணைந்து செயலாற்றி வந்தனர். மறுமணம் செய்துகொள்ள விரும்பிய அந்தணர் குலப் பெண்மணி ஒருத்தியை நர்மதாசங்கருக்கு அவருடைய நண்பரொருவர் அறிமுகம் செய்துவைத்தார். நர்மதாசங்கர் சீர்திருத்த முகாமின் இதர தோழர்களைக் கலந்து பேசி, அப்பெண்ணுக்காக நன்னடத்தையுள்ள கணவனொருவனைத் தேர்ந்தெடுத்து, இருவருக்கும் மணமுடித்து வைத்தார். ஆனால் சில தினங்களுக்குப் பிறகு கணவன், மனைவி இருவரும் தமக்கு உதவி செய்தவர்களுக்கு எதிராகத் திரும்பி அவர்கள்மீது அவதூறுகளைப் பொழியத் தொடங்கினர். சீர்திருத்தவாதிகள் இதனால் வெறுப்படைந்து அந்தத் தம்பதியர் பக்கமே இனி திரும்புவதில்லையென முடிவு செய்தனர். எனவே இவ்விஷயத்தில் இணைந்து செயலாற்றியதும் அவர்களிடையே சுமுகமான உறவுகள் தழைக்க உதவாமல் போயிற்று.

மஹிபத்ராம் இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் அவருடன் உணவருந்துகிற விஷயத்தில் இதே பிரச்சினைதான் எழுந்தது. தம்முடைய வகுப்புப் பெண்கள் விஷயத்தில் இழைக்கப்படும் அநீதிக்கெதிராகக் கொதித்தெழ வேண்டும், எதிர்ப்புக் குரல் எழுப்ப வேண்டும் என்றெல்லாம் நர்மதாசங்கரைத் தூண்டி வந்தவர்கள் யாரும் தாமே அவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராயில்லை.

ஆனால் இவ்விதச் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் நர்மதாசங்கர் தொடர்ந்து சமூக சீர்திருத்தப்பணிகளில் ஈடுபட்டு வந்தார். ஒரு முறை அவருடைய மராட்டிய நண்பர் ஒருவர், இந்துக்களிடையே நிலவிய சாதி வேற்றுமைகளைத் தகர்க்கும் நோக்கத்துடன் தாங்கள் நிறுவப்போகும் சங்கத்தில் நர்மதாசங்கரும் உறுப்பினராகச் சேர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கவி இதற்கு மகிழ்ச்சியுடன் ஒத்துக் கொண்டார்; ஆனால் கூடவே ஒரு நிபந்தனையும் விதித்தார். அச்சங்கத்தின் அங்கத்தினர்கள் யாவருமே தீவிரப் பிரசாரகர்களாக இருக்க வேண்டும், ஒவ்வொருவரும் எல்லா இடங்களுக்கும் சென்று சொற்பொழிவு செய்ய வேண்டும்; தம் உபதேசங்களைத் தாமும் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இதெல்லாம் நிச்சயமாய் நடக்கும் என்று நண்பர் உறுதியளித்தார். இந்த உறுதிமொழியின் அடிப்படையில் நர்மதா

சங்கர் சங்கத்தில் உறுப்பினரானார். ஆனால் விரைவிலேயே உறுப்பினர்களிடையே ஏற்பட்ட தீவிர கருத்து வேறுபாடுகள் காரணமாக சங்கம் கலைக்கப்பட்டது. இதன் பிறகும் ஆறு அங்கத்தினர்கள் மட்டும் சங்கத்தின் பணிகளைத் தொடருவதாக நிச்சயித்தனர். இந்த ஆறு பேர்களில் நர்மதாசங்கரும் ஒருவர். ஆனால் இவர்களிலும் ஐந்து பேர்கள் எதுவுமே செய்யாமல் சங்கத்திலிருந்து வெளியேறினர். இதன் பிறகு நர்மதாசங்கருக்கு வாளாவிருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

சமூக, கலாசாரப் பணிகளில் அவர் உற்சாகமாக ஈடுபட்டு வந்தபோதே வயிற்றுப்பாட்டுக்காகச் சில்லறை வேலைகள் பலவற்றை ஏற்க வேண்டியும் வந்தது. இத்தகைய வேலைகள் கிடைப்பதும் அரிதாகவே இருந்ததால் குடும்பம் மிகவும் சிரம தசையில் தான் இருந்தது. நர்மதாசங்கர் ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்துக்குச் சென்று அங்குள்ள மாணவிகளுக்குக் கவிதை பாடும் முறைகளைக் கற்பித்து வந்தார். ஒரு ஆங்கிலேயர் அவரிடம் சில நாட்கள் குஜராத்தி கற்றுக்கொண்டார். இதெல்லாம் பகுதி நேர வேலைகளாகவே இருந்தன. ஹரிகதாகாலட்சேபம் செய்யும் வாய்ப்பும் அவருக்கு ஒருமுறை கிடைத்தது.

## VIII

இவ்வாறு சமூக அரங்கில் வெவ்வேறு பணிகள், அலுவல்களில் ஈடுபட்டு வந்த நாட்களில் அவருள்ளிருந்த கவி வாளாவிருக்க வில்லை. இந்தக் காலகட்டத்தில்தான் அவருடைய நான்காவது, ஐந்தாவது, ஆறுவது, ஏழாவது மற்றும் எட்டாவது கவிதைத் தொகுதிகள்—''நர்மகவிதா'' என்ற தலைப்பில்—பிரசுரமாயின. பிங்களம், கவிதைக்கலை, மொழிவளம், ஆகியவை பற்றின சில முக்கியமான இந்தி நூல்களையும் அவர் படித்தார். 1860ஆம் ஆண்டு தத்துவ சோதக சபை என்ற ஓர் அமைப்பை அவர் நிறுவி னர். அதே ஆண்டில் ''நர்மகவிதா''வின் ஒன்பதாவது, பத்தாவது தொகுதிகள் வெளியாயின. இவை தவிர இலக்கியம், சமூகப் போக்குகள், ஆகியவை பற்றி அவர் உரைகள் ஆற்றினர். இவை பின்பு நூல்வடிவில் வந்தன. 'தயாராம் காவிய ஸங்க்ரஹ' என்ற தலைப்பில் கவி தயாராமின் கவிதைகளைத் தொகுத்து அவற்றைப் புத்தகமாக வெளியிடவும் செய்தார் அவர்.

இந்தக் காலகட்டத்தில் நர்மதாசங்கர் மேற்கொண்ட இன்னெரு சிறப்பான பணிக்காக அவர் பெரிதும் புகழப் பட்டார். குஜராத்தி மொழி அகராதி ஒன்றைத் தன்னந்தனியே தொகுத்தளித்ததே இந்தப் பணி. அவருடைய காலத்துக்கு முன்பு அத்தகைய ஒரு நூல் குஜராத்தியில் இருக்கவே இல்லை, எவ்வித வழிகாட்டிகளுமின்றி இந்த மிகப்பெரும் பணியை 1860ஆம் வருடம் நவம்பர் மாதம் 18ந் தேதி துவங்கினர் அவர். இத்த கைய ஒரு பணியில் தனியாளாக அவர் ஈடுபடக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் அல்லது தூண்டுதல்கள் எவை?—என உங்களில் சிலர் கேட்கலாம். இக்கேள்வியின் பதில் சுவையானது.

அவருடைய கவிதைகள் பள்ளிகளில் பாடமாக வைக்கப் பட்டிருந்தன. இக்கவிதைகள் புதிய பாணியில் எழுதப்பட்டவை, அவற்றில் வடமொழிச் சொற்களை அவர் அதிகமாகப் பயன்படுத்தி வந்தார். பல மாணவர்கள் இந்த வார்த்தைகளின் பொருள் விளங்காமல் திணறினர்; இத்தகைய சில புகார்கள் நர்மதா சங்கரையும் எட்டின. இதற்கொரு பரிகாரம் காணவேண்டு மென அவர் நிச்சயித்தார். என்ன செய்யலாம்? தன்னுடைய கவிதைகளிலிருந்த கடினமான வார்த்தைகளுக்கு அவர் ஒரு பட்டியல் தயாரிக்கத் தொடங்கினர். இந்த வார்த்தைகளின் அர்த்தங்களையும் கவிதைகளின் இறுதியில் சேர்த்துவிடலாமென்று

அவர் நினைத்தார். இந்த வேலை சுவாரஸ்யமானதாக இருந்தது, அவருக்குப் பிடித்திருந்தது. ஆனால் இத்தகைய கடினமான வார்த்தைகள் தமது கவிதைகளில் மிக அதிக எண்ணிக்கையில் இருப்பதை அவர் சில நாட்களுக்குப் பிறகு உணர்ந்தார். தன்னுடைய கவிதைகளிலுள்ள வார்த்தைகளை மட்டுமே தொகுப்பதற்கு பதில், குஜராத்தி மொழியின் வார்த்தைகள் அனைத்துக்கும் சரியான பொருள்களைக் கூறும் ஒரு அகராதி தயாரித்தாலென்ன என்று அவர் நினைத்தார்; அத்தகைய ஒரு அகராதி மாணவர்களுக்கு என்றென்றும் பயன்படக்கூடியதாக இருக்குமே! இந்த எண்ணம் விரைவில் ஒரு தீர்மானமாக உருவெடுத்தது; இந்த மகத்தான பணியில் அவர் உற்சாகமாக ஈடுபட்டார். இடையில் ஏற்பட்ட சில இடையூறுகளை வெற்றிகரமாகச் சமாளித்து, புத்தகம் விரைவில் அச்சாக வேண்டுமென்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டார். அவருடைய இத்தகைய விடாமுயற்சியின் பலனாக, அகராதியின் முதல் மூன்று தொகுதிகள் அவர் அந்த வேலையைத் துவங்கிய நான்கு ஆண்டுகளுக்குள்ளாக வெளிவந்தன. அகராதி ''நர்மகோஷ்'' என அழைக்கப்பட்டது.

இந்தப் புதிய முயற்சியின் கூடவே கவிதை முயற்சிகளும் தொடர்ந்தவாறிருந்தன; நியமங்களில்லாத தறுதலை வாழ்க்கையும் தொடர்ந்தது. 1860ஆம் வருடத்திலிருந்து அவருடைய இரண்டாம் மனைவி தஹிகௌரி அவருடன் குடித்தனம் நடத்தத் தொடங்கியிருந்தாள்; ஆனால் 1861ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் கௌரவமான குடும்பங்களைச் சேர்ந்த வேறு இரண்டு பெண்மணிகளுடன் தமக்கு நெருங்கிய தோழமை ஏற்பட்டதாக அவர் தமது சுயசரிதையில் குறிப்பிடுகிறார். இத்தகைய தோழமைகள், சமூக சீர்திருத்தங்களில் அவருக்கிருந்த இயல்பான ஆர்வம், அந்நாளைய 'ரொமாண்டிக்' சூழ்நிலை, ஆகிய எல்லாமாக அவரைப் புத்தம் புதிய விஷயங்க்ள்பற்றிக் கவிதைகள் புனையத் தூண்டியிருக்க வேண்டும். ''வைதவ்ய சித்ரா'' என்ற தமது கவிதையில் விதவைகளின் துயரம், அவர்களது அவலநிலை ஆகியவைபற்றி உணர்ச்சி ததும்ப எழுதினார் அவர். கவிதைப் பொருள், பாணி ஆகிய பல அம்சங்களிலும் அதற்கு முன்பு குஜராத்தியில் வெளிவந்த கவிதைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது அது. இதேபோல ஆங்கிலக் கவிஞர் வோர்ட்ஸ்வர்த்தின் ''லூஸிகிரே'' என்ற கவிதையை அவர் தமது பாணியில் குஜராத்தியில் மொழிபெயர்த்ததும் புதுமையாகவும் வித்தியாசமாகவும் இருந்தது. இத்தகைய பல பரிசோதனைகளில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். உதாரணமாக இயற்கை பற்றிய அவருடைய கவிதைகளைக் குறிப்பிடலாம். வேறு கவிஞர்கள் இதர பொருள்கள்பற்றி கவிதைகளெழுதும்போது இடையிடையே இயற்கை பற்றிக் குறிப்பிட்டது

உண்டுதான்; ஆனால் காளிதாசரின் ருது சம்ஹாரம் போலவோ அல்லது தாம்ஸனின் 'பருவங்கள்' பற்றிய கவிதைக்கு ஈடாகவோ ஒரு படைப்பு அப்போது குஜராத்தியில் கிடையாது. இக்குறையை நீக்குவதற்காக நர்மதாசங்கர் ரிது வர்ணன் என்ற தலைப்பில் வெவ்வேறு பருவங்களையும் இயற்கையெழிலையும் வர்ணிக்கும் நீண்ட கவிதையொன்றை எழுதினார். இது சிறந்த கவிதையோ இல்லையோ, ஆனால் ஒரு புதிய வித்தியாசமான முயற்சியென்பதில் ஐயமில்லை. தான் தொகுத்து வந்த அகராதியைத் தவிர, தனது பார்ஸி நண்பர்கள் நாளுபாய் ருஸ்தம்ஜியும் ஆர்தேஷெர் ஃபாரம்ஜியும் தொகுத்து வந்த ஆங்கில—குஜராத்தி லெக்ஸிகன் தொடர்பான வேலைகளிலும் அவர் பங்குகொண்டார். 1862 லிருந்து அவர் செய்யத் துவங்கிய இவ்வேலை அவருக்கு நல்ல ஊதியமும் அளித்தது. இதே காலகட்டத்தில் விரகதாப உணர்வுகளை வெளியிடும் சில கவிதைகளையும் தமது பயண அனுபவங்களை வெளியிடும் சில கவிதைகளையும் அவர் எழுதினார். இவை முற்றிலும் அந்தரங்கமான—தனித்த ஓர் பாணியில் அமைந்திருந்தன. அது வரையில் விரக உணர்வைப்பற்றி எழுத விரும்புகிறவர்கள் ராதையையும் கிருஷ்ணனையும் பாத்திரங்களாக்கி அந்தப் போர்வைக்குள் ஒளிந்துகொண்டு தம் அனுபவங்களை வெளியிடுவதுதான் வழக்கமாயிருந்தது. நர்மதாசங்கரின் கவிதைகள் இம்மரபை உடைத்தெறிந்தன. அவருடைய பயணக் கவிதைகளும், இதே போல ஒரு புதிய மரபைத் தோற்றுவித்தன.

நர்மதாசங்கர் தம் கவிதைகளுக்காக புதிய கருக்கள், விஷயங்கள் மற்றும் வடிவங்களைத் தேடிய வண்ணமிருந்தார். அவர் ஏற்கெனவே அகநிலைச்சார்புள்ள கவிதை, இயற்கைக் கவிதை, சமூக உணர்வுள்ள கவிதை, துதிக் கவிதை, யுத்த முரசு கொட்டும் கவிதை முதலிய பலரகக் கவிதைகளை எழுதிவிட்டிருந்தார். ஆனால் இதுவரை காவியமேதும் இயற்றவில்லை. அத்தகையதொரு முயற்சியில் இறங்கினாலென்ன? ஆனால் காவியத்துக்கென தனித்த ஒரு சீர் இருக்கவேண்டுமென்று அவர் நினைத்தார். அவரோ பிற குஜராத்திக் கவிஞர்களோ அதுகாறும் பயன்படுத்தி வந்த சீர்களேதும் காவியத்தின் தேவைகளுக்குகந்ததாக இல்லை. அவரிடமிருந்த புத்தகங்களில் அவர் தேடிப் பார்த்தார்; ஆனால் அவற்றில் பொருத்தமாக எதுவும் கிடைக்கவில்லை. கடைசியில் அவர் புதிதாக ஒரு சீரை உருவாக்கினார். அவர் எழுத நினைத்த காவியம் எழுதாமலே நின்றுபோயிற்று; ஆனால் அதை எழுத அவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டதென்னவோ உண்மை. புதிய சீரில் அவர் எழுதின சில வரிகள், அவர் மேற்கொண்ட முயற்சியின் பிரும்மாண்டத்தை நினைவூட்டுவனவாக இன்றளவும் உள்ளன. அவர் உருவாக்கின சீரும்கூட அவருடைய பணிக்குப் போதுமான

தாக இல்லை; அவருக்குப்பின் வந்தவர்கள் இத்திசையில் பரிசோதனைகள் செய்ய ஊக்கமளிப்பதாக இல்லை. இன்று வரையிலும் குஜராத்தியில் காவியப்பொருள்களைக் கையாள்வதும் அப்பணிக்கேற்றதொரு சீரை உருவாக்குதலும் சாத்தியமாகவில்லை; இத்திசைகளில் பரிசோதனைகளும் தேடல்களும் தொடர்கின்றன. நர்மதாசங்கர் ஒருவிதத்தில் இந்தத் தேடலின் முன்னோடி ஆவார்.

அந்நாட்கள் அவருடைய எழுத்து வாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கையின் உற்சாகம் மிகுந்த நாட்களாக விளங்கின. 'இந்து சமூகத்தினரின் நலிவும் வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் அவர் எழுதின ஒரு நீண்ட கவிதை பெரும் பாராட்டைப் பெற்றது. அவருடைய சொற்பொழிவுகளை மக்கள் கவனமாகக் கேட்டனர்; அவருடைய நூல்கள் நன்கு விற்பனையாயின; எல்லா சமூகத்தினரிடையேயும் அவர் நண்பர்களைப் பெற்றிருந்தார். இவர்களில் மிக முக்கியமானவரைப்பற்றி நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். பிரபல சம்ஸ்கிருத பண்டிதரான டாக்டர் பந்தர்க்கரும் அவருடைய மற்றொரு குறிப்பிடத்தக்க நண்பர். பார்ஸி சமூகத்தைச் சேர்ந்த பலர் தாம் நர்மதாசங்கரின் நண்பர்களென்று கூறிக்கொள்வதில் பெருமையடைந்தனர். லட்சக்கணக்கில் பணம் பண்ணிய பாட்டியாக்களும் 'பனியா'க்களும் அவரைத் தம் ஆப்த நண்பராகக் கருதினர்; அவர் காலடியில் பணமும் பரிசுமாகக் கொண்டு குவித்தனர். அவருடைய நண்பர் வட்டத்தில் சில ஆங்கிலேயச் சீமான்களும்கூட உண்டு. கவர்னரின் மாளிகையில் விருந்துகள், கேளிக்கைகள் நடக்கும்போது அங்கு வழக்கமாக அழைக்கப்படும் சிறப்பு விருந்தினர்களில் நர்மதாசங்கரும் ஒருவராயிருந்தார்.

இத்தகையதொரு சூழலில் நர்மதாசங்கர் சந்தோஷமாகவே இருந்தார். புகழ் இருந்தது, நண்பர்கள் இருந்தனர், செல்வாக்கு இருந்தது. நர்மதாசங்கர் ஒவ்வொரு முறையும் வெளியூர்ப் பயணங்களுக்குப் பிறகு பம்பாய் திரும்பும் வேளையில் துறைமுகத்தில் அவரை வரவேற்க சுமார் பத்திலிருந்து பதினைந்தாயிரம் பேர்கள் வரை காத்திருப்பார்களென்று ஒருவர் எழுதியுள்ளார். நிலையான வேலையைத் துறந்து, வயிற்றுப்பாட்டுக்காக டியூஷன் சொல்லிக்கொடுப்பது போன்ற சில்லறை வேலைகளையே அவர் நம்பியிருந்தபோதிலும் வாழ்க்கை நடத்துவது அவருக்கு அத்தனை சிரமமானதாக இருக்கவில்லை. பல வழிகளில் பணம் அவரைத் தேடி வந்தது. அவருடைய புத்தகங்கள் நன்கு விற்பனையாயின; அத்துடன் அவருடைய பணக்கார நண்பர்களும் அவருக்கு ஏராளமான பரிசுகளை வாரி வழங்கினர். இப்பரிசுகள் எப்படிப்பட்டவை

என்றறிய இத்தகைய ஒரே ஒரு பரிசைப்பற்றி அறிந்துகொண்டால் போதுமானது.

அவருடைய லட்சாதிபதி நண்பர்களில் ஒருவர் கர்ஸன்தாஸ் மாதவ்தாஸ் என்ற பெரும் வியாபாரி. இவருடைய உதவியால் சமூக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்காக ஒரு மிஷனெரி ஸ்தாபனத்தை நிறுவலாமென்ற யோசனை நர்மதாசங்கருக்கு உதித்தது. இந்த மிஷனின் தலைமைச் செயலகம் பம்பாயில் இருக்கும்; ஆனால் அதில் பணியாற்றுவோர் குஜராத்தின் வெவ்வேறு கிராமங்களிலும் நகரங்களிலும் சீர்திருத்தக்கொள்கைகளைப் பரப்ப அலைந்த வண்ணமிருப்பர். நர்மதாசங்கர் இவ்வியக்கத்தின் பிரதம இயக்குநராகவும் பேச்சாளராகவும் இருப்பார். மிஷனின் அன்றாட அலுவல்களைக் கவனிக்க ஓர் அலுவலகம் இருக்கும்; பணியாளர்கள் இருப்பர். கர்ஸன்தாஸ் மாதவ்தாஸ் இத்தகைய தொரு மிஷனை நிறுவுவதற்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்வதாக வாக்களித்தார். ஆனால் இதர தரப்புகளிலிருந்து உதவி கிடைக்காததால் இந்த யோசனையைக் கைவிடவேண்டி வந்தது.

இதே கர்ஸன்தாஸ் மாதவ்தாஸ் 1862ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் நிறுவப்பட்ட ஒரு புதிய கம்பெனியின் முக்கிய பாகஸ்தர்களுள் ஒருவராக இருந்தார். இந்தக் கம்பெனியின் பெயர் ஃப்ரயர் நிலச் சீர்ப்பாடு கம்பெனி (Friar Land Reclamation Company) சூதாட்ட மனப்போக்குள்ளவர்களை இக்கம்பெனி பெரும் எண்ணிக்கையில் தன்பால் ஈர்த்தது, அதன் பங்குகள் அமோகமாக விற்பனையாயின. பங்குகளின் விலை பரபரவென்று உயர்ந்தது; அக்கம்பெனியில் ஒரே ஒரு பங்காவது வாங்கிவிட வேண்டுமென்று அனைவரும் பரபரத்தனர். கம்பெனியின் முக்கிய ஸ்தாபகர் என்ற முறையில் கர்ஸன்தாஸ் தன் நண்பர்கள் பலருக்கு தொடக்க விலைக்கே பங்குகளை அளித்திருந்தார். நர்மதாசங்கரும் ஒரு நண்பர்தான், ஆனால் அவர் வணிகத்துறையில் இல்லை. நர்மதாசங்கரின் சில நண்பர்கள், கர்ஸன்தாஸிடம் சென்று புதிய கம்பெனியின் பங்கு ஒன்று வாங்கிக்கொள்ளுமாறு அவருக்கு யோசனை கூறினர். ஆனால் கவிக்கு இது பிடிக்கவில்லை; அவர் இவர்களிடம் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தாரே தவிர கர்ஸன்தாஸிடம் போகவில்லை.

இச்சந்தர்ப்பத்தில்தான் ஒருமுறை கர்ஸன்தாஸ் தமது பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காகச் சில நண்பர்களைத் தம் வீட்டுக்கு அழைத்தார். இவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் நர்மதாசங்கரும் ஒருவர். நர்மதாசங்கர் விருந்துக்குக் கிளம்பும்போதே, அங்கு பங்குகளைப்பற்றி எதுவும் பிரஸ்தாபிக்கக் கூடாதென்ற உறுதியான தீர்மானத்துடன் சென்றார். அவர் வீட்டுக்குள் நுழைந்ததுமே

கர்ஸன்தாஸ் அவரைத் தம்மருகில் அமரச் செய்தார். அவருக்காகக் கம்பெனியின் ஒரு பங்கைத் தாம் ஒதுக்கி வைத்திருப்பதாகக் கூறினர். இதனுல் கவி மிக மகிழ்ச்சியுற்ருரெனினும், ''இதெல்லாம் எதற்காக?'' என்று உபசாரமாகக் கூறினர். சில தினங்களுக்குப் பிறகு மற்ருெரு நண்பர்மூலம் இந்தப் பங்கை விற்றதில் அவருக்கு 5,700 ரூபாய் லாபம் கிடைத்தது. அவருடைய எண்ணற்ற கடன்களை அடைக்க இது பயன்பட்டது.

ஏராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருந்த அந்த காலகட்டத்திலும் கூட அவருக்குக் கடன்கள் இருந்ததென்பது வியப்பைத் தரலாம். துரதிர்ஷ்டவசமாக அவர் அந்நாட்களில் மிக ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்தார். 'தாம் தூம்' என்று செலவு செய்தார். ஆயிரக்கணக்கில் சம்பாதித்தார்; அதற்குமேலேயே செலவும் செய்தார். கட்டுப்பாடற்ற உல்லாச வாழ்க்கை; குடி, பெண் சகவாசம் எல்லாமே உண்டு. அந்நாட்களிலேயே மாதம் 75 ரூபாய் வீட்டுவாடகை கொடுத்து வந்தார் அவர். ஒரு அரசனுக்குரிய தடபுடலுடன் வீட்டுக்கு வருகிறவர்களை உபசரிப்பார்; நினைத்த மாத்திரத்தில் தன்னிடமிருந்த பொருள்களை யாருக்காவது தூக்கிக் கொடுத்து விடுவார். நாளை என்ன ஆகப் போகிறதென்ற கவலையே இன்றி வாழ்ந்தார் அவர்.

ஆனுல் நாளை என்பது வரத்தான் செய்கிறது. கர்ஸன்தாஸ் மாதவ்தாஸ் அவருடைய போஷகராக இருந்தார்; தொடர்ந்து பல உதவிகள் செய்து வந்தார். ஒரு முறை கவி தல்பத்ராம் தாம் பிரபலமாக விளங்கிய காலத்தில் பம்பாய் வந்திருந்தபோது அகமதாபாத்தில் தனக்கென சொந்த வீடு கட்ட விரும்புவதாகக் கூறி பலரிடம் நிதி திரட்டத் தொடங்கினர். கர்ஸன்தாஸிடமும் அவர் வந்தார்; அவரை வானளாவப் புகழும் கவிதை ஒன்றை அவர் முன் கூறி, தம் வீடு கட்டும் செலவுக்காகப் பெரும் தொகை ஒன்று கோரினர். ஆனுல் கர்ஸன்தாஸுக்கு இந்த நடத்தை வெறுப்பையளித்தது; அவர் தல்பத்ராமுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. இந்தச் சம்பவம் நடந்த சில தினங்களுக்குப் பிறகு அவர் நர்மதாசங்கரைச் சந்தித்தபோது இந்நிகழ்ச்சியைப் பற்றி அவரிடம் கூறி, ''நான் ஏதாவது தருவதென்ருல் என் நர்மதுக்குத் தான் தருவேன்'' என்று கூறினர். (நர்மதாசங்கரை மக்கள் பிரியமாக 'நர்மத்' என அழைத்தனர். இன்றும் குஜராத்தில் இந்தச் சிறிய பெயராலேயே அவர் பரவலாக அறியப்படுகிருர்) நர்மத் வெறுமனே புன்னகை செய்தார்; எதுவும் பேசவில்லை. இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு கர்ஸன்தாஸ் நர்மதாசங்கருக்கு 5000 ரூபாய்க்கு ஒரு செக் அனுப்பி வைத்ததுடன், நர்மதாசங்கரின் புத்தகங்களை அச்சடிக்கும் செலவைத் தான் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினர்.

ஆனால் திடீரென்று நிலைமை மாறியது; பம்பாய் பங்கு மார்க்கெட்டில் ஏற்பட்ட சரிவைத் தொடர்ந்து கர்ஸன்தாஸ் மற்றும் இதர நண்பர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு அவர்கள் நலிந்த நிலையை அடைந்தனர். இனி அவர் அவர்களிடமிருந்து எந்த உதவியும் எதிர்பார்க்க முடியாது. மேலும் 1864ஆம் வருடம் ஜனவரி மாதம் 18ஆம் தேதி நர்மதாசங்கரின் தந்தை இறந்தது அவருக்குப் பெரும் இழப்பாக இருந்தது. தன் தந்தையை அவர் மிகவும் நேசித்திருந்தார்; அவருடைய பரபரப்பானதும் குழப்பங்கள் நிறைந்ததுமான வாழ்க்கையில் தந்தை ஒரு நிதானப்படுத்தும் சக்தியாக விளங்கினார்; கருணையும் ஆறுதலும் அளிக்கும் அன்பு வடிவாக திகழ்ந்து வந்திருந்தார். பங்கு மார்க்கெட் சரிவு புத்தகங்களின் விற்பனையையும் பாதித்தது; பெருமளவில் புத்தகங்கள் வாங்கும் வழக்கமுடைய உயர் மத்தியதர வகுப்பினர் இச்சரிவினால் பலமாகத் தாக்கப்பட்டு, புத்தகங்கள் வாங்குவதை நிறுத்தினர். பம்பாயில் தமக்குப் பழக்கமாகிப் போயிருந்த தடபுடலான பாணி வாழ்க்கையை இனித் தொடர முடியாதென நர்மதாசங்கர் உணர்ந்தார். அது இனி அவருக்குக் கட்டுப்படியாகாது என்பதுடன், தனது குடும்ப வாழ்வில் அமைதியும் ஸ்திரத்தன்மையும் ஏற்பட வேண்டுமென்றும் அவர் விரும்பினார். பம்பாயிலேயே இருக்கும் வரையில் அது சாத்தியமாகப் போவதில்லை.

1865ஆம் வருடம் பம்பாயை விட அமைதியானதாகவும் விலைவாசிகள் குறைவாகவும் இருந்த சூரத் நகருக்குக் குடிபெயர்ந்தார் அவர். அதற்கு முந்தின வருடம்தான் தாண்டியோ (தண்டோராக் கோல்) என்ற பெயரில் சில துண்டுப் பிரசுரங்கள் வெளியிடத் தொடங்கியிருந்தார் அவர். மக்களை அவர்களுடைய பல்லாண்டு கால உறக்கத்திலிருந்து உலுக்கி எழுப்பி அவர்களைச் செயல் வீரர்களாக்குவதே இப்பிரசுரங்களின் நோக்கம். இந்த வேலையின் நிமித்தமாகவும் அவர் சூரத்தில் இருப்பது அவசியமாக இருந்தது.

ஆனால் சூரத்துக்கு வந்தால் செலவு குறையுமென்று அவர் நினைத்தது நடக்கவில்லை. பழக்கங்களை மாற்றிக்கொள்வது இலேசா என்ன? சூரத்துக்கு வந்த பிறகும் பம்பாயில் ஒரு வாடகை வீட்டை அவர் வைத்துக் கொண்டிருந்தார், பம்பாய்க்குப் போகும் சந்தர்ப்பங்களில் தங்குவதற்காக. அவருக்கோ அடிக்கடி பம்பாய் போய்வர வேண்டியிருந்தது. மேலும் சூரத்தில் நிலம் வாங்கி அங்கு ஒரு வீடு கட்டினதில் 12,000 ரூபாய் செலவாயிற்று. அந்நாட்களில் இது ஒரு பெரிய தொகைதான். இந்த வீட்டுக்கு அவர் சரஸ்வதி மந்திர் என்று பெயரிட்டார். வீட்டின் வாசற்புற வளைவின் மீது தனது கொள்கை வாசகத்தை—'பிரேம் ஷௌர்யா' (அன்பும் தீரமும்)—பொறிக்கச் செய்தார்.

அவருடைய அதிர்ஷ்டத்தின் இத்தகைய ஏற்ற இறக்கங்களிடையே எழுத்து வேலைகள் மட்டும் எப்போதும்போல நடந்து கொண்டிருந்தன. அவருடைய கவிதைகளனைத்தும் ஒரே தொகுதியில் தொகுக்கப்பட்டுவெளிவந்தன. இதேபோலஅவருடையவசனப் படைப்புகளும் மற்றொரு தொகுப்பாக வெளிவந்தன. இவற்றுடன் கூடவே அவருடைய இலக்கண நூலின் முதலிரண்டு பாகங்கள் ''நர்மவியாகரண்'' என்ற தலைப்பில் வெளிவந்தன. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, 1866ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 18ஆம் தேதியன்று அவர் தமது சுயசரிதையை எழுதி முடித்தார். துணிவும் நயமும் நேர்மையும் மிக்க இச்சுயசரிதையின் பெயர் ''மாரி ஹகிகத்'' (என் கதை).

இந்தச் சுயசரிதையை அவர் எழுதக் காரணமான சூழ்நிலை சுவையானது.

1866ஆம் ஆண்டு நர்மதாசங்கருக்கு முப்பத்து மூன்று வயதே ஆகியிருந்தது. அப்போது அவர் புகழின் உச்சத்தில் இருந்தார். 1855ல் தனது முதல் கவிதையை எழுதிய அவர் அதன் பிறகு இந்தப் பதினொரு ஆண்டுகளில் நிறைய எழுதியிருந்தார், இன்னமும் எழுதிக்கொண்டிருந்தார். ஆனால் அவர் தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருப்பது போல, 1866ஆம் ஆண்டு கவிதைத் துறையில் உற்சாகமாக ஈடுபட்டிருந்தவர்கள் மிகக் குறைவாக இருந்தனர்; கவிஞர்களுக்கு இச் சூழ்நிலை உற்சாகம் தருவதாக இல்லை. எனவே அவர் செய்யக்கூடியது என்ன? கவிதை என்பது ஆணைகளின் பிரகாரம் எழுதக்கூடியதல்ல, குறைந்த பட்சம் ஓர் உண்மையான எழுத்தாளனுக்கு அது சாத்தியமில்லை. ஆனால் எதையாவது எழுதித்தான் ஆகவேண்டும். கவிதை என்றில்லாமல் வேறு வகை முயற்சிகளில் ஈடுபட்டால் என்ன?

இவ்வாறு யோசிக்கும்போதுதான் அவருக்குச் சுயசரிதை எழுதுகிற யோசனை வந்தது. இந்தப் புதிய முயற்சியில் தான் ஈடுபடக் காரணமாயிருந்த பின்னணியை அவரே விளக்குகிறார்:

முதலாவதாக, அதுவரை குஜராத்தி மொழியில் சுயசரிதை எழுதும் மரபு ஒன்று கிடையாது. இந்த மரபைத் தான் அறிமுகப்படுத்த வேண்டுமென்று அவர் விரும்பினார். இரண்டாவதாக, டாக்டர் பௌதாஜி, கர்ஸன்தாஸ் முல்ஜி, ருஸ்தம்ஜி குஸ்தாத்ஜி ஈரானி போன்ற நண்பர்கள் அவரைச் சுயசரிதை எழுதுமாறு தூண்டியவண்ணமிருந்தனர். அப்போது அவருடைய வாழ்க்கையின் கதையைத் தாங்கள் அறிந்துகொள்ளலாமே என்று அவர்கள்

கூறினர். மூன்றாவதாக, தானே தன்னைப் பற்றி நன்கு உணர்ந்து கொள்ள, சுயசரிதை எழுதுதல் உதவியாயிருக்குமென்று நர்மதா சங்கர் நினைத்தார். நாலாவதும் மிக முக்கியமானதுமான காரணம், ஒரு மனிதன் இறந்த பிறகு அவனைப் பற்றிய உண்மைகளை அறிதல் இயலாமல் போகிறதென்பது.

ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் அவர் நிச்சயமுள்ளவராக இருந்தார். தான் ஒரு சுயசரிதை எழுதினால் அது தனக்காக மட்டுமே எழுதப்படுவதாக இருக்கும் என்பதே அது. ஆனால் அதை அவர் அச்சிடச் செய்வார், அதுவே அவர் வழக்கம். தான் எழுதுகிற எதையும் அவர் அச்சிட்டு வைத்துக்கொள்வார், எழுதினவற்றைப் பாதுகாக்க அது உதவியது. நாலைந்து பிரதிகளே அச்சிட்டால் கூடப் போதுமானது. அவருடைய மறைவுக்குப் பின் மக்கள் அவர் எழுதினவற்றை எங்கும் யாவரிடையேயும் பரப்ப விரும்பினால் அது அவர்கள் இஷ்டம். ஆனால் அவர் உயிருடனிருந்த வரையில் அது அந்தரங்கமான ஒரு ரகசியமாகவே காப்பாற்றி வைக்கப்படும். . . அதை அவர் எப்படியும் எழுதிவிட வேண்டுமென்பது மட்டும் அதிமுக்கியமானது. எனவே அவர் அதை எழுதினார். . . . . . .

அவருடைய சுயசரிதை படிக்கத் தெவிட்டாதது. குஜராத்தி மொழியில் எழுதப்பட்ட முதல் சுயசரிதை அவருடையது என்ற போதிலும்கூட அது மிக முதிர்ச்சியான ஒரு படைப்பாக விளங்குகிறது. தனது சுயசரிதையில் அப்போது வாழ்ந்திருந்த சில மனிதர்கள் தொடர்பான பெயர்கள், நிகழ்ச்சிகளை மட்டும் அவர் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார், பெருந்தன்மை கருதி. ஆனால் நிஜ வாழ்க்கையில் பல கட்டங்களில் அவர் சுய விளம்பரம், அகம்பாவம் ஆகியவற்றை வெளிக்காட்டிய போதிலும் அவருடைய சுயசரிதையில் உண்மைத் தன்மையே மிளிருகிறது. ஏறத்தாழ ஒரு இலட்சிய சுயசரிதையாக அது விளங்குகிறது.

தம் சுயசரிதையை அவர் எழுதி முடித்த 1866ஆம் வருடம் அவருடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டாகும். அந்த ஆண்டிலிருந்து அவருடைய கவிதைத் திறன் மங்கலாயிற்று, அவருடைய மனப்போக்கிலும் குறிப்பிடத்தக்க ஒரு மாறுதல் ஏற்பட்டது. இந்தக் கட்டத்துக்குப் பிறகும் அவர் நிறைய எழுதியிருக்கிறார்தான்; இந்த எழுத்துக்களும் மிகவும் திட்டமிட்டும் சிந்தனை செய்தும் எழுதப்பட்டவைதான்; சுயசரிதையை முடித்த பிறகும் சுமார் இருபது வருடங்கள் அவர் வாழ்ந்திருந்தார் தான். ஆனால் இந்தத் தேதிக்குப் பிறகு (18–9–1866) அவர்

எழுதினவற்றில் காணக்கிடைப்பது முற்றிலும் வித்தியாசமான, புதுமையான நர்மதாசங்கர் என்பதில் சந்தேகமில்லை. இந்த நர்மதாசங்கர் பழைய நர்மதாசங்கரைப் போலவே ரசமானவர், துருதுருப்பும் துடிப்பும் மிக்கவர்; எனினும் வித்தியாசமானவர். இந்த வித்தியாசமான நர்மதாசங்கர் பற்றிய தகவல்களும் சுவையானவையே. அவற்றை இனிக் காண்போம்.

# IX

நர்மதாசங்கரின் முதல் முப்பத்தி மூன்று ஆண்டுகளைப் பற்றின தகவல்கள் கிடைக்கிற அளவுக்கு அவருடைய கடைசி இருபது ஆண்டுகள் பற்றின தகவல்கள் கிடைப்பதில்லை. இது ஒரு துரதிர்ஷ்டம்தான். தமது இளமைப் பருவத்திலிருந்தது போலவே இந்தக் கடைசி ஆண்டுகளிலும் அவரிடம் துருதுருப்புக்கும் துணிச்சலுக்கும் பஞ்சமிருக்கவில்லை. மனம் புதிது புதிதாகச் சிந்தித்த வண்ணமிருந்தது; பல்வேறு துறைகளில் லயித்தவண்ணமிருந்தது. இந்தக் கட்டத்தில் அவர் கவிதைகள் எழுதுவது மிகவும் குறைந்து போயிற்றென்பது உண்மைதான்; ஆனால் அதே சமயத்தில் இந்தக் கடைசி இருபது ஆண்டுகளில் அவர் மிக அதிகமாகப் படித்தார், எழுதினார், சிந்தித்தார் என்பதும் உண்மைதான். தொடக்க நாட்களில் எந்தக் கொள்கைகளின் நிமித்தம் அவர் ஆவேசமாகப் போராடி வந்தாரோ அவற்றில் இப்போது அவருக்குச் சிரத்தைக் குறைந்து சில சமயங்களில் முற்றிலும் மாறுபட்ட முறையில் அவர் பேசத் தொடங்கியிருந்தாரென்றாலும், அவருடைய பிடிவாதம் சிறிதும் குறையாமல் பழையபடியேதான் இருந்தது. ஏற்கெனவே நாம் குறிப்பிட்டது போல இக்கட்டத்தில் அவருடைய நிதி நிலை மிக மோசமாக இருந்தது; பணப் பற்றாக்குறை ஒரு பளுவாக அவர் மனதில் எப்போதும் அழுத்திக்கொண்டிருந்தது. ஆனால் அவருடைய படைப்புகளின் எண்ணிக்கை இதனால் அதிகம் பாதிக்கப்படவில்லை. பழைய குஜராத்தி இலக்கியங்கள் பற்றின ஆய்வுகளை மேற்கொள்வதில் அவருக்கிருந்த உற்சாகமும் மாறாமல் அப்படியே இருந்தது; இத்தகைய ஆராய்ச்சிகளில் ஈடுபடப் பலரிடம் உதவி கோரியவண்ணமிருந்தார்.

மேற்சொன்னவற்றை நிரூபிக்க ஒரு சிறு உதாரணம் போதுமானது. ஒரு முறை ஒரு பதிப்பாளர் வித்தோ முறையில் ஒரு கவிதைப் புத்தகம் அச்சிட முற்பட்டபோது அவருக்காகவேண்டி நர்மதாசங்கரின் தந்தை பழங்காலத்துக் கவிஞர்களின் கவிதைகள் பலவற்றைப் பிரதி செய்து கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது சிறுவனாயிருந்த நர்மதாசங்கர் இக்கவிதைகளைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றார். பின்னாளில் குஜராத் பிரதேச மொழிச் சங்கம் துவக்கிய ஒரு வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் கவி தல்பத்ராம் 'குஜராத்தி காவ்ய-தோஹன்' என்ற தலைப்பில் இத்தகைய பழங் கவிதைகளின் முதலாவது தொகுப்பு என ஒரு நூலை வெளிக்

கொணர்ந்தார். இந்த நூலில் தல்பத்ராம் இத்தகைய சில நீண்ட கவிதைகளின் பகுதிகளைச் சேர்த்திருந்தார்; ஆனால் எந்தக் கவிதையும் முழு வடிவில் இடம் பெற்றிருக்கவில்லை. இவ்வாறு கவிதைகளைச் சிதைந்த உருவில் அரையும் குறையுமாக வெளியிட்ட முறை நர்மதாசங்கருக்குப் பிடிக்கவில்லை. தனது ''தாண்டியோ'' இதழில் இவ்வழக்கத்தை வன்மையாகக் கண்டித்து எழுதினார் அவர். இந்த விமரிசனத்துக்காகக் கவலைப்படாமல் தல்பத்ராம் முதல் தொகுப்பின் பாணியிலேயே இன்னொரு தொகுப்பும் வெளியிட்டு, அதன் முன்னுரையில் ''இதனை விடவும் சிறப்பான தொகுப்புக்கு ஆசைப்படுகிறவர்கள் தாமே அத்தகைய ஒரு தொகுப்பை வெளியிடலாம்'' என்று எழுதினார். இது நர்மதா சங்கரை உசுப்பிவிட்டது. பழங் கவிதைகளைத் தாம் புதிய பாணியில் தொகுத்து வெளியிட்டாலென்ன என்று அவர் நினைத்தார். ஆனால் அதற்கு நிறையப் பணம் தேவைப்படும். எனவே அவர் ஜவேரிலால் உமியா சங்கரைத் தம் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு, சுமார் 25,000 ரூபாய் வரை நிதி உதவிகோரி இலக்கிய அன்பர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்தப் பணத்தைக் கொண்டு குஜராத்தின் பல பழைய கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு வெளியிடப்படுமென்று அறிவித்தார். அன்றையச் சூழ் நிலையில் இலக்கிய அன்பர்களிடம் அந்த அளவு பணமில்லை; அவருடைய வேண்டுகோளுக்கு யாரும் செவிசாய்க்கவில்லை. ஆனால் சில வருடங்களுக்குப் பிறகு நர்மதாசங்கரின் மாணவரும் விசிறியுமான இச்சாராம் சூர்யராம் தேசாய் என்பவர் மூலம் இக்கருத்து செயல்வடிவம் பெற்றது; 'பிருஹத் காவ்ய தோஹன்' என்ற தலைப்பில் பழங்கவிஞர்களின் படைப்புகளை எட்டு தொகுதிகளில் தொகுத்து வெளியிட்டார் இவர்.

நர்மதாசங்கரின் இந்த ஒரு வேண்டுகோள் நல்ல வரவேற்புப் பெறாவிட்டாலும், பொதுவாக மக்களிடையே அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. பல காரியங்களை அவரால் சாதித்துக்கொள்ள முடிந்தது. ஸர் அலெக்ஸாண்டர் கிராண்ட் என்ற ரசிக உள்ளம் படைத்த ஆங்கிலேயரை நர்மதாசங்கர் சந்தித்தபோது நடந்த நிகழ்ச்சியொன்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

இரண்டு நண்பர்கள் நர்மதாசங்கரை இந்த ஆங்கிலேயரிடம் அழைத்துச் சென்று அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அலெக்ஸாண்டர் கிராண்ட் அவரைச் சகல மரியாதைகளுடனும் வரவேற்று, அச்சமயத்தில் அவருடனிருந்த ப்ரொபசர் ஆக்ஸன் ஹாம், ப்ரொபசர் புல்லர் இருவருக்கும் நர்மதாசங்கரை அறிமுகம் செய்து வைத்தார். கவி தன் புத்தகங்களின் பிரதிகளை

அவர்களிடம் காண்பித்தார். கிராண்ட் மகிழ்ந்து, சில கவிதைகளை நீங்களே படித்துக் காட்டுங்களேன் என்றார். கவி உடனே தனது காதல் கவிதை ஒன்றைப் பாடிக் காட்ட, கிராண்ட் உற்சாகத்துடன் ''என்ன அழகாகப் பாடிக் காட்டுகிறீர்கள்!'' என்று பாராட்டினார். பிறகு கவி அந்தக் கவிதையின் பொருளை அவர்களுக்கு விளக்கிக் கூறினார். அதைக் கேட்டு அவர்களுடைய மகிழ்ச்சி அதிகமாயிற்று. பணத் தட்டுப்பாடு காரணமாகத் தனது சில புதிய நூல்களை வெளியிட முடியாத நிலையிலிருப்பதாக நர்மதா சங்கர் கிராண்டிடம் கூறினார். கிராண்ட் உடனே அவரைச் சர்க்காருக்கு விண்ணப்பிக்குமாறு கூறி, அவருக்கு நிதியுதவி கிடைக்கத் தான் முயற்சி எடுத்துக்கொள்வதாக உறுதியளித்தார். இதன் பிறகு அவர் கூறியது இன்னமும் விசேஷமானது. நர்மதா சங்கர் விடைபெற்றுச் செல்ல இருக்கையில், கிராண்ட் கூறினார்: ''இப்போது நீங்கள் முதன்முதலாக எங்களுக்குப் பாடிக் காட்டிய கவிதையின் மொழிபெயர்ப்பை என்னிடம் தாருங்கள். அதை எனது நண்பரும் இங்கிலாந்தின் சிறந்த கவிஞருமான டென்னிஸன் பிரபுவுக்கு அனுப்புகிறேன்.''

மற்றொரு ஆங்கிலேயரான மிஸ்டர் ஹோப்பும் அவருடைய கவிதைகளைப் பாராட்டி ஊக்கமூட்டும் வார்த்தைகளைக் கூறியதுடன் அவருக்கு வேண்டிய நிதியுதவி பெற்றுத் தருவதாக வாக்களித்தார்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. நர்மதாசங்கர் குஜராத்திகளுடைய மட்டுமல்ல, பிற மொழிக்காரர்களின் அன்புக்கும் பாத்திரமானவராக விளங்கினாரென்பது ஒன்று. அவருடைய நிதி நிலை மிக மோசமாயிருந்ததால் கிடைத்த எந்த ஒரு சிறு துரும்பையும் அவர் ஆவலுடன் பற்றிக் கொள்ள வேண்டியிருந்ததென்பது இன்னொன்று. துரதிர்ஷ்டவசமாக அவருடைய வாழ்நாள் முழுவதும் இத்தகைய நிலைதான் நீடித்தது; அவருடைய வாழ்வின் ஆரம்ப கட்டங்களில் பிரபலமான புள்ளியாக விளங்கி, வசதியான வாழ்க்கை வாழ்ந்த அவர் தனது வாழ்வின் கடைசிக் கட்டங்களில் பலவித அவமானங்களைச் சுமக்க வேண்டி வந்தது.

ஆனால் எத்தனை கஷ்டங்கள் வந்தபோதிலும் நர்மதாசங்கர் தனது இலட்சியங்களில் உறுதியாக இருந்து வந்தார்; தான் ஏற்றுக்கொண்ட எந்தப் பொறுப்பையும் அவர் எந்தச் சமயத்திலும் தட்டிக் கழித்ததில்லை. அவருடைய நண்பரும் வியாபாரியுமான கர்ஸன்தாஸ் மாதவ்தாஸ், தான் நல்ல நிலையிலிருந்தபோது, நர்மதாசங்கரின் கவிதைகள் யாவும் அடங்கிய தொகுப்பு நூலாகிய ''நர்மகவிதா''வை அச்சிடுவதற்கு ஆகும் செலவைத்

தையும் தாமே ஏற்றுக்கொள்வதாகக் கூறியிருந்தார். ஆனுல் இந்த நூல் அச்சேறுவதற்குள் வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு கர்ஸன்தாஸ் நலிந்த நிலையை அடைந்ததால் வாக்களித்த படி அவரால் உதவிசெய்ய முடியவில்லை. நர்மதாசங்கர் யார் யாரிடமோ கடன் வாங்கி, ஏதேதோ சிரமங்களுக்கிடையில் தானே அந்நூலை வெளியிட்டார். ஆனுல் முன்பே நிச்சயித்திருந்தபடி, நூலை அவர் கர்ஸன்தாஸ் மாதவ்தாஸுக்கே சமர்ப்பணம் செய் தார். பல நண்பர்கள் வசதியான நிலையிலிருந்த வேறு யாருக்கா வது நூலைச் சமர்ப்பணம் செய்தால் அத்தகைய ஒருவரிடம் நிதி யுதவி பெறலாமே என்று யோசனை கூறினுர்கள். ஆனுல் நர்மதா சங்கர் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

தன்னுடைய வாழ்க்கையில் அவர் மிகவும் கடுமையாக உழைத் தது நர்மகோஷ் என்ற நூலைத் தயாரிப்பதற்குத்தான். பதின்மூன்று வருட காலம் சிரமப்பட்டு இந்நூலை உருவாக்கினுர் அவர். இந்தப் பெரும் பணியை நிறைவேற்றுமுன் ஏராளமான இன்னல்களை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. தொடக்கத்தில் அம் முயற்சி யில் ஆர்வம் காட்டிய பலர் பிற்பாடு வெவ்வேறு கட்டங்களில் ஏதேதோ காரணங்கூறி அதிலிருந்து விலகிக்கொண்டனர். நர்மதா சங்கரின் எளிதில் உணர்ச்சிவசப்பட்டுப் பிறரிடம் மரியாதைக் குறை வாக நடந்துகொள்கிற சுபாவமும் இதற்கு ஒரு காரணம். ஆனுல் பலர் அவருக்கு உதவி செய்வதிலிருந்து விலகிக்கொண்டபோதும் அவர் தம் முயற்சியைக் கைவிடவில்லை. தக்க தருணத்தில் தன் சொந்தப் பணத்தைச் செலவு செய்து அந்நூலை வெளியிடவும் தயங்கவில்லை. பதின்மூன்று வருட காலம் பாடுபட்டு உருவாக்கிய இந்நூலை அவர் எந்தச் செல்வந்தருக்கும் அல்லது அறிஞருக்கும் சமர்ப்பணம் செய்யவில்லை; அந்நூலின் மூலம் பயனடையப்போகிற குஜராத்தின் மக்களுக்கே அதனை அர்ப்பணம் செய்தார் அவர். இந்த சமர்ப்பணத்தை ஒரு கவிதையாகவே எழுதினுர் அவர். அக் கவிதை இன்றும் குஜராத்தியரிடையே பிரபலமாக விளங்குகிறது. இன்றும் குஜராத்தி இலக்கியம் அல்லது கலாச்சாரம் தொடர்பான முக்கிய நிகழ்ச்சிகள் ஏதாவது நடந்தால் அந்நிகழ்ச்சியில் இக் கவிதையே (பாடலே) பாடப்படுகிறது. குஜராத்தியருக்கு இப் பாடல் ஒரு தேசிய கீதம் போலவே ஆகிவிட்டதெனலாம். குஜராத்தி மொழி உயிருடனுள்ளவரை இப்பாடல் இதே அந்தஸ் துடன் அம்மொழியினரிடையே விளங்கி வருமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ''ஜ்ய ஜ்ய கரவி குஜ்ராத்'' எனத் தொடங்கும் இப் பாடலை அறியாதவர்களே குஜராத்தில் யாரும் இருக்க மாட்டார் கள்.

மேற்சொன்ன அகராதியைத் தொகுத்து முடித்ததுடன் வேறு பல முக்கியமான பணிகளையும் தமது வாழ்வின் இந்த இறுதி

ஆண்டுகளில் அவர் செய்து முடித்தார். ஒரு எழுத்தாளர் என்ற முறையில் அவருடைய ஆர்வமும் திறமைகளும் முதிர்ச்சியடைந்த போது சரித்திரத்தில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று. சரித்திர ரீதியான விளைவுகள் மனிதனையும் சமுதாயத்தையும் எவ்வாறெல்லாம் பாதிக்கின்றனவென்று ஆராய்வதில் அவர் தீவிரமாக முனைந்தார். உலக சரித்திரம் பற்றின சுமார் இருநூறு நூல்களைச் சேகரித்து அவற்றை ஆழ்ந்து படித்தார். இவ்வாறு பல நூல்களைக் கலந்தபின் உலக சரித்திரம்பற்றிய ஒரு பிரம்மாண்டமான நூல் எழுதினார் நர்மதாசங்கர். இந்நூலின் முதல் பாகம் 1871லும் இரண்டாம் பாகம் 1876லும் வெளியாயிற்று. இதற்கு முன்னர் இராமாயணம், மகாபாரதம், இலியத் என்னும் காவியங்களையும் கருத்தூன்றிப் படித்திருந்தார் அவர். இதன் விளைவாக இம்மூன்று காவியங்களையும்பற்றித் தனித்தனியே மூன்று நூல்களை எழுதினார் அவர். இவை 1870ஆம் வருடம் வெளி வந்தன.

இக்காவியங்களையும் சரித்திர நூல்களையும் படித்த பிறகு வரலாற்றை உருவாக்கிய பிரபல புள்ளிகளின் வாழ்க்கை விவரங்களை அறிவதில் அவருக்கு ஆர்வம் மிகுந்தது. இவர்கள் காவியத் தலைவர்கள் அன்றோ! இவர்களின் சரிதைகளை யாவரும் அறியும் வண்ணம் எழுதி வெளியிடுவது பயனுள்ளதாக இருக்குமென்று அவர் நினைத்தார். ‘உயர்ந்த மனிதர்களின் சரிதைகள்’ என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் 1870ஆம் வருடம் வெளியாயிற்று.

இவ்வாறு படித்தல், எழுதுதல், நூல்களை வெளியிடல் என்று ஒரு புறம் அவர் மும்முரமாக இருக்க, மறுபுறம் அவருடைய குடும்ப வாழ்க்கை தொடர்பான சில எதிர்பாராத திருப்பங்கள் அவரைத் திக்குமுக்காட வைத்தன. குஜராத் முழுவதும் அவரைப் பற்றிப் பேசும்படியான ஒரு நிகழ்ச்சி அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்தது.

இது நிகழ்ந்ததும் 1870ஆம் வருடம்தான்.

நாம் முன்னரே பார்த்ததுபோல, பெண்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக்கொள்ளும் எந்த வாய்ப்பையும் நர்மதாசங்கர் வீணாக்குவதில்லை. அவருடைய பிடிவாதமும் கற்பனைகளில் திளைத்து இன்பமுறும் இயல்புமாகச் சேர்ந்து, அவரைப் புதிய பெண் சகவாசங்களின்பால் ஈர்த்த வண்ணமிருந்தன. அவர்களும் (பெண்களும்) அவருடைய தோழமையை விரும்பி யாசித்தனர். 1870ஆம் வருடம் மேற்சொன்ன பல மகத்தான படைப்பு முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருந்த வேளையில் தனது ஜாதியைச் சேர்ந்த ஒரு இளம் விதவையுடன் அவருக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. அவர் அவள்பால் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்த, அவளும் அதனை

ஏற்றுக்கொண்டாள். ஒரு கட்டத்துக்குப் பிறகு அந்தப் பெண் மணி நர்மதாசங்கர் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்று கோரலானாள். நர்மதாசங்கர் சங்கடத்தில் ஆழ்ந்தார். அவருக்கு ஏற்கெனவே மணமாகிவிட்டிருந்தது; அவருடைய அந்தத் திருமண வாழ்வும் மகிழ்ச்சிகரமானதாகவே இருந்தது; இப்போது இன்னொரு திருமணம் செய்துகொள்வது எவ்வாறு? அந்த விதவையோ அவரை விடாமல் வற்புறுத்திய வண்ணமிருந்தாள். எப்போதும் விதவைகளின் மறுமணத்தை ஆவேசமாக ஆதரித்து வந்துள்ளவரான அவர், தானே அவ்விஷயத்தில் ஒரு உதாரண புருஷராக விளங்கவேண்டாமா என்ன என்று அவள் அவரை மடக்கினாள். நர்மதாசங்கருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எவ்வித முடிவெடுத்தாலும் அது தனக்கு அபகீர்த்தியையே தருமென்று அவருக்குப் பட்டது. திருமணம் செய்துகொண்டால் தனது சகாக்களுக்கு அவர் ஒரு மோசமான முன்னுதாரணமாகத் திகழ்வார். அவருக்கு ஏற்கெனவே நல்ல மனைவியொருத்தி இருந்தாள். திருமணம் செய்துகொள்ளாவிட்டாலோ அவர் இத்தனை நாட்கள் பலமாகப் பிரச்சாரம் செய்துவந்த 'விதவைகள் மறுமணம்' வெறும் வேஷந்தான் என்றாகிவிடும்; அவர் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என எல்லாரும் நினைப்பார்கள்.

பல நாள் யோசனைக்குப் பின் அந்த விதவையின் கோரிக்கைக்கு இணங்கி அவளைத் திருமணம் செய்துகொள்வதென்ற முடிவுக்கே அவர் வந்தார். அவளுடன் இத்தனை தூரத்துக்கு உறவை வளர்த்துக்கொண்டபின் இந்தக் கட்டத்தில் திருமணத்துக்கு மட்டும் தான் இணங்காமலிருப்பது சரியாகாது. அந்நாட்களில் பலர் மனைவி உயிருடனிருக்கும்போதே இன்னொரு பெண்ணை மணம் புரிந்துகொள்வது வழக்கமாகத்தான் இருந்தது. மேலும் இதை அவர் தனக்காகச் செய்யவில்லை, அவர் ஒரு சீர்திருத்தவாதியாக இருந்தாரென்பது இதனை அவசியமாக்கிவிட்டது . . . இவ்வாறு அவர் தன் முடிவை நியாயப்படுத்திக்கொண்டார். மனச்சாட்சி நம்மை எப்படிக் கோழைகளாகவும் கயவர்களாகவும் மாற்றிவிடுகிறது என்பதற்கு இந் நிகழ்ச்சி ஒரு உதாரணமாக விளங்குகிறது.

ஆனால் விதவையின் கோரிக்கைக்கு இணங்கிய பிறகு, தன் மனைவியின் நிலை என்ன என்ற கேள்வி அவரை வாட்டியது. அவர் சில சாத்தியக் கூறுகளை அவள் முன் சமர்ப்பித்தார். அவற்றில் ஒன்று, வீட்டுக்கு வரப்போகிற புது மனைவியுடன் அவளும் அங்கேயே இருந்துவரலாம் என்பது. உத்தமமான இந்து மனைவியான தஹிகௌரி இந்த முடிவையே தேர்ந்தெடுத்தாள். இது அப்படியொன்றும் சுலபமான முடிவாக இருக்கவில்லைதான்.

நர்மதாசங்கர் இவ்விஷயமாகத் தனக்கும் தஹிகௌரிக்கு மிடையே நடந்த சம்பாஷணை முழுவதையும் பிற்காலச் சந்ததியருக் காக எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். இந்தச் சம்பாஷணை களின்மூலம் நம் பெருமதிப்புக்கு ஆளாகிறாள் தஹிகௌரி; நர்மதா சங்கரோ நமது பலத்த அதிருப்திக்குப் பாத்திரமானவராகிறார். அவர் வெளிப்படுத்துகின்ற சீர்திருத்த நோக்கு, பெண்களின்பால் மரியாதை, அவர்களுடைய நிலை உயர வேண்டுமென்ற தாபம் ஆகிய எல்லாவற்றையும் மீறிக்கொண்டு இந்தச் சம்பாஷணைகளில் தெரிவது ஒரு யதேச்சாதிகாரியான இந்துக் கணவன்தான்—தான் ஒரு ஆணாகவும் தனது மனைவி ஒரு பெண்ணாகவும் இருக்கின்ற ஒரே காரணத்தால் தனது வார்த்தைகளையெல்லாம் அவள் தேவ வாக்காகக் கருதவேண்டுமென்று நினைக்கிற கணவன். ஒரு ஆண் என்ற முறையில் இந்தச் சம்பாஷணைகள் நர்மதாசங்கருக்குச் சிறிதும் பெருமை சேர்க்கவில்லைதான். ஆனால் தாமே பிற்காலத் தவருக்காக அச்சம்பாஷணை முழுவதையும் குறித்து வைத்துள்ள நேர்மையைப் பாராட்டத்தான் வேண்டும்.

விதவையை அவர் திருமணம் செய்துகொண்டார்; அதைத் தொடர்ந்து அவருடைய சமூகத்தினர் அவரை ஒதுக்கி வைத்தனர். ஏறத்தாழ ஒரு தீண்டத்தகாத கீழ் ஜாதிக்காரர்போல அவர் நடத்தப்பட்டார். ஆனால் அவர் இதற்காகத் துளியும் கவலைப் படவில்லை.

அவருடைய கஷ்டங்கள் அதிகரித்தன. ஏற்கெனவே இருந்த பணப் பற்றாக்குறையுடன் சமூகத்தினரின் பகிஷ்கரிப்பும் சேர்ந்து கொண்டது. அவருடைய பொறுப்புகளும் அதிகரித்து வந்தன. ஆரோக்கியமுள்ள அவருடைய புது மனைவி திருமணமான முதலா வது ஆண்டிலேயே ஒரு மகனை ஈன்றெடுத்தாள். செலவுகள் அதி கரித்தன. பவநகரத்திலிருந்த 'நாகர்' பிரிவைச் சேர்ந்த ஒரு செல்வந்தரிடமிருந்து அவருடைய அகராதியைப் பதிப்பிக்க நிதி யுதவி கிடைக்க இருந்தது; ஆனால் அத்தருணத்தில் பவநகரத்து 'நாகர்' சமூகத்தினரைப்பற்றி அவர் தனது 'தாண்டியோ' என்னும் ஏட்டில் எழுதின ஒரு கட்டுரையால் அந்தச் செல்வந்தர் கோபமடைந்ததால் அவரிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக் காமல் போயிற்று.

பணம் நிறையத் தேவையாயிருந்தது; எப்படியாவது பணம் சம்பாதிக்கவேண்டும். அவர் முனைந்து பார்க்காத துறை ஒன்றே ஒன்றுதான் மிச்சமிருந்தது; அங்கு வெற்றி பெற்றால் அவர் நிறையப் பணம் சம்பாதிக்கலாம். இதுதான் குஜராத்தி நாடகத்துறை. அந்நாட்களில் குஜராத்தி நாடக மேடை செழுமையான நிலையி லிருந்தது; அத்திசையில் அவர் மேற்கொள்ளும் முயற்சிகள் ஒரு

வேலை பலனளிக்கலாம். எனவே நாடகமெழுதுவதில் ஆர்வமோ திறமையோ சிறிதும் இல்லாமலிருந்தும் அவர் அம்முயற்சியில் ஈடு பட்டார்.

1876-ல் தன் முதல் நாடகமாகிய 'ராம்—ஜானகி தர்சன்'—ஐ வெளியிட்ட தருணத்தில் அவர் உடலில் சக்தியெல்லாம் பெரும் பாலும் வற்றிப்போயிருந்தது. தனது வாலிபப் பருவத்தில் அவர் ஆடின ஆட்டமெல்லாம் இப்போது உடலைப் பாதிக்கத் தொடங்கி யிருந்தது. இதனைப் பொருட்படுத்தாமல் சதா எழுத்து, எழுத்து, எழுத்து என்று அவர் ஓய்ச்சலின்றி உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் வேறு. மொத்தத்தில் கவியின் வாழ்க்கையில் அது ஒரு மகிழ்ச்சி கரமான கட்டமாக இல்லை.

1876 முதல் 1881 வரையுள்ள காலத்தில் அவர் எழுதிய நான்கு நாடகங்களும் அவருக்குப் பெருமை சேர்ப்பனவாக இல்லை. அவை மூலம் அவருக்குக் கொஞ்சம் பணம் கிடைத்ததென்னவோ உண்மை; அவர் எதை எழுதினாலும் அதைப் புகழ்ந்து தள்ளு வதையே தொழிலாகக் கொண்டிருந்த சில நண்பர்கள் இந்நாடகங் களையும் புகழவே செய்தனர் என்பதும் உண்மைதான்; ஆனால் பரவலான மக்களிடையே இந் நாடகங்கள் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை; அவற்றை எழுதியபின் அவருடைய புகழ் எவ் விதத்திலும் அதிகரிக்கவில்லை. ஆனால் கடலில் மூழ்க இருப்பவன் துரும்பைப் பற்றிக்கொள்வதுபோல அந்த ஐந்து வருடங்களும் அவர் தொடர்ந்து நாடகங்களை எழுதினார். ''பாலகிருஷ்ண விஜய் நாடக்'' என்ற தமது கடைசி நாடகத்தை அவர் 1883ஆம் ஆண்டில் எழுதினார்.

இன்னல்களும் துயரங்களும் நிரம்பிய காலம்தான் அது. ஆனால் அவ்வப்போது உற்சாகமூட்டும் நிகழ்ச்சிகளும் நடக்காமல் இல்லை. பின்னாளில் குஜராத்தி மொழியின் முதல் விமரிசகர் எனப் பெயர் பெற்ற நவல்ராம் திரிவேதி, அந்நாளில் மலரத் தொடங்கி யிருந்த ஓர் இளம் எழுத்தாளர். நர்மதாசங்கர் பிறந்த ஊரிலேயேதான் அவரும் பிறந்தார். கவி நர்மதாசங்கரின் ஒரு பரம பக்தராக விளங்கினார் நவல்ராம். ஒரு முறை ஒரு பத்திரிகை யில் நர்மதாசங்கரின் கவித்திறனைப்பற்றி அவர் ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், இன்றும் குஜராத்தின் மிகச் சிறந்த கவியாகக் கருதப்படும் பிரேமானந்த்கூட நர்மதாசங்கருக்கு அடுத்த ஸ்தானம்தான் பெற்றார். நர்மதாசங்கருக்கு இந்த கௌரவம் இனித்தது, அவர் மௌனமாக அதனை ஏற்றார். ஆனால் பிற்பாடு ஒரு கட்டத்தில் நவல்ராம் தனது பிசகை உணர்ந்து பிரேமானந்தை நர்மதாசங்கரைவிட உயர்ந்த கவியாகக் குறிப் பிட்டபோது நர்மதாசங்கர் இந்த மதிப்பீட்டை ஒப்புக்கொள்ள

வில்லே. இத் தருணத்தில் தான் தயாரித்த ஒரு சிறு குறிப்பில் நர்மதாசங்கர் கிரேக்க கவிஞர் ஹோமரை எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற ஒரு இலட்சிய கவிஞராகக் குறிப்பிட்டு, அவர் பெயருக்கெதிராக நூறு மதிப்பெண்கள் வழங்கினுர். பிறகு தனக்குத் தானே அவர் தர்க்கம் புரியத் தொடங்கினுர். மகாகவியான ஹோமர் நூறு மதிப்பெண்கள் பெற்றுல் நான், நர்மதாசங்கர், எவ்வளவு பெறுவேன்? பிரேமானந்துக்கு எவ்வளவு கிடைக்கும்? மிகத் தீவிரமான கூட்டல் கழித்தல்களுக்குப் பிறகு அவர் பிரேமானந்தின் பெயருக்கெதிராக அறுபது மதிப்பெண்களும் தன் பெயருக்கெதிராக எழுபது மதிப்பெண்களும் வழங்கினுர். அவருடைய இந்தக் குறிப்பு இன்று வரை கவனமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது; மனிதனின் அகங்காரத்துக்கு ஒரு உதாரணமாக இது விளங்குகிறது. இதே குறிப்பில் கவி தயாராம்—எந்த தயாராமைக் குறித்து நர்மதாசங்கர் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் நடத்தி அவருடைய கவிதைத் தொகுதி ஒன்றை 1860-ல் பதிப்பித்து வெளியிட்டாரோ, சந்தக் கவியாக யார் நிச்சயம் சிறப்பான கௌரவத்துக்குரியவரோ, அதே தயாராம்—நாற்பது மதிப்பெண்களே பெற்றுர். இதெல்லாம் நமக்கு வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனுல் நர்மதாசங்கருக்கு இது பெரு மகிழ்ச்சியை அளித்திருக்கவேண்டும்.

ஆனுல் இவையெல்லாம் அற்ப சந்தோஷங்களாகவே விளங்கின. அவருடைய நடைமுறை இன்னல்கள் அதிகரித்துக்கொண்டே சென்றன. 1875ஆம் வருட வாக்கில் இனியும் குடித்தனம் நடத்த இயலாதென்ற நிலே ஏற்பட்டது. மீண்டும் பம்பாய்க்குச் செல்லும்படி சில நண்பர்கள் அவருக்கு யோசனே கூறினர். அங்கு அவருடைய ரசிகர்கள் நிறைய இருந்ததாகவும் அவருடைய சிரமதசையில் அவர்கள் யாவரும் ஆவலுடன் உதவ முன் வருவார்களெனவும் இந்த நண்பர்கள் நினேத்தனர்.

பம்பாய்க்கு மீண்டும் செல்கிற முடிவையெடுப்பது அத்தனே சுலபமானதாக இல்லே. ஆனுல் வேறு வழியிருக்கவில்லே. 1875ஆம் வருடம் மார்ச் மாதம் அவர் தனது குடும்பத்தினருடன் பம்பாய்க்குக் குடி பெயர்ந்தார்.

பம்பாயிலிருந்த அவருடைய நண்பர்கள் அவரை ஆவலுடன் வரவேற்றனர். அவரைச் சந்திப்பதற்குப் பெருந்திரளாக அவருடைய வீட்டுக்கு வந்த வண்ணமிருந்தனர். எல்லா சமூகத்தினரும் இத்திரளில் காணப்பட்டனர். வழக்கமாக அவரைப் பார்க்க வந்த உயர் மட்டத்து இந்துக்களேத் தவிர, நானுபாய் ருஸ்தம்ஜி ரானிஞ போன்ற பார்ஸிகளும் கணேஷ் ஸ்ரீதர் காபர்டே போன்ற மராட்டியர்களும் அங்கு வந்தார்கள். பல ரகமான

விஷயங்கள் அங்கு விவாதிக்கப்பட்டன; காரசாரமான விவாதங்கள் நடந்தன. ஆனுல் முக்கியப் பிரச்சினையாகிய பணப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் ஏற்படக் காணும். நண்பர்களுக்குப் பஞ்சமில்லை; ஆனுல் பணம்? சமூகத்தில் அவர் பெற்றிருந்த செல்வாக்கையும் புகழையும் நிரூபிக்கும் விதமாகத் தினசரி நிகழ்ச்சிகள் நடந்த வண்ணமிருந்தன. உதாரணமாக, தியாஸபி இயக்கத்தைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையார் பம்பாய்க்கு வந்திருந்தபோது, கர்னல் அல்காட்டுடனும் வேறு சில நண்பர்களுடனும் நர்மதாசங்கரை அவருடைய வீட்டில் சென்று பார்த்தார். தாம் பிரசாரம் செய்து கொண்டிருந்த புதிய கொள்கைகளின்பால் நர்மதாசங்கரின் ஆதரவை அவர்கள் கோரினுர்கள். நர்மதாசங்கர் அவர்களைத் தம் நண்பர்களாகப் பாவித்தார்; தாமும் ஒரு நாள் பிளாவட்ஸ்கி அம்மையாரின் வீட்டுக்கு விஜயம் செய்ததுடன், அவருடைய சொற்பொழிவுகளுக்கெல்லாம் சென்று வந்தார். அவருடைய கருத்துகளை ஆதரித்துப் பேசினுர். இதற்கு முன்னர் சுவாமி தயானந்தரிடமும், ஆரிய சமாஜ இயக்கத்திலும் அவர் சில காலம் ஈடுபாடுள்ளவராகத் திகழ்ந்தார். ஆனுல் மெல்ல மெல்ல அதன் வழிமுறைகளிலும் சட்டதிட்டங்களிலும் அவருக்கு நம்பிக்கை குறைந்தது; தமது கருத்து வேறுபாடுகளைச் சிறிதும் தயக்கமின்றி ஆவேசமான வார்த்தைகளில் வெளிப்படுத்திஞர் அவர். தன்னளவில் அவரே பல உரைகள் நிகழ்த்தி வந்தார்; இலக்கியப்பணிகள் பலவற்றில் நேரடியாகவும் ஆலோசகர் என்ற முறையிலும் சம்பந்தப்பட்டிருந்தார். உதாரணமாக, நர்மதாசங்கரின் மாணவராகவும் ரசிகராகவும் தம்மை உற்சாகமாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட இச்சாராம் சூர்யராம் தேசாய் பம்பாயிலிருந்து ஒரு வாரப்பத்திரிகை தொடங்க விரும்பி அதற்கு என்ன பெயர் வைக்கலாமென்று நர்மதாசங்கரைக் கேட்டபோது, நர்மதாசங்கர் உடனே கூறினுர்: ''நாமெல்லாரும் குஜராத்தைச் சேர்ந்தவர்கள், அவ்வாருக இருப்பதில் பெருமை கொள்கிறவர்கள். எனவே பத்திரிகைக்கு 'குஜராத்தி' என்றே ஏன் பெயர் வைக்கக்கூடாது?'' இச்சாராம் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டார்; இந்தப் பெயரில் ஒரு பத்திரிகையை உடனே தொடங்கினுர். இந்தப் பத்திரிகை ஒரு பெரும் வெற்றியாக அமைந்தது; குஜராத்திப் பத்திரிகைகளின் வரலாறில் இதற்கோர் சிறப்பிடம் உண்டு.

இவ்வாறு பலவிதங்களில் கௌரவிக்கப்பட்டுப் பாராட்டப் பட்டாலும் இதனுல் பணப் பிரச்சினை என்னவோ தீரவில்லை. சில சமயங்களில் வீட்டில் பணம் மிகக் குறைவாக இருக்கும், அவருடைய மனைவியும், அவருடனேயே ஒரு மானேஜரைப்போல இருந்துகொண்டு அவருடைய விவகாரங்களைக் கவனித்து வந்த

நண்பரும் உண்மை நிலையைக் கூடியவரை அவரிடமிருந்து மறைத்து வந்தனர். நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வந்தது. இத்தகைய சிரம தசையிலும் அவரால் முழுநேர வேலை எதையும் ஏற்றுக் கொள்வதற்குத் தன்னைத் தயார் செய்துகொள்ள முடியவில்லை. தனது தயாள குணத்தை மாற்றிக் கொள்ளவும் முடியவில்லை. இந்தக் காலகட்டத்தில் ஒருநாள் வறிய நிலையிலிருந்த ஒருவர் நர்மதாசங்கரிடம் வந்து தன்னுடைய கலைத்திறனால் அவரை மகிழ்வித்தார். அப்போது நர்மதாசங்கரிடம் ஒரே ஒரு ரூபாய் தான் இருந்தது; அதை அவர் தன் பாராட்டைத்தெரிவிக்கும் வகையில் உடனடியாக அம்மனிதரிடம் கொடுத்தார். அம்மனிதர் அதை வாங்கிக்கொண்டு, தான் இன்னமும் பெருத்த எதிர்பார்ப்புகளுடன் அங்கு வந்ததாகக் கூறினார். உடனே நர்மதாசங்கர் சிறிதும் தயங்காமல் தான் போர்த்திக் கொண்டிருந்த விலையுயர்ந்த சால்வையை எடுத்து அவரிடம் தந்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில் அறுபது வயதுக் கிழவர் ஒருவர் நர்மதாசங்கரின் நண்பர் ஒருவர் தந்த அறிமுகக் கடிதத்துடன் கவிஞரைக் காண வந்தார். அந்த நண்பர் தாராளமாக உதவி செய்யும்படி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். நர்மதாசங்கர் உடனே தனது உதவியாளனாக இயங்கி வந்த நண்பனிடம் அந்தக் கிழவருக்கு நூறு ரூபாய் கொடுத்தனுப்புமாறு சொன்னார். உதவியாளனுக்கோ வீட்டில் ஏழே ரூபாய் தான் இருந்ததென்பது தெரியும். அவன் அக்கிழவரை ஒதுக்குப் புறமாக அழைத்துச் சென்று, சில நாட்களுக்குப் பிறகு வரும்படி கூறினான். இது நர்மதாசங்கர் காதிலும் விழுந்தது, அவர் நிலைமையை உணர்ந்து கொண்டார். சில நாட்களுக்குப் பிறகு நர்மதாசங்கர் தனது நண்பர்களுடன் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருக்கையில் தபால்காரன் அன்றையத் தபாலைக் கொடுத்துச் சென்றான். ஒரு உறையை அவர் திறந்து பார்த்த போது அதனுள் கற்றை கற்றையான நோட்டுக்களாக ஆயிரம் ரூபாய் வரை வைக்கப்பட்டிருந்தது. அதனுடன் கடிதமேதும் இல்லை. இப்படி ஒரு சிறு குறிப்புத்தான் இருந்தது: 'உங்களுடைய சிறந்த நண்பன் மற்றும் விசிறியிடமிருந்து.' நர்மதாசங்கர் அந்த நோட்டுகளைத் தன் உதவியாளனிடம் கொடுத்தவாறு கூறினார்: ''இதிலிருந்து நூறு ரூபாயை அந்தக் கிழவருக்காகத் தனியே எடுத்துவை. மீதிப் பணத்தை வீட்டுச் செலவுகளுக்காக வைத்துக் கொள்.''

இவ்வாறு அவ்வப்போது பணம் வந்தபோதிலும் இதெல்லாம் தாற்காலிக நிவாரணங்களாகவே இருந்தன. 1882ஆம் வருடம் ஒரு நாள் வீட்டில் சாப்பிட ஏதுமேயில்லாத நிலை ஏற்பட்டது. ஒரு நாலணா நாணயத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. இதைப் பற்றிக்

கவி கேள்வியுற்றபோது அவர் கூறினார்: ''இந்தக் காசுக்குப் பொரி வாங்கி வரச் சொல்லுங்கள். சிக்கனமான சாப்பாடு ஒன்று சாப்பிடலாம்.''

நர்மதாசங்கர் எத்தனைதான் நாசூக்கும் அலட்சியமும் காண்பித்தாலும் நிலைமை மிக மோசமாகி விட்டிருந்தது; அதனைச் சரிக்கட்ட அவசர நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டுமென அவருடைய நண்பர்கள் உணர்ந்தனர். தாம் கூறும் யோசனைகளை நர்மதாசங்கர் ஒப்புக்கொள்ள மாட்டாரென்றும் அவர்களுக்குத் தெரியும். எனவே அவருக்குத் தெரியாமல் ரகசியமாக அவர்கள் ''கோகுல்தாஸ் தேஜ்பால் அறக்கட்டளை''யின் டிரஸ்டிகளை அணுகி, அறக்கட்டளையின் நன்கொடைப் பிரிவில் நர்மதா சங்கரை காரியதரிசியாக — மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் நியமிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

ஒரு நாள் கவி தனது வீட்டில் தன் நெருங்கிய சிநேகிதர்களுடன் அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தபோது தபால்காரன் அறக்கட்டளையின் டிரஸ்ட்டிகள் எழுதிய கடிதத்தைக் கொண்டு வந்தான். உறையைப் பிரித்து உள்ளேயிருந்த கடிதத்தைப் படித்தவுடன் நர்மதாசங்கரின் விழிகள் கண்ணீரால் நிறைந்தன. அங்கிருந்த நண்பர்களுக்குக் கடிதத்தில் என்ன இருந்ததென்று தெரியும். ஆனால் அவர்கள் எதுவும் பேசாமல் நர்மதாசங்கரின் மீது என்ன பாதிப்பு நிகழுகிறதென்று பார்த்தபடி இருந்தனர். நர்மதாசங்கர் மௌனமாகக் கடிதத்தை நண்பர்கள் மடியில் எறிந்தார்.

சிறிது நேரம் யாரும் பேசவில்லை. கடைசியில் நர்மதாசங்கர் பேசத் தொடங்கினார். அவருடைய குரல் தழுதழுத்தது: ''இப்படியொரு நிலை வந்ததா கடைசியில்? கடந்த இருபத்து நான்கு வருடங்களாக உத்தியோகம் என ஒன்றை ஏற்றுக்கொள்ளாமல் இருந்து வரும் நான் இப்போது மீண்டும் இந்த நீண்ட இடைவெளிக்குப் பிறகு அடிமை உடைகளை அணிய வேண்டுமா! அதுதான் உங்கள் விருப்பம், அல்லவா? சரி, அப்படியே ஆகட்டும். இந்த வேலையை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன்: இந்த அதிர்ச்சியை என் இதயம் நெடுநாள் தாங்கிக் கொள்ள முடியாது. என் முடிவு நெருங்கிவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது.''

கவிஞர் கூறியதையெல்லாம் கேட்டு அங்கு கூடியிருந்தவர்கள் கண்ணீர் வடித்தனர். ஆனால் வேறு மார்க்கமேதுமில்லை. கவிஞரை அவருடைய விசுவாசமுள்ள முதல் மனைவி தஹிகௌரியுடன் தனியே விட்டு நண்பர்கள் கனத்த இதயத்துடன் அங்கிருந்து

எழுந்து சென்றனர். கவிஞர் அவளிடம் கூறினார்: ''உன் அரசன் இனி ஓர் அடிமை, அன்பே!'' தஹிகௌரி இதைக் கேட்டுக் கண்ணீர் பெருக்கினாள்.

இறுதி முடிவையெடுக்க இன்னும் ஏழெட்டு நாட்கள் பிடித்தது. அப்போதைய நிலையில் நர்மதாசங்கர் அவ்வேலையை ஒப்புக் கொள்வதே சிறந்தது என்பது தான் அம்முடிவு. அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். சீக்கிரமே ஒரு நாள் காலையில் நர்மதாசங்கர் அறக்கட்டளையின் அலுவலகத்துக்கு, ஊழியம் செய்யக் கிளம்பிப் போனார். காபர்டே போன்ற சில நண்பர்கள் அச்சமயத்தில் இருந் தார்கள். கவிஞர் அவர்களிடம் கூறினார்: ''நண்பர்களே! இருபத்து நாலு வருடங்களுக்குப் பிறகு நான் மீண்டும் வேலைக்குப் போகிறேன். சரஸ்வதிக்கு மட்டுமே சேவகம் செய்வதாக நான் அளித்திருந்த வாக்கை மீறப் போகிறேன்... அடிமை வாழ்க்கையை நோக்கிப் போகிறேன்'' அங்கு கூடியிருந்தவர்களின் விழிகளில் கண்ணீர் ததும்பி நின்றது. அந்நாளிலிருந்து அவர் சாகும் வேளை வரையில், நர்மதாசங்கரின் முகத்தில் புன்னகையின் சுவடே தென்படவில்லை என்று அவருடைய நண்பரும் அவருடைய வாழ்க்கைச் சரிதையை எழுதியவருமான நவல்ராம் குறிப்பிட்டி ருக்கிறார்.

இத்தனை ஆண்டுகளில் அவருடைய வாழ்வின் வெளிப்புற அம்சங்கள் மட்டுமின்றி, அவருடைய எண்ணங்களும் சிந்தனை களும் கூட மாறி விட்டிருந்தன. இந்த மாறுதல்கள் அவருடைய கருத்துக்களில் பிரதிபலிக்கலாயின. அவர் முன்பு ஆவேசமாக வலி யுறுத்தி வந்த சீர்திருத்தங்களில் இப்போது அவர் நம்பிக்கையிழந்த வராகக் காணப்பட்டார். சீர்திருத்தவாதிகள் வெறும் போலி களென்றும் அவர்களுடைய இயக்கங்கள் இந்திய மண்ணில் வேர் பாவாத அரை வேக்காட்டு இரவல் கோஷங்களென்றும் அவர் கூறத் தொடங்கினார். வரலாறு, பழைய இலக்கியங்கள் ஆகிய வற்றைப் படித்ததனாலும், சீர்திருத்த இயக்கங்கள் பற்றிய நேரடியான அனுபவம் இருந்ததாலும், தமது வாழ்வின் அந்த இறுதிக் கட்டத்தில் அவர் தீவிர ஆத்ம விசாரங்களில் ஈடுபட்டு வந்ததாலும், தாம் அதுவரை வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் வீணென அவர் உணரத் தொடங்கியிருந்தார். தாம் அது வரை பயணம் செய்த திசை மிகத் தவறானதாக அவருக்குத் தோன்றியது. தம் கருத்துகளை அவர் இப்போது மறுபரிசீலனை செய்யத் தொடங் கினார். மெல்ல மெல்ல அவர் சனாதனப் போக்குகளை ஆதரிக்கும் மரபுவாதியாக மாறிப் போனார். ஆனால் இந்த மனமாற்றத்தை நேர்மையுடன் வெளிப்படுத்த அவர் தயங்கவில்லை. அவருடைய சிந்தனையும் பேச்சும் தடம் மாறி விட்டதென மக்கள் அவரைக்

கேலி செய்வார்களோ என்ற பயம் அவருக்குச் சிறிதும் இல்லை. தனது கருத்து மாற்றங்களை விவரிக்கும் புத்தகமொன்றை 1866ஆம் வருடம் அவர் வெளியிட்டார். இதுதான் அவர் இறந்த வருடமும் கூட. அவருடைய இறுதிக் காலக் கட்டுரைகள் அடங்கிய இந் நூலின் பெயர் 'தர்ம விசார்.'

இப்புத்தகம் வெளிவந்தபோது அது ஒரு பெரும்புயலைத் தோற்றுவித்தது. மக்கள் வியப்பும் கோபமும் அடைந்தனர். இன்று அவருடைய மறைவுக்கு நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, அவருடைய கருத்துக்களிலும் கொள்கைகளிலும் ஏற்பட்ட இந்தத் திடீர் மாறுதல் இலக்கிய, சமூக மாணுக்கர்களுக்கு ஒரு புதிராகவே இருந்து வருகிறது. இந்நிகழ்ச்சிக்கு வெவ்வேறு விளக்கங்கள் தரு வதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஆனுல் மேலுக்கு இந்நிகழ்ச்சி முரணுனதாகத் தோன்றினுலும் உண்மையில் அவருடைய மொத்த இயல்புகளுடன் அது பொருந்து வதாகவே உள்ளதென்பதை ஆழ்ந்து யோசிப்பவர்கள் உணரு வார்கள். இந்தப் புதிய நர்மதாசங்கரும் பழைய நர்மதா சங்கரைப்போலவே பிடிவாதம், வளைந்து கொடாமை, பய மின்மை ஆகியவற்றின் உருவமாகத்தானே விளங்குகிருர்! முன்ன வரிடம் காணப்பட்ட அவசரமும் வேண்டாத பிடிவாதமும்தான் பின்னவரிடமும் காணப்படுகிறது; பின்னவர் சாதுரியமான பேச்சினுலும் எழுத்தினுலும் அதனைப் பூசி மெழுகுகிருர் என்பது தான் ஒரே வித்தியாசம்.

இவ்வாறு நர்மதாசங்கர் தமது இறுதி ஆண்டுகளில் பல முனை களில் மனத்தளவிலும் உடலளவிலும், பணத்துக்காகவும் அமைதிக் காகவும் போராடியவண்ணமிருந்தார். நெஞ்சுறுதி மிக்க நர்மதா சங்கரும்கூட ஒரு கட்டத்தில் இப் போராட்டங்களை மேலும் சமாளிக்க முடியாமல் நிலைகுலைந்துபோனுர். அவர் வேலை பார்த்து வந்த அறக்கட்டளை புதிய திட்டங்கள் சிலவற்றை அமுல்படுத்த முயன்றதையொட்டி அங்கு வேலைப் பளு அதிகரித்தது. அது தொடர்பாக அவர் வீட்டிலும் இரவில் வெகு நேரம் வரை கண் விழித்து வேலை செய்யவேண்டியிருந்தது; அலுவலகத்துக்கும் ஒழுங்காக நேர நியமப்படி போய் வரவேண்டியிருந்தது. இந்த வேலைப் பளுவைத் தாங்க முடியாமல் அவருடைய உடல் இளைக்கத் தொடங்கியது; பசியேயில்லாமல் போனது. ஓரிரு முறைகள் அவர் திடீர் திடீரென்று மயக்கமாகிச் சாய்ந்தார். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அவர் செயல்பட முயன்ருர்; ஆனுல் அதிக நாள் அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. 1885ஆம் வருடம் உடல் நலக் குறைவால் அவர் வேலையை விட்டு விலக நேர்ந்தது. இவ்வாறு ஓய்வு பெற்றபின்னும், அவருடைய

உடல்நிலையில் அபிவிருத்தி ஏற்படவில்லை; சீர்ப்படவே முடியாத அளவுக்கு அது ஏற்கெனவே சீரழிந்து போயிருந்தது. வாதம் போன்ற நோய்கள் அவர் ஆரோக்கியத்தைச் சூறையாடி வந்தன. மருத்துவ உலக நண்பர்கள் அவருடைய துயரை மட்டுப்படுத்த ஏதேதோ முயன்று பார்த்தனர்; ஆனால் பிரச்சினைகள் அதிகரித்தனவே ஒழியக் குறையவில்லை.

இறுதியாக 1886ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 26ஆம் தேதியன்று தமது ஐம்பத்தி மூன்றாவது வயதில் அவர் உயிரிழந்தார். சரியாகப் பகல் பன்னிரண்டு மணி. தமது இரு மனைவியர், மகன், நீண்ட கால நண்பர்கள் பலர் ஆகியோர் முன்னிலையில் குஜராத்தி இலக்கியத்தில் நவீன யுகத்தைத் துவக்கி வைத்தவரும், குஜராத்தின் இலக்கிய மற்றும் சமூக வாழ்வின் முடிசூடாத் தலைவராகத் திகழ்ந்தவருமான இந்த அதிசய மனிதர் பூதவுடலை நீத்தார்.

# X

இன்று, அவர் மறைந்து ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பிறகும், நர்மதாசங்கரின் துடிப்பும் சுறுசுறுப்பும் வியப்பூட்டவே செய்கின்றன. தன் முன்னே எதிர்ப்பட்ட நல்லது, கெட்டது யாவற்றையும் அனுயாசமாகச் சமாளித்து, அந்தந்த நேரத்தில் சரி யெனப்படுபவற்றை விரைந்து செய்து முடித்தார். அவர் தவறுகள் செய்யாமலில்லை—யார்தான் செய்யவில்லை?—அவற்றின் பலனையும் அனுபவித்தார். ஆனால் தவறோ தவறில்லையோ, வெற்றியோ தோல்வியோ, தமது வாழ்க்கையின் இறுதிக் கட்டம்வரை அவர் சலியாது உழைத்தார். மனதில் பட்ட உண்மைகளைப் பட்டென்று உடைத்துப் பேசி வந்தார். அவர் தமது வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் வலியுறுத்திய உண்மைகள் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்தனவென்பதும் உண்மைதான். இந்தச் சிக்கலான மனிதரின் வாழ்க்கையையும் எழுத்துக்களையும் ஆராய்ந்து மதிப்பிட இனி முயலுவோம்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, குஜராத்தி மக்களிடையே அவர் ''கவி நர்மத்'' அல்லது ''கவி நர்மதாசங்கர்'' என்னும் பெயரில் பிரபலமாக விளங்கினார். அவருடைய பிற இயல்புகளையும் பணிகளையும் மக்கள் நினைவுகூர்கிறார்களோ இல்லையோ, அவர் ஒரு கவி என்கிற விஷயம் மட்டும் எப்போதும் எல்லோராலும் ஞாபகமாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே அவருடைய கவிதைகளை முதலில் ஆராய்வது பொருத்தமாயிருக்கும்.

நர்மதாசங்கர் தமது பெரும்பாலான கவிதைகளை எழுதிய காலகட்டம் 1855 முதல் 1866 வரையுள்ள சுமார் பதினொரு வருடங்கள்தான். ஆனால் இந்தக் குறுகிய காலத்தில் அவர் ஏராளமான கவிதைகளை எழுதினார்; இவை பற்றி அவர் கர்வப் பட்டதும் உண்மை. குஜராத்தி மொழியில் நவீன கவிதையின் முன்னோடி இவரே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

குஜராத்தி மக்கள் புதுமைகளை விரும்பி ஏற்கத் தயாராக இருந்த ஒரு காலகட்டத்தில் நர்மதாசங்கர் அவர்களிடையே அவதரித்தார். பிரிட்டிஷ் ஆட்சி இங்கு ஏற்கெனவே காலூன்றி விட்டிருந்தது. பல காலமாகக் குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை முறைக்குப் பழக்கமாகிப்போயிருந்த இந்திய மக்கள் திடீரெனத் தம்மிடமிருந்து மாறுபட்ட பழக்கங்களும் வாழ்க்கை நோக்குமுள்ள அந்நியர்களுடன் சேர்ந்து வாழக் கற்றுக்கொள்ளவேண்டியிருந்

தது. இந்த அந்நியர்கள் ஆட்சி பீடத்திலிருந்ததாலும், அவர்கள் பலமுள்ளவர்களாகத் திகழ்ந்ததாலும், அவர்களுடைய வாழ்க்கை நோக்கே மேலானதாக இருக்கவேண்டுமென்று மக்கள் நினைத்தனர்; தமது வாழ்க்கை முறை, சிந்தனை, பழக்கங்கள் ஆகியவற்றை இனி மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் நினைத்தனர். இது ஒரு பிரம்மாண்டமான, சக்தி வாய்ந்த பாதிப்பாக இருந்தது. இந்தியர்களுடைய வாழ்க்கையின் பல அம்சங்கள் இந்தப் பாதிப்புக்கு உட்பட்டன. இந்த பாதிப்பு தனது உச்சகட்டத்திலிருந்த போதுதான் நர்மதாசங்கர் வாலிபப் பருவத்தையடைந்தார். ஆங்கில ஆசிரியர்களின்கீழ் கற்கும் வாய்ப்பும் அவருக்கு ஏற்பட்டது; இது அவர் மீது நேரடியான விளைவுகளை ஏற்படுத்தியது.

அக் காலகட்டத்தில் ஆங்கிலக் கவிதைகளை முதன் முதலில் சுவைக்க நேர்ந்த எந்த இந்தியரும் அவற்றில் சிறப்பாகப் பிரதிபலித்த அகநிலைச் சார்பின்பால் கவரப்படாமல் இருந்திருக்க முடியாது. அந்நாளைய இந்தியக் கவிதைகளில் இந்த அகநிலைச் சார்பு—கவியின் 'தானி'ன் பிரதிபலிப்பு—அதிகம் காணப்படவில்லை. ஏற்கெனவே கூறியதுபோல, அந்நாளைய இந்தியக் கவிகள்—தயாராம் போன்ற சிறந்த கவிஞர்கள் உட்பட—காதலைப் பற்றி எழுதுவதென்றால்கூட, தன்னைப் பற்றியும் தன் காதலியைப் பற்றியும் நேரடியாகக் குறிப்பிடாமல், தம் கவிதையின் நாயகனாக கிருஷ்ணனையும் நாயகியாக ராதையையும் அமைத்து, இவர்கள் மூலம் தம் உள்ளத்து உணர்ச்சிகளை மறைமுகமாக—சுற்றி வளைத்து—வெளியிடும் ஒரு பாணியையே பின்பற்றி வந்தனர். அன்றைய சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாக கவிஞர்கள் தமது உள்ளத்தில் உதித்த உணர்வுகளனைத்தையும் நேரடியாக வெளிப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையே நிலவியது; அவர்கள் கிருஷ்ணனுக்கும் ராதைக்குமிடையேயான சிரஞ்சீவிக் காதலையே ஒரு போர்வையாகப் பயன்படுத்த வேண்டி வந்தது. மத்திய கால குஜராத்தின் கடைசிச் சிறந்த கவியான தயாராம்—அவர் 1852-ல் நர்மதாசங்கர் கவிதையெழுதத் துவங்குவதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னர்தான் மறைந்தார்—சில அற்புதமான காதல் செய்யுள்கள் எழுதியிருந்தார்; ஆனால் இவையும் பழைய பாணியிலேயே அமைந்தனவாய் இருந்தன, அவற்றில் அக உணர்வுச் சார்பு இல்லை.

நர்மதாசங்கரும் அவரையொத்தவர்களும் பயின்று வந்த ஆங்கிலக் கவிதைகளோ முற்றிலும் வேறு வகையினவாக இருந்தன; அவற்றில் பிரதிபலித்த கவியின் சொந்தமான, சுயேச்சையான மனப் பாங்கு சுறுசுறுப்பூட்டுவதாக இருந்தது. இத்தருணத்தில் சமூகச் சூழலும் சற்றே மாறுதலடைந்து வந்தது; ஒரு கவியின் படைப்புக்களில் அவருடைய 'தான்' அதிகம் வெளிப்பட்டால்

அவர் பாராட்டப்படுவாரேயல்லாது கண்டிக்கப்படமாட்டா ரென்று தோன்றியது. இளைஞனுக்குரிய முரட்டுப் பிடிவாதத் துடனும், ஒரு முன்னேடியின் துணிவுடனும், நர்மதாசங்கர் முற்றிலும் சொந்தப் பாணியில்—அகநிலைச் சார்பு தொனிக்க—எழுதலானர். தாம் ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கி வைப்பதை அவர் முழுமையாக உணர்ந்தாரோ என்னவோ; ஆனல் அவ ருடைய இந்தச் செயல் ஒரு புதிய சகாப்தத்தின் துவக்கமாக அமைந்ததென்னவோ உண்மைதான். மேலும் அவருடைய சுபாவமும் இத்தகையதொரு எழுத்துப் பாணிக்கு மிகவும் ஏற்ற தாகவே இருந்தது. அகநிலைச் சார்பு இன்றி, 'தான்' குறுக்கிடா மல் எழுதுவதென்பது அவரால் இயலாத காரியம். முழுக்க முழுக்கத் தன்னில் மூழ்கிக் கிடந்த ஒரு பிறவி அவர். கவிதை யுலகில் அவருடைய பிரவேசம் காரணமாக, குஜராத்திக் கவிதை களின் பொதுவான பாணியில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. ஆனல் குஜராத்திக் கவிதைகளில் அவர் புகுத்திய புதுமை இந்த ஒன்று மட்டுமல்ல.

குஜராத்தி மொழியின் இசைக் கவிதைகளில் அகநிலைச் சார் பைப் புகுத்தியதுடன், இயற்கை பற்றிச் சுயேச்சையான பாணியில் கவி பாடிய முதல் கவிஞரும் நர்மதாசங்கரேயாவார். அவருக்கு முந்தின கவிஞர்களின் படைப்புகளிலும் இயற்கை வர்ணனை இடம் பெற்றிருந்ததுதான்; ஆனல் தன்னளவில் கவிதா முக்கியத்துவம் வாய்ந்த, தனிப்பட்ட முறையில் கவி பாடுவதற்குரிய ஒரு பொருளாக அது கருதப்படவில்லை. நர்மதாசங்கரின் சுயேச்சை யான இயல்பு, மகிழ்ச்சி நிரம்பிய தருணங்களிலும் அவரைத் தனிமையையே நாட வைத்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் இயற்கையே அவருடைய தோழனக விளங்கியது. அதன் நயங்களை யும் அழகுகளையும் நுணுக்கமாகக் கண்டுணர்ந்தார் அவர்; இந்த அழகுகளைக் கவிதையிலே வடிக்கவும் செய்தார். இவ்விதமாக குஜராத்தி மொழியில் இயற்கையைப் போற்றிக் கவிபாடுகின்ற மரபை அவர் துவக்கி வைத்தார்.

பயணம் செய்வதில் மிக விருப்பமுள்ளவராக இருந்த அவர் அடிக்கடி சிறிதும் பெரிதுமான பிரயாணங்களை மேற்கொண்ட வண்ணமிருந்தார். இந்தப் பயணங்களின் மூலம் தாம் அடைந்த உற்சாகத்தைச் சில கவிதைகளில் வெளிப்படுத்தினர். இவை யும் குஜராத்தி மொழியில் தம் வகையில் முதலானவையாக விளங் கின.

அவருடைய கவியுள்ளமும் பிடிவாத இயல்பும் அவரை அடிக் கடி காதல் விவகாரங்களில் சிக்கிக்கொள்ள வைத்தன; இந்த அனுபவங்கள் அவருடைய காதல் கவிதைகளுக்குத் தூண்டு

கோலாக அமைந்தன—இக்கவிதைகளும் குஜராத்திக் கவிதையில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தன.

அவர் தேசப் பற்று மிகுந்தவராக இருந்தார். தமது தேச பக்தியை வெளிப்படுத்துகின்ற பல கவிதைகளையும் அவர் இயற்றினர். இத்தகைய கவிதைகளை அவருக்கு முன்னர் யாரும் எழுத முற்படடதில்லை. ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தினுலேயே இத்தகைய கவிதைகள் உருப்பெற்றிருக்கவேண்டும்.

நர்மதாசங்கர் தம் கொள்கைகளுக்காகச் சளைக்காமல் போராடியவரும்கூட. இப்போராட்டங்கள் சமூக தளத்திலேயே நடைபெற்றனவென்றுலும் அவர் எழுப்பிய கோஷங்கள் யுத்த கோஷங்களாகவே இருந்தன. ஆவேசமும் எழுச்சியும்மிக்க இக்கவிதைகள் குஜராத்திக் கவிதையுலகில் புதியதொரு உணர்ச்சியலை வீசச் செய்தன. இக்கவிதைகளின் வரிகள் இன்றளவும் குஜராத்தி பேசும் இல்லங்களில் சரளமாக எடுத்தாளப்படுகின்றன.

அவர் ஒரு பெரும் சமூக சீர்திருத்தவாதியாக இருந்ததால், அவருடைய கவிதைகள் பலவற்றில் சீர்திருத்தப் பிரசாரம் தூக்கலாக அமைந்திருப்பதில் வியப்பில்லை. ''வாஜோஸங்கும் சாந்த்பாவும்'' என்ற அவருடைய நீண்ட கவிதையின் கதாநாயகன் இந்து, கதாநாயகி முஸ்லிம்—இருவரும் காதல் திருமணம் செய்துகொள்கிருர்கள்; இது அக்காலத்தில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று!

பெண்களின் விடுதலையும் அவருக்குப் பிரியமான ஒன்ருக இருந்தது; விதவைகள் மறுமணம் செய்துகொள்வதை அவர் தீவிரமாக ஆதரித்தார். விதவைகளின் அவல வாழ்வைச் சித்திரிக்கும் கவிதைகளை எழுதினுர். பெண்களின் உரிமைகளுக்காக மன்ருடும் பல கவிதைகளையும் எழுதினுர். இத்தனையும் இன்னும் பலவும் அவரது சாதனைகள். ஒரு புதிய மரபின் முன்னேடி எனவும், ஒரு புதிய யுகத்தின் சிற்பி எனவும் ஒருவரை வர்ணிக்க இவை போதுமானவை; ஆனுல் இக் கவிதைகளின் ''கவிதையம்சம்'' எவ்வாறுனது? அவருக்கு முன்னரும் கவிஞர்கள் இருந்தார்கள்; அவருக்குப் பின்னரும் கவிஞர்கள் தோன்றியுள்ளார்கள். இத்தகையவர்களின் படைப்புகளுடன் ஒப்புநோக்கும்போது அவரது கவிதைகளின் தரம் என்ன?

துரதிர்ஷ்டவசமாக, இக்கேள்வியின் பதில் நர்மதாசங்கருக்குச் சாதகமானதாக இல்லை. ஏராளமான எண்ணிக்கையில் அவர் கவிதைகளெழுதியிருப்பது உண்மைதான்; ஆனுல் கவிதை என்ற முறையில் அவற்றின் தரம் மிக உயர்ந்ததாக இல்லை. பெரும்

பாலான கவிதைகள் நாசூக்கோ நளினமோ விஷயத்தெளிவோ இல்லாத வெறும் சொற்குவியல்களாகவே உள்ளன. ஒரு பண் பட்ட உள்ளத்தின் பக்குவமோ ஒரு கலைஞனின் கலைத்திறனோ அவற்றில் அறவே இல்லை. அபரிமிதமான உணர்ச்சி ததும்புகிறது; சரியான உணர்வுகள் வெளிப்படவும் செய்கின்றன; ஆனால் வெளிப் பாட்டில் மெருகும் முதிர்ச்சியும் இல்லை. சில கவிதைகள் ஆபாச மாகவேகூட இருக்கின்றன: படிப்பு வாசனையற்ற, நாகரிகப் பூச்சுகளற்ற ஒரு முரட்டு கிராமவாசியையும்கூட நாணச்செய்யும் அளவுக்கு இவை ஆபாசமானவை. கவிதைக் கலை பற்றி அவர் நூல்கள் எழுதியுள்ளார்; ஒரு நல்ல கவிதையின் லட்சணங்களைத் தையும் உணர்ந்திருக்கிறார்; ஆனால் அவர் கவிதையென எழுதி யவை பெரும்பாலும் கவிதையாகவே இல்லை. தம்முடைய பல கவிதைகளின் இறுதியில் நீண்ட விளக்கங்களை அவர் ஒட்ட வைத்திருப்பது அவற்றின் அழகை மேலும் கெடுக்கிறது. இதனால் பொருள் குழப்பம் ஏற்படுகிறது அல்லது விளக்கத்துக்கும் கவிதை யில் பயனாகியுள்ள சொற்களுக்கும் சம்பந்தமேயில்லை. இல்லை, நிச்சயமாக அவர் ஒரு மகாகவி இல்லை. தமது ஆங்கில ஆசிரியர் களின் மேற்பார்வையில் பல கவிதை, யாப்பு நூல்களை அவர் கற்றுணர்ந்தபோதிலும், ''ரஸ சாஸ்திரம்'' பற்றித் தாமே பல நூல்கள் எழுதியுள்ளபோதிலும், நல்ல கவிதையென்பது என்ன வென்பதை அவர் அறிந்துகொள்ளவில்லையென்றுதான் தோன்று கிறது.

கவிதையின் மென்மையான அம்சங்களை அவர் புரிந்துகொள்ள வில்லையென்பது 'கவிதையில் முக்கியமானது எது?' என்பது பற்றி அவர் விளக்க முற்படும்போது தெளிவாகிறது. இந்த முக்கியமான அம்சத்தை ''ஜுஸோ'' அல்லது ''உணர்ச்சி வேகம்'' என அவர் அழைக்கிறார். இது ஒரு திருப்திகரமான சொல்லாக்கம் அல்ல தான். ஆனால் பரவாயில்லை; கவிதையில் உணர்ச்சியும் இருக்க வேண்டும்தானே! உணர்ச்சிகளை ஊற்றாகக்கொள்ளாத கவிதை பெரும்பாலும் கவிதையாக இருக்காது; ஆனால் நல்ல கவிதையில் இருக்கவேண்டிய அம்சம் இந்த ஒன்று மட்டும்தானா என்ன? தாம் எழுத முற்பட்ட புதிய பாணிக் கவிதைகளில் இந்த ஓர் அம்சம் இருந்தாலே போதுமானதென நர்மதாசங்கர் முடிவு செய்தது போலத் தோன்றுகிறது—இந்த அம்சம் இருந்துவிட்டால் மற்ற அம்சங்கள் தானாகவே அமைந்துவிடும் அல்லது அவை இல்லா விட்டாலும் பரவாயில்லை என்று தமது கலைப் பிரிவின் தேவைகள் பற்றிய தவறான நம்பிக்கைகள், கருத்துகள் காரணமாகப் பல கவிஞர்கள் வழிதவறிச் சென்றுள்ளதாக ஜார்ஜ் ஸெயின்ட்ஸ்பரி கூறியுள்ளார். நர்மதாசங்கரின் விஷயத்தில் இது உண்மையாகி விட்டதென்றே தோன்றுகிறது.

பின், ஏராளமான மக்களால் ஒரு சிறந்த கவிஞராக அவர் போற்றப்படுவதன் ரகசியம் என்ன? அவர் கவிதைகளெழுதத் தொடங்கிய காலம் அப்படி என்றே சொல்ல வேண்டும். அவர் புதுமையானதும் அரிதானதுமான ஒரு முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு முன்னர் யாரும் அத்தகைய முயற்சியில் ஈடுபடவில்லை. மேலும், ஒரு போர் வீரனின் வெற்றியுடனும் ஆவேசத்துடனும் அவர் செயல்பட்டார். சதா உரத்த முழக்கங்களும் அறிக்கைகளும் அவரிடமிருந்து கிளம்பிய வண்ணமிருந்தன; வெல்ல முடியாத ஒரு பெருஞ் சக்தியாக அவர் தோன்றினார். இதற்கெல்லாம் மேலாக, அவர் எழுத முற்பட்டிருந்த புதுக் கவிதைகளின் தர நிர்ணயம் எந்த அடிப்படையில் செய்யப்பட வேண்டுமென்பது பற்றி அக்காலத்திய மக்களுக்குத் தெளிவான அபிப்பிராயங்கள் இல்லை. மக்களுடன் ஏதேதோ பகிர்ந்துகொள்ள வேண்டுமென்ற துடிப்பு அவரிடம் நிச்சயம் இருந்தது. தன்னுடைய பலவீனங்களைத் தனது தனிச் சிறப்புகளாக அவர் கருதினார். அவரை ஒரு கதாநாயகராக வரித்து விட்டிருந்த மக்களும் இவ்வாறே நம்பினர். மேலும் அக்காலத்தில் விமரிசகர்கள் எனக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களாக குஜராத்தி மொழியில் யாரும் கிடையாது. பிற்காலத்தில் பெரும் விமரிசகராகப் பெயரெடுத்த நவல்ராம் அப்போதுதான் தமது எழுத்து வாழ்வைத் துவங்கியிருந்தார்; நர்மதாசங்கரின் ஒரு எளிய சீடராகவே இவர் தம்மை அப்போது எண்ணிக்கொண்டார்.

எனவே, நர்மதாசங்கரை ஒரு கவியாக வகைப்படுத்தினாலும், ஒரு புதிய வடிவத்தை உருவாக்கி அதனைத் தன் கருத்துகளுக்கு வாகனமாக்க முயன்ற முன்னோடியாக அவரைப் புகழ்ந்த போதிலும், அவர் ஒரு சிறந்த கவியெனக் கூறுவது பொய்யாகவே இருக்கும். அதே சமயத்தில் ஒரு காலகட்டத்தில் குஜராத்தி மொழியின் மிகச் சிறந்த கவிஞராக அவர் ஒரு விமரிசகரால் வர்ணிக்கப்பட்டதும் உண்மைதான். ஒரு படைப்பாளியின் வாழ்நாளில் அவனது படைப்புகளைப் பற்றிக் கூறப்படும் கருத்துகள் எப்படிப் பெரும்பாலும் தவறானதாக அமைந்து விடுகின்றனவென்பதற்கு இது ஓர் உதாரணம். இன்று அவரது கவித் திறனைப்பற்றி அதிகபட்சமாக நாம் சொல்லக்கூடியது இதுதான்: சிறந்த கவிஞராகும் சாத்தியக்கூறுகள் அவரிடம் நிச்சயம் அமைந்திருந்தன; ஆற்றலும் இருந்தது; ஆனால் இந்தத் திறன்களை முழுமையாக மலரச் செய்ய அவரால் இயலவில்லை.

எனவே பிற்கால குஜராத்திக் கவிதைக்குப் புதிய பாதைகளை அமைத்துக் கொடுத்த முன்னோடியாக மட்டுமே அவரை வர்ணிக்கலாம்; ஒரு சிறந்த கவிஞராக அல்ல.

இவ்வாறு கவிதையைப் பொறுத்தவரை அவருக்கு உயர்ந்த கௌரவம் அளிக்க முடியாவிட்டாலும், வசன இலக்கியத்தில் அவர் உயர்ந்த மட்டங்களை எட்டியிருக்கிறாரென்பதில் சந்தேக மில்லை. அவரே குறிப்பிட்டுள்ளபடி, வசன மரபு அவருடைய காலத்தில்தான் மெல்ல உருவாகத் தொடங்கியிருந்தது. அவருடைய காலத்துக்கு முன்பு எழுதப்பட்ட வசனப் படைப்புகள் இலக்கியத் தரம் வாய்ந்தனவாக இல்லை. நர்மதாசங்கர்தான் நவீன குஜராத்தி வசன இலக்கியத்தின் முன்னோடியாகவும் ஸ்தாபகராகவும் அறியப்படுகிறார். வசனத்தைச் சக்தி வாய்ந்த ஒரு கருவியாக அவர் பயன்படுத்தினார். 1850ஆம் ஆண்டு ஒருநாள் தமது பதினேழாவது வயதில் ''சங்கங்களை அமைப்பதன் அனுகூலங் கள்'' என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய முதல் சொற்பொழிவி லிருந்து, அவர் மரணமடைந்த 1886ஆம் ஆண்டு வெளிவந்த ''தர்மவிசார்'' என்ற நூல் வரை, அவர் வசனத்தை மேலும் மேலும் லாவகமாகவும் கச்சிதமாகவும் மேதையுடனும் கையாண்டு வந்தார்.

வசன இலக்கியத்தில் அவர் புரிந்துள்ள சாதனைகள் பிரமிப் பூட்டுகின்றன. கடிதங்கள் மட்டுமே வசன நடையில் எழுதப்பட்டு வந்த ஒரு காலத்தில் சமூக சீர்திருத்தம் பற்றிக் காரசாரமான கனல் தெறிக்கும் கட்டுரைகளை அவர் எழுதினார். ஒரு முழு அகராதியைத் தாமே தனி ஆளாகத் தொகுத்து முடித்தார்—யாருமே பெருமைப்படக்கூடிய செயல். குஜராத்தி மொழியிலேயே முதன் முதலாக வரலாற்று நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். தர்மத்தைப் பற்றிச் சிந்தனையைத் தூண்டும் பல கட்டுரைகளை அவர் எழுதினார். இவை பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்ட அதே சமயத்தில், அவற்றின் வசன நடையிலிருந்த புதுமையும் மெருகும் பரவலான கவனத்துக்கு ஆளாகவும் செய்தன. குஜராத்தி மொழியில் முதலாவது சுயசரிதையை எழுதிய நபரும் அவர்தான். அது சற்றே அரைகுறையான தோற்றம் தந்த போதிலும் இன்றளவும் குஜராத்தி மொழியில் வெளிவந்த மிகச் சிறந்த சுயசரிதைகளில் ஒன்றாக விளங்குகிறது. நர்மதாசங்கர் என்ற மனிதரையும் அவரின் மனப்போக்கையும் இந்நூல் அறிய உதவுவதுடன், ஆற்றொழுக்குப் போன்ற அதன் சரளமான வசன நடை குதூகலமளிப்பதாக இருக்கிறது. அவருடைய பல வசனப் படைப்புகள் இவ்வகை மகிழ்ச்சியை அளிக்க வல்லன. ஒரே ஒரு உதாரணமாக, தெருப்பாடகி ஒருத்தியைப் பற்றிய அவரது வர்ணனையைக் குறிப்பிடலாம். இதே பொருள்பற்றி அவரெழுதி யுள்ள கவிதை சுமாராகத்தான் இருக்கிறது; ஆனால் வசனப் படைப்போ கே. எம். முன்ஷி போன்ற சிறந்த வசன எழுத்தாளரும் பொறாமைப்படும் விதத்தில் சிறப்பாக அமைந்திருக்

கிறது. சம்பந்தப்பட்ட பாராவின் மொழிபெயர்ப்பை இங்கு தரலாம்தான். ஆனால் மொழிபெயர்ப்பில் அதன் அழகும் சூடிகையும் கெட்டுவிடும்; வாசகர் உள்ளத்தில் இன்றளவும் உயிர்ச் சித்திரமாக உறையும் அந்த பவநகரத்து ஏழைத் தெருப் பாடகி வீணே மூளிப்படுவாள். அவருடைய சில தோத்திர வகைப் படைப்புகளும் அறைகூவல்களும் இன்று படிக்கும்போதும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. பல இடங்களில் சர்தார் வல்ல பாய் படேலின் பாணியை இவை நினைவூட்டுகின்றன.

அவருடைய கவிதைப் படைப்புகளில் காணப்படுகிற ஆபாசம், நாசூக்கின்மை, மெருகின்மை ஆகிய குணங்களை அவருடைய வசனப் படைப்புகள் சிலவற்றிலும் நாம் காண்கிறோம். இந்த குணங்கள் அவருடைய ஆளுமையின் ஒரு பகுதியேயாயினும், அவருடைய வசனப் படைப்புகளில் பல பத்திரிகைக் கட்டுரை வகையினவே தவிர ஆழ்ந்த இலக்கிய நோக்கில் படைக்கப்படவில்லை என்பது உண்மையாயினும், அவர் குஜராத்தி வசன இலக்கியத்தைப் புனருத்தாரணம் செய்ததோடு மட்டுமின்றி தமது கவர்ச்சியான, உணர்ச்சியுள்ள ஆளுமை மூலம் அந்த இலக்கியத்துக்கு வளமும் உரமும் ஊட்டினவரென்பதை மறுக்க இயலாது. நர்மதாசங்கரை ஒரு மனிதன் என்ற முறையிலும் எழுத்தாளனென்ற முறையிலும் கடுமையாக விமரிசித்து வந்த ஜே. ஈ. ஸன்ஜனு என்ற விமரிசகர் கூட, ''நர்மதாசங்கர் குஜராத்தி வசன இலக்கிய முன்னோடி, குஜராத்தி வசனச் சிற்பிகளில் முதலாமவர்'' என ஒப்புக்கொண்டுள்ளார். இதை நாமும் பலமாக அங்கீகரித்தேயாக வேண்டும்.

இத்தகைய கவிதை மற்றும் வசனப் படைப்புகள் தவிர, அறிவாற்றல் துறையிலும் அவர் புதிய பல சாதனைகள் புரிந்தார். மரபுவழி குஜராத்தி யாப்பு முறைகளை விளக்கும் நூலேதும் இல்லையென அறிந்தவுடன் அவரே முதன்முதலாக ''பிங்கள சாஸ்திரத்தை''ப் பற்றிய முழு நீள நூலொன்று எழுதினர். அந் நூலுக்கான ஆதாரத் தகவல்களைச் சேகரிப்பதற்காக அவர் மேற்கொண்ட சிரமங்களும் உழைத்த உழைப்பும் இந்நூலின் ஆரம்ப கட்டங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுவிட்டதால் இங்கு மீண்டும் அவற்றை விவரிக்கத் தேவையில்லை. அவருடைய உழைப்புத் திறனுக்கும் கல்வியார்வத்துக்கும் இந்நிகழ்ச்சி சிறந்த ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. ஒரு செயல் மற்றொரு செயலுக்கு வித்திட்டது. பிங்கள சாஸ்திரம் பற்றிய நூலை எழுதி முடித்த பிறகு அவர் தொடர்ந்து ''ரஸ பிரவேஷ்'', ''நாயிகா பிரவேஷ்'', ''அலங்கார் பிரவேஷ்'' ஆகிய நூல்களை ஒன்றன்பின் ஒன்றாக எழுதி முடித்தார். இந்நூல்களுக்கான ஆதாரத் தகவல்

களைச் சேகரிக்க அவர் மிகக் கடுமையாக உழைத்தார்; சிரமமான பயணங்களை மேற்கொண்டார். தம் சொந்தப் பணத்தைச் செலவழித்து இதையெல்லாம் செய்தார். இந்நூல்கள் குஜராத்தி மொழியில் தம் வகையைச் சேர்ந்த முன்னோடி நூல்களாகும். இவற்றையடுத்து இலக்கணம் பற்றின நூலொன்றும் அவர் எழுதினார். அந்நூலின் பெயர் ''வியாகரண் பிரவேஷ்.''

அறிவுலகில் இந்நூல்களின் உண்மையான மதிப்பு எப்படியாக இருப்பினும், நர்மதாசங்கரின் மகத்தான உழைக்கும் ஆற்றலும், கவிதை, இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் அவருக்கிருந்த மங்காத ஆர்வமும் வியப்பளிக்கவே செய்கின்றன.

அறிவாற்றல் துறை தவிர்த்த பிற துறைகளில் நர்மதாசங்கரின் மகத்தான சாதனைகள் காரணமாக இத்துறையில் அவர் ஆற்றியுள்ள பணிகள் மிக அபூர்வமாகவே குறிப்பிடப்படுகின்றன. ஆனால் தக்க தகுதிகள் படைத்திராத எவரும் இத்துறையில் இந்த அளவு பணி புரிந்திருக்க முடியாதென்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். இத்தகுதியைத் தம்மிடம் வளர்த்துக் கொள்ள அவர் எவ்வளவு கடுமையாக உழைத்தாரென்பதை நாம் அறிவோம். அவர் சம்ஸ்கிருத பண்டிதரல்லதான்; ஆனால் அதே சமயத்தில் அவர் ஒரு முழு முட்டாளாக இருந்திருந்தால் பந்தர்க்கர் போன்றோரின் நட்புக்குப் பாத்திரமானவராக ஆகியிருக்க முடியுமா என்ன? மேலும் இத்தனை நானாவிதமான படைப்புகள் வெறும் உழைப்பினால் மட்டுமே உருவாகி விடுவதில்லை. அவரை ஒரு பண்டிதர் அல்லது அறிஞர் என நாம் ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும்கூட, சாதாரண மனிதர்கள் நுழையத் தயங்கும் ஒரு துறையில் அவர் காட்டிய விடாமுயற்சியையும் சலியாத உழைப்பையும் பாராட்டவே வேண்டும்.

அவருள் கவிதையூற்று வரண்டவுடன் அவர் வெறுமனே சோம்பி உட்கார்ந்து தனது பழம் பெருமைகளைக் கூறிக்கொண்டு திரியவில்லை. புராதன மற்றும் நவீன காலகட்டங்களை அரவணைக் கும் மகத்தான உலக வரலாற்று நூலொன்றை எழுதினார். இந்நூலை எழுதுமுன் சுமார் இருநூறு புத்தகங்களைத் தாம் படித்ததாக அவரே தெரிவித்துள்ளார். அவர் படித்த புத்தகங்களின் எண்ணிக்கை இதற்கும் மேற்பட்டதாக இருக்குமென நாம் நம்ப லாம். இத்தகைய பெரும் பரிமாணமுள்ள விஷயங்கள் நீடித்த ஈடுபாடுள்ளவர்கள் மட்டுமே இலகுவில் கிரகிக்கக் கூடியவை. ''மகா புருஷர்களின் சரிதைகள்'' என்ற மற்றொரு பிரம்மாண்டமான நூலையும் அவர் எழுதியுள்ளார். இந்நூலுக்காக வேண்டியும் அவர் நிறையப் படித்திருக்க வேண்டும்; பெரும் ஆயத்தங்கள் மேற் கொண்டிருக்க வேண்டும். எத்தகைய கடும் வாழ்க்கைப் பிரச்சினைக

ளுக்கிடையில் அவர் செயல்பட்டு வந்தாரென்பதை உணர்ந்தால், இலக்கியம் மற்றும் பண்பாடு தொடர்பான விஷயங்களில் அவருக்கிருந்த முழுமையான ஈடுபாட்டை நாம் புரிந்துகொள்ளலாம்.

இதெல்லாம்மட்டுமில்லை. ''மகாபுருஷர்களின் சரிதைகள்'' என்ற அவருடைய நூல் வெளிவந்த அதே 1870ஆம் வருடத்தில் ராமாயணம், மகாபாரதம், இலியத் முதலிய காவியங்களின் கதைகளை விவரிக்கும் நூல்களை அவர் பதிப்பித்தார். இந்தக் காவியங்களை ஒருவர் படித்து முடிப்பதே பெரிய காரியம்; மிகச் சிலரே இச்செயலை மேற்கொள்ளுவர். நர்மதாசங்கரோ இக் காவியங்களை ஆதியோடந்தம் படித்து முடித்ததோடு மட்டுமின்றி அவற்றின் கதைச் சுருக்கங்களையும் தனித்தனி நூல்களாகப் பதிப்பித்தார்.

இதுவரை சொல்லப்பட்டதனைத்தும்கூட நர்மதாசங்கரின் இலக்கியப் பணிகளின் முழுமையான பட்டியலாகாது. அவர் கவிதையெழுதினர், வசனமெழுதினர், வரலாறும் வாழ்க்கைச் சரிதையும் எழுதினர். அழகியல் பற்றியும் யாப்பியல் பற்றியும் எழுதினர், இலக்கண நூல்களும் எழுதினர். ஆராய்ச்சித் துறையிலும் அவர் பணியாற்றினர், பழைய ஆசிரியர்களின் நூல்களைப் பதிப்பித்தார்.

தயாராமின் கவிதைத் தொகுதி ஒன்றை நர்மதாசங்கர் தொகுத்து வெளியிட்டதைப்பற்றி முன்னரே கூறினேம். அவருடைய பயணங்களின்போது ஒருமுறை நர்மதா நதிக்கரையிலிருந்த தபோய் என்னும் அழகிய சிற்றூருக்கு அவர் செல்ல நேர்ந்தது. தயாராமின் சொந்த ஊர் அதுதான். அங்கிருந்தபோது தயாராமின் வாழ்க்கை மற்றும் படைப்புகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க அவர் முயன்ருர். தயாராமின் சரியான உருவப்படம் ஒன்றைப் பெறவும் விசேஷ முயற்சிகள் எடுத்துக் கொண்டார். இச்செயல்களை விவரிக்கும் அவருடைய கடிதங்கள் படிக்கச் சுவையானவை. தயாராமின் கவிதைத் தொகுதியைப் பதிப்பித்ததுடன், மற்ருெரு கவியான பிரேமானந்தின் ''நாளாக்யா(ன்)'' என்னும் பிரசித்தமான நீண்ட கவிதையையும் அவர் பதிப்பித்தார். ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, குஜராத்தி மொழியின் மிகச் சிறந்த கவியாக பிரேமானந்தை அனைவரும் போற்றியபோதிலும், தாம் இவரைவிடவும் உயர்ந்த கவியென்ற மயக்கம் நர்மதாசங்கருக்கு அக்காலத்தில் இருந்தது. ஆனுல் அதற்காக பிரேமானந்தின் சிறப்புக்களை அவர் அலட்சியம் செய்துவிடவில்லை. இக்கவியின் மிகச் சிறந்த, மிக முக்கியமான படைப்பைத் தாமே முனைந்து பதிப்பித்தார்.

நர்மதாசங்கரின் ஆராய்ச்சிப் பணி பிரபல ஆசிரியர்களின் படைப்புகளைப் பதிப்பிப்பதுடனும் பிரசுரிப்பதுடனும் மட்டுமே நின்றுவிடவில்லை. ''நாகர்'' சமூகப் பிரிவைச் சேர்ந்தவரான அவர் தம் சமூகத்துப் பெண்களிடையே புழக்கத்திலிருந்துவந்த சுவையான நாட்டுப் பாடல்களைச் சேகரித்து, வகைப்படுத்தி, அவற்றின் ஆதாரபூர்வமான தொகுப்பொன்றை வெளியிட்டார். ''நாகர்'' சமூகத்துப் பெண்கள் பாடுவதில் வல்லவர்கள், குழந்தைப் பருவத்திலிருந்தே இசைப் பயிற்சி பெறுபவர்கள். இவர்களுடைய பாடல்களைக் கொண்ட இத்தொகுப்பும் 1870-ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதில் அவருடைய மனைவியும், அவருக்குப் பரிச்சயமாகியிருந்த இதர பெண்களும் அவருக்கு மிகவும் உதவியாயிருந்தனர். அந்நாட்களில் அந்நிய ஆடவர் முன் பாட்டுப் பாடிக்காட்ட எந்தப் பெண்ணும் இசையமாட்டாள். இந்தப் பெண்களின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்ததால்தான் அவர் இப்பாடல்களைத் தொகுத்து வெளியிட முடிந்தது.

''நாகர்'' சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் எப்படித் தம் அழகுக்கும் பாடல்களுக்கும் பெயர் பெற்றவர்களாயிருந்தனரோ, அப்படியே காத்தியவார் (இன்றைய சௌராஷ்டிரம்) பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது வீரத்துக்கும் நாடோடி இலக்கிய வளத்துக்கும் பெயர் பெற்றவர்களாயிருந்தனர். இச்சமூகத்தினர் தொடர்பான சில ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டாரென அவருடைய சில கடிதங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இவர்களின் நாடோடி இலக்கியம்பற்றின நூல் எதையும் அவர் எழுதி முடிக்க இயலாவிட்டாலும், இச்சமூகத்தினரைப்பற்றி அவர் சேகரித்த ஏராளமான தகவல்கள் ''காத்தியவார் சர்வ சங்கிரக'' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தன. இந்நூல் கிட்டத்தட்ட அப்பிராந்தியத்தைப்பற்றிய ஒரு கலைக்களஞ்சியமென்றே கூற வேண்டும்.

நர்மதாசங்கர் மொழியின் எழுதும்முறை அல்லது ''லிபி'' தொடர்பான பிரச்சினைகளிலும் ஆர்வமுள்ளவராக இருந்தார். குஜராத்தி மொழியின் முதலாவது பன்மொழிப் புலவரும் மொழியியல் வல்லுனருமான நரசிம்ம ராவ் திவேட்டியா, இத்துறையில் நர்மதாசங்கர் எடுத்துக்கொண்ட சில முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

நர்மதாசங்கர் ஒரு எழுத்தாளரென்ற முறையில் இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் ஆர்வம் காட்டியதுடன் இந்தத் துறைகளிலெல்லாம் பணியாற்றவும் செய்தார். அவருடைய பல

சொந்த வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பொருட்படுத்தாமல், நிலையான வேலையில்லாததால் அவர் சமாளிக்கவேண்டியிருந்த பெரும் இன்னல்களுக்கிடையே, இந்த அளவு ஏராளமான பணிகளை அவர் மேற்கொண்டது வியப்பைத் தரும் சாதனை. இதனால்தான், அவர் பணியாற்றிய எல்லாத் துறைகளிலுமே அவர் சம அளவில் வெற்றி பெறாவிடினும், இன்றளவும் குஜராத்தி மக்கள் தம் மொழிக்கு அவர் ஆற்றியுள்ள சேவைகளைப்பற்றி மிக உயர்வாகப் பேசுகிறார்கள்.

# XI

நர்மதாசங்கர் என்ற எழுத்தாளரைப்போலவே நர்மதா சங்கர் என்ற மனிதரும் வியப்பூட்டுகின்ற பெரும் ஆகிருதி படைத்தவர். எழுத்தாளர் என்ற முறையில் இருந்ததைவிட மனிதர் என்ற முறையில் அவர் மேலும் சிறந்தவர் என்று சொல்லலாம். பிற்காலத்தில் அவர் எத்தகைய மகத்தானதொரு மனிதராக விளங்கப்போகிறாரென்பதற்கான அறிகுறிகள் ஏதும் அவருடைய சிறு பிராயத்தில் காணப்படவில்லை. அவரே கூறியுள்ளதுபோல, தம் சிறு வயதில் அவர் மிகவும் பயந்தாங்கொள்ளியாகவும் கூச்ச சுபாவமுள்ளவராகவும் விளங்கினார். எல்லாக் கடவுளரிடமும் பயப்படுகிறவராக இருந்தார். அடிக்கடி பயங்கரக் கனவுகளைக் கண்டு வந்தார். எனவே பிற்காலத்தில் சிறிதும் கூச்சமோ பயமோ இன்றி யார் முன்னிலையில் வேண்டுமானாலும் சென்று எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசக்கூடிய ஒரு அடாவடிக்காரராக அவர் மாறியது ஆச்சரியந்தான். வாலிபப் பருவத்தில் பரம நாஸ்திகராக அவர் மாறிப்போனதும் ஆச்சரியந்தான். நவீன மனோதத்துவக் கோட்பாடுகளின்படி இம்மாறுதல்களுக்கு எளிதில் விளக்கங்கள் கூறிவிட முடியும்; ஆனால் இங்கு அத்தகைய சர்ச்சைகளுக்கு இடமில்லை. அவருடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தில் மீண்டும் அவரிடம் ஏற்பட்ட மனமாற்றங்களும் மனோதத்துவ ரீதியாக எளிதில் புரிந்து கொள்ளக்கூடியவையே.

இதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். நர்மதாசங்கர் ஒரு துணிச்சலான மனிதரென்பதிலும் யாரையும் அயரச் செய்யும் மகத்தான ஆளுமை படைத்தவரென்பதிலும் எந்தச் சந்தேகமும் இல்லை. சக்திவாய்ந்த மனிதர், மரியாதைக்குரியவருங்கூட. அவருடைய பல குறைகளைப்பற்றிய முழு அறிவுடன் அவரைப்பற்றி இவ்வாறு துணிந்து கூறலாம்.

ஆம், அவரிடமிருந்த குறைகள் பல, இவை சிறிய குறைகளும் அல்ல. அவருக்கு அகந்தை அதிகம், பிடிவாதமும் அதிகம். போதிய காரணமின்றியே பல தடவைகளில் பலரை அவர் தம் விரோதிகளாக நினைத்தார்; தாறுமாறாக அவர்கள்மீது வசைமாரி பொழிந்தார். குஜராத்தி மொழியின் முதலாவது குறிப்பிடத்தக்க நாவலான ''கரண் கேலோ''வின் ஆசிரியர் நந்த் சங்கருக்கும் அவருக்குமிடையே நடந்த காரசாரமான கடிதப் போக்குவரத்து இதற்கொரு சிறந்த உதாரணம். வேறு சில மனிதர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களும், இதேபோல, குத்தலும் கூரிய கிண்டலும்

நிரம்பினவாய் உள்ளன. பவநகரில் இருந்த அவருடைய நண்பர்கள் அவருக்குப் பொருளுதவியும் பூரண ஒத்துழைப்பும் தந்து கொண்டிருந்தபோதே அவர் அவர்களைப் போன்றவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பல கட்டுரைகளை எழுதினர். நர்மதா சங்கரின் இத்தகைய நடவடிக்கையையும் பொருட்படுத்தாது ஹரிராம் ஸந்தோக்ராம் தேசாய் என்ற நண்பர் ரகசியமாக—யார் அனுப்பினரென்கிற விபரமின்றி—நர்மதாசங்கருக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பிவைத்ததைப்பற்றி முந்தின அத்தியாயமொன்றில் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஒரு தடவை வீட்டில் ஏழே ரூபாய் இருந்த தருணத்தில் வீடு தேடிவந்த ஒரு கிழவருக்கு நூறு ரூபாய் கொடுப்பதாக நர்மதாசங்கர் வாக்குக் கொடுத்த சம்பவமும் ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ளது. அம் மனிதரைச் சில தினங்களுக்குப் பின் வருமாறு கூறி நர்மதாசங்கர் அனுப்பி வைத்தார். இதற்குச் சில நாட்களுக்குப் பின்தான் தபால்காரன் கற்றை கற்றையாக ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நோட்டுகள் அடங்கிய உறையொன்றைக் கொண்டுவந்தான். அந்த உறையுடன் இணைத்திருந்த குறிப்பில் ''உங்கள் சிறந்த நண்பன் மற்றும் விசிறியிடமிருந்து'' என்றுமட்டும் எழுதியிருந்தது. அந்த நண்பர் வேறு யாருமல்ல, பவநகரைச் சேர்ந்த ஹரிபிரசாத் ஸந்தோக்ராம் தேசாய்தான். தபால்காரன் அந்த உறையைக் கொண்டுவந்த தருணத்தில் அவரும் நர்மதாசங்கர் வீட்டில்தான் இருந்தார், அமைதியாக அக்காட்சியைப் பார்த்து ரசித்த வண்ணம். நர்மதாசங்கர் தன்னைப்பற்றிக் கன்னுபின்னுவென்று திட்டி எழுதிவந்ததைக்கூட இந்தப் பரம ரசிகர் பொருட்படுத்தவில்லை.

நர்மதாசங்கரின் பொறுமையின்மைக்கும் பொறுமைக்கும் ஓர் உதாரணமாக நல்ல மனமும் அமைதியான இயல்பும் கொண்ட, கவி தல்பத்ராமுக்கும் அவருக்குமிடையே நிலவிய உறவுகளைக் குறிப்பிடலாம். தல்பத்ராம் தனக்கெதிராகச் சூழ்ச்சிகள் புரிவதாகவும் தனது சாதனைகளையும் செல்வாக்கையும் குறைத்து மதிப்பிடுவதாகவும் நர்மதாசங்கருக்கு எப்போதும் அந்தக் கிழவர்மீது ஒரு சந்தேகம் இருந்துவந்தது. இந்தச் சந்தேகங்களில் சிறிதளவு உண்மை இருக்கலாம்தான்; ஆனல் தன்னைவிட வயதில் பெரியவரும் தன்னைவிடச் சிறந்த கவியுமான தல்பத்ராமுக்குத் தான் இழைத்துவரும் அநீதியை அவர் உணரவேயில்லை. அந்நாளைய குஜராத்தி இலக்கியத்தின் இரு முக்கியமான பெயர்களான இந்த இரு எழுத்தாளர்களின் வாழ்வில் இது ஒரு இழிவான இழையாக விளங்குகிறது. அக்காலகட்டமே இன்று ''நர்மத்—தல்பத் யுகம்'' என வர்ணிக்கப்படுகிறது. அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கும் இந்த இரு இலக்கிய ஜாம்பவான்

களும் தமது வாழ்நாளில் சில பொழுதுகளிலாவது ஒருவர்பால் மற்றவர் கௌரவமற்ற உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்துவிட்டது துரதிர்ஷ்டமே. ஆனால் கலை, இலக்கிய உலகின் வரலாற்றில் இத்தகைய பொருமையும் சகிப்புணர்வின்மையும் அரிய செய்திகள் அல்ல. என்ன செய்ய, இவை மனிதர் யாவருக்கும் பொதுவான பலவீனங்கள்; இந்த இரு எழுத்தாளரும்கூட, பாவம், இவற்றுக்குப் பலியாகிவிட்டனர்.

இவ்வாறு தன்னைவிட வயதில் மூத்தவரும் செல்வாக்கு மிக்க வருமான தல்பத்ராமின்பால் நர்மதாசங்கருக்கிருந்த பொருமை உணர்ச்சியையாவது புரிந்துகொண்டு மன்னித்துவிடலாம்; ஆனால் தனது நெருங்கிய நண்பரும் சமூக சீர்திருத்தப் பணிகளில் தம்முடன் தோளோடுதோள் இணைந்து பணிபுரிந்தவருமான கர்ஸன் தாஸ் முல்ஜியின்மீதுகூட அவர் பொருமை கொண்டாரென்றால் அதை என்னவென்று சொல்வது! ''மகாராஜ் மானநஷ்ட வழக்கு'' தொடர்பாக கர்ஸன்தாஸ் முல்ஜி பெரும் புகழ் பெற்றதை நர்மதாசங்கரால் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. கர்ஸன்தாஸ் முல்ஜி இந்நிகழ்ச்சியின் மூலம் தன் தகுதிக்கு மீறின புகழை அபகரித்துக்கொண்டதாக நர்மதா சங்கர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். அதாவது இப்புகழில் ஒரு பகுதி நர்மதாசங்கருக்குக் கிடைத்திருக்கவேண்டுமாம், ஆனால் கர்ஸன்தாஸ் அநியாயமாக . . . நம்மால் நர்மதாசங்கரைப் புரிந்து கொள்ளமுடிகிறது!

இந்தப் பலவீனங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்றது, நர்மதாசங்கரின் பெண்ணாசை. பெண்களுடன் உறவுகொள்ளும் விஷயத்தில் எல்லாவிதமான ஒழுக்க நியதிகளையும் கட்டுப்பாடுகளையும் அவர் ஒதுக்கிவைத்துவிடுவார். ஆண்—பெண் சமத்துவம் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் காரசாரமாகப் பேசியும் எழுதியும் வந்த அவருடைய உண்மையான சொரூபம் தன் மனைவி தஹி கௌரிக்கும் அவருக்குமிடையே, இன்னொரு மனைவியை வீட்டுக்குள் அழைத்துவருவதன் தொடர்பாக நிகழ்ந்த சம்பாஷணையின்போது வெளிப்படுகிறது. இச்சம்பாஷணை நமக்கு வெளிப்படுத்துவது புராதனத்திலும் புராதனமான ஒரு இந்துக் கணவனை—தன் மனைவியை அடக்கியாளுதல் தனது பிறப்புரிமை எனப் பிடிவாதமாக நம்புகிற கணவனை! மனைவி தஹிகௌரியின் பொறுமையும் நல்ல குணமுமே அவர்களுடைய திருமணத்தைச் சிதறாமல் காப்பாற்றி வந்தது.

அவருடைய இன்னும் எத்தனையோ குறைகளையும் பலவீனங்களையும் பட்டியலிட்டுக்கொண்டு போகலாம். இவற்றில் சில அலட்சியப்படுத்த இயலாத அளவுக்குப் பெரியவை, மோச

மானவை. ஆனால் இதற்கெல்லாம் அப்பாற்பட்டும் நர்மதாசங்கர் அரியதொரு மகத்துவத்தைப் பெற்றிருந்தார். இந்த மகத்துவத்தின் பரிமாணங்கள் அலாதியானவை.

''மகத்தான'' என்ற வர்ணனை எத்தனையோ இயல்புகளைச் சார்ந்து உருவாவது. துணிவு இவ்வியல்புகளில் முக்கியமான ஒன்று. நர்மதாசங்கர், துணிச்சலைப் பொறுத்தவரையில், ஈடிணையற்றவராகவே திகழ்கிறார். அவருடைய சிறு பிராயத்து கோழைத்தனம், பயம், கூச்சம் ஆகியவற்றை அவர் சடுதியில் களைந்தெறிந்தார். தமது பதினேழாவது வயதிலேயே அவர் ஒரு சங்கம் அமைத்ததோடு இல்லாமல் அதன் தலைவராகவும் ஆனார்; சங்கத்தில் ஒரு அருமையான சொற்பொழிவும் ஆற்றினார். பின்னாளில் குஜராத்தி மொழியின் சிறந்த வசனப் படைப்புகளில் ஒன்றாக இச்சொற்பொழிவு பாராட்டப்பட்டது. இதற்கு உடல் வலிமை சார்ந்த துணிவல்ல, கொள்கைத் துணிவும் உறுதியான நம்பிக்கைகளும்தான் தேவைப்பட்டன. இக்குணங்கள் அவருடைய வாழ்நாள் முழுவதிலும் அவரிடம் அமைந்திருந்தன. மற்றொரு சந்தர்ப்பத்தில்—சூரத்தில் தனது சொந்த வட்டத்தினரிடையே சீர்திருத்தங்களைச் செயலாக்க முயன்றபோது—அவர் இன்னும் பெரிய துணிச்சலை வெளிப்படுத்தினார். தான தருமத்தைப்போல, சீர்திருத்தமும் முதலில் அவரவர் விஷயத்தில் அமுலாகவேண்டும், பிறகுதான் வெளி மனிதருக்கு இவற்றைச் சிபாரிசு செய்யலாம். சந்தர்ப்பம் வந்தபோது தனது சொந்த சமூகத்தின் சில பழக்கவழக்கங்கள் குறித்துக் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்க அவர் தயங்கவில்லை. பொது விருந்துகளின்போது ரவிக்கையணிதல் கூடாதென அவருடைய சாதிப் பெண்களின்மீது விதிக்கப்பட்டிருந்த தடையை அவர் உடைத்தெறிந்ததையே இங்கு குறிப்பிடுகிறேன். ஆனால் இந்நிகழ்ச்சி திமிரையும், ''வம்புக்கிழுக்கும்'' அசட்டுத் துணிச்சலையும் வெளிப்படுத்துகிறதேயல்லாது உண்மையான, செறிவான மனத்துணிவையல்ல என்றும் சிலர் வாதிடலாம்தான்.

சரி; மேற்சொன்ன நிகழ்ச்சி வேண்டுமானால் அசட்டுத் துணிவைக் காட்டுவதாக இருக்கலாம். ஆனால் வைணவப் பூசாரியான ஜதுநாத்ஜி மகாராஜுடன் அவர் தனியாளாகப் போரிட்டதை நிச்சயம் இவ்வாறு ஒதுக்கிவிடமுடியாது. அந்நிகழ்ச்சியின்போது அவருடைய உயிரே ஆபத்தில் இருந்தது; அவரும் அதை நன்கு உணர்ந்தேயிருந்தார். சீர்திருத்தவாதக் குழுவைச்சேர்ந்த தனது இதர நண்பர்கள் இச்செயலை ஆதரிக்கமாட்டார்களென்பதையும் அவர் அறிந்திருந்தார். இவ்வளவும் தெரிந்திருந்தும் ஜதுநாத்ஜிக்கும் தனக்குமிடையே பொது மேடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''சந்திப்பு நிகழ்ச்சி''க்கு அவர் ஒரே ஒரு துணையுடன்

சென்றார். இந்த நண்பரையும்—கிஷன்தாஸ் பாவா—தனது தந்தையை அங்கே கண்டதும் அவருடன் அவருக்குத் துணையாக வெளியே அனுப்பிவிட்டார். தனது தந்தைக்கு ஆபத்து நேரக்கூடு மென்றும் இந்த வலிமை மிக்க நண்பரே அவருக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியுமென்றும் அவர் அறிந்திருந்தார். இந்த நண்பரும் சென்றுவிட்டால் தனக்கு நேரக்கூடிய பெரும் ஆபத்தைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை.

பிடிவாதமும் சவாலும் தெறிக்க, தலையையும் நெஞ்சையும் நிமிர்த்தி வைத்துக்கொண்டு அக்கூட்டத்தினரை நோக்கி, ''சாஸ்திரங்கள் ஒன்றும் கடவுள் எழுதிவைத்தவையல்ல'' என அவர் முழங்கியதை நம்மால் கற்பனை செய்து பார்க்கமுடிகிறது. அதிர்ஷ்டவசமாக அவ்விடத்திலிருந்து எவ்விதச் சேதமுமில்லாமல் அவர் தப்பிச் சென்றுவிட்டார்தான்; ஆனால் அவருக்கு அன்று நல்ல அடியும் விழுந்திருக்கலாம். அது ஒரு வெறிபிடித்த செயலாக இருந்திருக்கலாம்தான்; ஆனால் அப்படிச் செய்வதற்கு அரியதொரு துணிச்சலும் தேவையென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

விதவை நர்மதா கௌரியை அவர் திருமணம் செய்து கொண்டதும் இத்தகைய துணிச்சலையே வெளிப்படுத்துகிறது. சட்டபூர்வமான ஒரு மனைவி—அதுவும் தங்கமான குணமுள்ளவளாக ஒருத்தி—இருக்கையில் இவ்வாறு அவர் இன்னொரு திருமணம் செய்துகொண்டதை யாரும் ஆதரிக்கமாட்டார்கள்தான். ஆனாலும் அவருடைய இந்த முடிவு துணிச்சலான ஒன்றென ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதனால் அவர் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டார்; நண்பர்களும் பல ரசிகர்களும் அவரை வெறுக்கலாயினர். பொதுவாக இச்செயலின் மூலம் பல தரப்பினரின் எதிர்ப்பை அவர் சம்பாதித்துக் கொண்டார். ஆனால் இதனாலெல்லாம் அவர் சிறிதும் கலங்கவில்லை; முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை. விதவைகள் மறுமணத்தைப்பற்றி இத்தனை நாட்களாக இத்தனை தீவிரமாக தான் பிரசாரம் செய்துவிட்டு, இதனைச் செயல் மூலம் நிரூபிக்கத் தன் வாழ்விலொரு சந்தர்ப்பம் ஏற்படுகையில் தான் பின்வாங்குவது சரியல்லவென்று அவருக்குத் தோன்றியது. அவருடைய அந்த நிலைமையில் அந்த விதவையைத் திருமணம் செய்து கொள்வதே அவருக்குச் சோபை தருமென்று அவருக்குப் பட்டதால், பலத்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் அவர் இச்செயலில் ஈடுபட்டார்.

துணிவையும் வீரத்தையும் தவிர நர்மதாசங்கரிடமிருந்த இன்னொரு சிறப்பு அவருடைய தயாள குணம். அவரை ஒரு பெரிய ஊதாரியெனப் பலர் குறை கூறியுள்ளனர்; பல சமயங்களில் வரவுக்கு மீறி அவர் செலவு செய்தாரென்பதும் மிகச் சிரம தசையி

லிருந்த சில தருணங்களிலும்கூட தமது சொந்தச் செலவுகளைக் குறைத்துக்கொள்ள முயலவில்லையென்பதும் உண்மைதான். இதெல்லாம் சரியல்லதான். தாராள மனப்பான்மையைப் பிறர் விஷயத்தில் ஒருவர் காட்டும்போது அதை ஒரு நற்குணமாகப் பாராட்டலாமே தவிர தன் விஷயங்களில் அவர் காட்டுகிற தாராளப் போக்கை நாம் போற்றமுடியாதுதான். ஆனால் பிறர் விஷயத்தில் அவர் தாராள மனப்பான்மையைக் காட்டினாரென நிரூபிக்கும் நிகழ்ச்சிகளும் அவருடைய வாழ்க்கையில் நிறைய இருக்கவே செய்கின்றன. வீட்டில் ஏழே ரூபாய் இருந்த ஒரு நாளன்று, இந்த உண்மை நிலை அறியாதவராக யாசகம் கேட்டு வந்த ஒரு முதியவருக்கு நூறு ரூபாய் கொடுத்தனுப்புமாறு தமது காரியதரிசிக்கு அவர் உத்தரவிடவில்லையா? பிறகு, வீட்டில் பண மில்லையென்று தெரிந்தவுடன், அம்மனிதரைச் சில தினங்களுக்குப் பிறகு வரச்சொன்னதோடுமட்டுமின்றி, வீட்டில் பணம் வந்த வுடன் முதல் வேலையாக அந்த முதியவருக்காக அதிலிருந்து நூறு ரூபாய் ஒதுக்கிவைக்குமாறு நர்மதாசங்கர் கூறினார். நூறு ரூபாய் அந்நாட்களில் ஒரு சிறிய தொகையல்ல, நர்மதாசங்கரின் அப் போதைய நிலையில் அம்முதியவருக்கு அவர் கொடுத்த இத்தொகை அளவில் மிகப் பெரியது. தனது உண்மையான நிலைமைபற்றி அவர் அறிந்திருக்கவில்லை என்பதல்ல, அவருடைய தயாள குணம் காரணமாக வேறெந்த விதத்திலும் அவர் செயல்பட்டிருக்க முடியாதென்பதே உண்மை. அவருடைய மனதில் நிறைந்திருந்த பெரும் கருணை காரணமாகவே நிதிப் பற்றாக்குறை நிலைமை விளை வித்த பல இன்னல்களை அமைதியாகவும் சுணங்காமலும் அவரால் ஏற்கமுடிந்தது. இத்தகைய துறவு மனப்பான்மை உள்ளவரால் தான், வீட்டில் நாலே அணாத்தான் இருக்கிறதென்று தம்மிடம் கூறப்பட்ட தகவலைப் புன்னகையுடன் ஏற்று, அக்காசுக்கும் பொரி வாங்கிவருமாறு கூறி, ''இதுவும் வாழ்க்கையின் ஒரு கட்டம்'' என அமைதியாகக் கூறியிருக்க முடியும்.

நர்மதாசங்கருடைய மாணவராகத் தமது இளம் பருவத்தை அவருடைய வீட்டில் கழித்த ராஜாராம் சாஸ்திரி விவரித்துள்ள ஒரு நிகழ்ச்சியை இங்கு நினைவுகூருவது பொருத்தமாயிருக்கும். கவியின் கடைசி நாட்களைப்பற்றின குறிப்பு அது. நர்மதாசங்கரின் மரண தினத்துக்குச் சிலநாள் முன்புதான் காபர்டே என்ற அவ ருடைய நண்பர் பம்பாய் அரசுக்காக நர்மதாசங்கர் செய்திருந்த வேலை ஒன்றுக்காக அவருக்கு அங்கிருந்து வரவேண்டியிருந்த தொகையொன்றைத் தாமே வாங்கிவந்து கொடுத்தார். இந்தப் பணம், சூரத்திலிருந்த தமது வீடொன்றை விற்ற பணம், இந்த இரண்டிலிருந்தும் ஒரு பகுதியை பம்பாயைச் சேர்ந்த இரு ஏழை மாணவர்களுக்கு உதவுவதற்காக நர்மதாசங்கர் ஒதுக்கிவைத்

தார். இன்னொரு பகுதியை பிரபுராம் மேத்தா என்பவருக்குத் தாம் கொடுக்கவேண்டியிருந்த கடன் ஒன்றைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தினார். இவ்வாறு தான் கொடுக்கவேண்டியிருந்த கடன்களையெல்லாம் கொடுத்துத் தீர்த்தபின் அவர் அமைதியாக மரணத்தை வரவேற்கத் தயாரானார். மிக அதிகமான தயாள குணமும் நல்லிதயமும் படைத்தவர்களே தமது இறுதி நாட்களின் நிதிப் பற்றாக்குறைக்கிடையிலும் இத்தகைய கடமையுணர்வுடன் செயல்படுவர்.

''தர்ம விசார்'' என்ற அவருடைய கடைசி நூலில், அந்தக் கட்டம்வரை அவர் வெளிப்படுத்திவந்த கருத்துக்கள், மதக் கண்ணோட்டம் ஆகியவற்றை அவர் திடீரென மறுதளித்திருப்பதைப் பலர் விமரிசித்துள்ளனர். இந்த மாறுதல் குறித்து வியப்பில் ஆழ்ந்துள்ளனர். தமது மனமாற்றத்தை வெளிப்படுத்த அவர் தயங்கவில்லை; அதனை ஒளித்துவைக்கமுயலவில்லை என்பதே இங்கு குறிப்பிடத்தக்கது. தமது நம்பிக்கைகளிலும் கண்ணோட்டத்திலும் ஏற்பட்டிருந்த மாறுதல்களை உரக்க அறிவித்த அவருடைய செயலை, அவருடைய வாழ்க்கையின் மிகத் துணிவானதும் வீரம் நிறைந்ததுமான ஒரு செயலாகக் கருதவேண்டுமென்பது என் கருத்து.

ஏனென்று பார்ப்போம். வைஷ்ணவ மகாராஜுடன் நிகழ்ந்த மோதலைத் தொடர்ந்து அதுவரை சீர்திருத்தப் பணிகளில் அவருக்குத் துணையாயிருந்துவந்த சிநேகிதர்கள் திடீரென அவரை விட்டு விலகிவிட, நர்மதாசங்கருக்கு அத்தகையவர்களிடம் அடியோடு நம்பிக்கையில்லாமல் போயிற்று. நாளாக ஆக, இந்த மனச்சோர்வும் ஏமாற்றமும் அதிகரித்தனவே ஒழியக் குறையவில்லை. இவர்களெல்லாம் வாய்ப்பேச்சில்தான் வீரர்கள், செயலில் கோழைகள்—வீரமும் தியாகமும் தேவைப்படுகின்றபோது அவசரமாகப் பின் வாங்குபவர்கள்—என அவர் உணரத்தொடங்கியிருந்தார். இந்த உணர்வுடன், அவரது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட மனமுறிவுகளும் ஏமாற்றங்களும் சேர்ந்துகொள்ள, அவரது இறுதி நாட்களில் அவரது சிந்தனைத் தடங்கள், போக்குகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. தனது பழைய நண்பர்கள் பயனற்றவர்கள் என நினைத்த அதே கணத்தில் தனது பழைய கருத்துக்கள் பயனற்றவையெனவும் அவர் நினைத்தார். தமது கருத்துக்கள், கொள்கைகள் யாவற்றையும் அவர் தீவிரமாக மறுபரிசீலனை செய்தார்.

இந்த மறுபரிசீலனையின் விளைவாக, தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை எந்தக் கருத்துக்கள், கொள்கைகளை வலியுறுத்துவதில் செலவிட்டாரோ, எவை நிமித்தம் ஆவேசமான போராட்டங்களில் ஈடுபட்டிருந்தாரோ, அக்கருத்துக்கள், கொள்கைகள்

யாவற்றையும் மெல்ல மெல்ல—நாளாவட்டத்தில் முழுமையாக—அவர் புறக்கணித்தார். விதவைகள் மறுமணம் செய்துகொள்வது தவறென்று இப்போது அவருக்குத் தோன்றியது. ஒரு பெண், தனது கணவன் எப்படிப்பட்டவனுயினும், தனது வாழ்க்கையை முழுமையாக அவனுக்கு அர்ப்பணிக்கவேண்டியவளாவாள் என அவர் இப்போது கூறினுர். சனுதனமான இந்து தர்ம சாஸ்திரங்களில் அடங்கியுள்ள அறிவின் சாரமே உண்மையானது, பின்பற்றத்தக்கது. சமூக, மத சம்பந்தமான சீர்திருத்தங்களின் தேவைபற்றின அவரது பழைய அறைகூவல்கள், உலகம் உய்வுற இதுவே வழியென்ற பிரலாபம்—இவையெல்லாம் வெறும் பிதற்றல்கள். உணவு, பானங்கள் ஆகியவற்றை உட்கொள்ளுதலிலும்கூட சாஸ்திரங்களில் கண்டுள்ள விதிகளை முழுமையாகப் பின்பற்றுபவனே உண்மையான இந்து.

இந்த முடிவுகளுக்கு அவர் வந்த பிறகு, இவையே உண்மைகள் என்று அவர் நிச்சயமாக உணர்ந்ததால், வாயை மூடிக்கொண்டிராமல் தமது இந்தப் புதிய நம்பிக்கைகளை உரக்கப் பறைசாற்றினுர் அவர். எல்லாரும் அவருடைய ''பல்டி''யைப் பார்த்து மலைத்துப் போயினர். பலர் கேலி செய்தனர். பலர் தூற்றினர். ஆனுல் முன்பு இக்கருத்துக்களுக்கு எதிரிடையான கருத்துக்களைப் பிரசாரம் செய்தபோது அவரிடமிருந்த, குறுக்கீடுகளினுல் சற்றும் பாதிக்கப்படாத, ஒரு அலட்சிய பாவமே இப்போதும் அவரிடம் குடிகொண்டிருந்தது. தாம் செய்தவை குறித்து அவர் சிறிதும் பச்சாதாபம் கொள்ளவில்லை.

சிலர் கூறுவதுபோல, சமூகத்தில் பொதுவாகச் சீர்திருத்தங்களின்பால் ஆர்வம் குறைந்து வந்ததால், இச்சூழ்நிலையில் மக்களின் பாராட்டைப் பெறுவதற்காக நர்மதாசங்கர் தமது கொள்கைகளை மாற்றிக்கொண்டாரென்பது சரியல்ல. சீர்திருத்தவாதிகளின் தொடக்க காலத்திய உற்சாகமும் மிகையான தீவிரமும் பின்னர் சற்றே மட்டுப்பட்டு, ஆற அமரச் சிந்தித்துச் செயல்படும் போக்கு அவர்களிடையே பரவலாயிற்றே தவிர, சீர்திருத்தக் கருத்துக்களே மடிந்துபோயின என்று சொல்வது சரியில்லை. புதிதாகச் செயல்படத் துவங்கியிருந்த பம்பாய் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரிகள் இலக்கியம், கலை ஆகிய துறைகளில் பிரவேசிக்கத் தொடங்கியிருந்தார்கள்; இவர்கள் சீர்த்திருத்தக் கருத்துக்களைச் சரியான களங்களில் திட்டமிட்ட முறைகளில் அமுல்படுத்தி வந்தார்கள். நரசிம்மராவ் திவேட்டியா என்ற இளங்கவிஞர் முன்பு நர்மதாசங்கர் எழுதி வந்த அதே உணர்ச்சிப் பெருக்குடன்—ஆனுல் அவரைவிட அதிகமான கலைத் திறனுடன்—விதவைகளின் பரிதாபகரமான நிலை பற்றிக் கவிதைகள் எழுதி

வந்தார். கோவர்த்தன்ராம் திரிபாடி ''சரஸ்வதி சந்திரா'' என்ற தமது அருமையான நாவலை எழுதும் தருவாயிலிருந்தார்—இந்நாவல், நிச்சயமாக, பழமைக்கு வால் பிடிக்கும் ஒரு படைப் பல்ல! இத்தருணத்தில் பிரபலமான கவியாக விளங்கிய மணிலால் நபுபாய் ஆசாரமான மனப்போக்குள்ளவராயிருந்தாலும் வேறு சிலரைப்போல வெறி பிடித்த பிற்போக்குவாதியாக இல்லை. இவர்களே இக் காலகட்டத்து இலக்கிய உலகின் முக்கியமான புள்ளிகள். நர்மதாசங்கரின் சிறந்த நண்பரும் பிரபல விமரி சகருமான நவல்ராம் பால்ய விவாகத்தை நையாண்டி செய்யும் தமது பிரபல கவிதையை ஏற்கெனவே இயற்றி முடித்திருந்தார். இவ்வாறு சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் பரவலான அங்கீகாரமும் செல்வாக்கும் பெற்று வந்த சூழ்நிலையில் நர்மதாசங்கர் தமது இவ்வகைக் கருத்துக்களைத் தாம் மாற்றிக்கொண்டுவிட்டதாகப் பகிரங்கமாக அறிவிக்க முன் வந்தது மிகத் துணிச்சலான ஒரு செயல்தான்! சரியோ, தவறோ—அநேகமாகத் தவறுதான்—தமது கொள்கைகளில் அவர் திடமாக இருந்து, அவற்றைத் துணிவுடன் பகிரங்கப்படுத்தியவாறிருந்த நேர்மைக்கு நாம் அஞ்சலி செலுத்த வேண்டும்.

நர்மதாசங்கரின் இறுதி நாட்களில் நிகழ்ந்த திடீர் மன மாற்றத்தை மனோதத்துவ ரீதியாகவும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத் துடனும் அணுகி, அதன் பின்னணியைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் முயற்சியில் பல அறிஞர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, கவியின் வாழ்க்கையின் பிற்பகுதியைப்பற்றின முழுமையான விவரங்கள் நமக்குக் கிடைக்காததால் இந்த நிகழ்ச்சியின் அடிப்படைக் காரணங்களைப் புரிந்துகொள்ள முடியா மலே இருக்கிறது. ஆனால் அவருடைய பிடிவாத குணமே ஒரு முக்கியக் காரணமாக இருந்திருக்கவேண்டும். இந்தக் குணம் அவரை எப்போதும் தீவிரப் போக்குகளை மேற்கொள்ள வைத்தது. முன்னரே குறிப்பிட்டது போல, இளமையில் அவர் தீவிர சனாதனியாகவும் மூட நம்பிக்கைகளில் திளைப்பவராகவும் இருந் தார். பிறகு ஆங்கிலக் கல்வியும் முன்னேற்றக் கருத்துள்ளவர் களின் தோழமையும் அவரை நேரெதிர் இயல்புகளை மேற்கொள்ள வைத்தன; அவர் பரம நாஸ்திகராகவும் சனாதனிகளை இகழுகிறவ ராகவும் மாறிப்போனார். பிறகு அவருடைய இறுதி நாட்களில் மீண்டும் ''பல்டி'' அடித்தார்! ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அவருடைய முன்னாள் நண்பர்களிடம் நம்பிக்கையிழந்து அவர் களுடன் அவர் உறவுகளை முறித்துக்கொண்டது ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இதுவும்கூட ஒரு மேலோட்டமான காரணமே! இடைப்பட்ட பல ஆண்டுகளில் அவருடைய உலக

அனுபவம் விரிவடைந்து, அவருடைய கண்ணோட்டமும் முடிவுகளும் முதிர்ச்சியடைந்ததே உண்மைக் காரணமாயிருந்திருக்க வேண்டும். மத நூல்கள், சரித்திர நூல்கள், நம் பண்டைய இலக்கியங்கள் ஆகிய யாவற்றையும் அவர் விரிவாகப் படித்ததும் அவருடைய கண்ணோட்டத்தில் மாறுதல்கள் நிகழக் காரணமாயிருந்திருக்கலாம். இவ்வாறு மனதில் புதிய கண்ணோட்டம் நிலைபெற்றதுதான் தாமதம், அவரது தமது முந்தைய கருத்துக்களை ஆவேசமாக மறுதலித்து, தமது நண்பர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கவேண்டும். சிக்கலான மனித இயல்புகள், போக்குகளுக்கு எளிமையான விளக்கங்களை யாசிக்கும் வெகுளிகளை வேண்டுமானால் இதெல்லாம் குழப்பத்தில் ஆழ்த்தலாம், ஆனால் மனித மனதின் விசித்திரங்களை உணர்ந்து அதன் நெளிவு சுளிவுகளுக்குப் பழக்கப் பட்டவர்களுக்கு இவையெதுவுமே விடை காணமுடியாத கடினமான புதிர்களேயல்ல.

பல குறைபாடுகள் உள்ளவரெனினும்கூட நர்மதாசங்கர் தீர்க்கதரிசனம் நிறைந்தவர். இந்த தீர்க்கதரிசனம் பல துறைகளை அளாவியதாக இருந்தது. அந்நாட்களிலேயே, அரசியலில் அவர் நேரடியாகப் பங்கு பெறுவிட்டாலும், பிரிட்டிஷ் ஆட்சியின் பல அனுகூலங்களைப் புகழ்ந்து வந்தாலும், அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டாலொழிய நாம் முன்னேற முடியாதென்றும் அவர் ஆணித்தரமாகக் கூறி வந்தார். அவருடைய பல நூல்களைப் படித்தாலே போதும், அவருடைய தேச பக்தியை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம். ''சுதேசாபிமானம்'' என்ற வார்த்தையை முதன் முதலாக குஜராத்தி மொழிக்கு அறிமுகப்படுத்தியவரே அவர்தான். அதேபோல, ''சுயராஜ்யம்'' என்ற வார்த்தையை, தாதாபாய் நௌரோஜி இவ்வார்த்தையை காங்கிரஸ் மாநாடுகளில் பயன்படுத்தத் தொடங்கிய இருபது ஆண்டுகளுக்கு முன்பே, இந்தியரின் வேட்கைகளை வெளிப்படுத்தும் தாரக மந்திரமாக நர்மதாசங்கர் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். தாதாபாய் நௌரோஜி கல்லூரியில் இவருடைய புரொபசராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இன்னும், இந்தி இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கவேண்டுமென்று மகாத்மா காந்திக்கு முன்னரே இவர் சொல்லத் தொடங்கிவிட்டார். ''ஹிந்துக்களின் வீழ்ச்சி'' என்ற தலைப்பில் ஆழ்ந்த தேச பக்தி தொனிக்கும் ஒரு கவிதையை அவர் எழுதினார். இக்கவிதை இந்துக்களின் வீழ்ச்சி பற்றிக் கூறுகிறதென்றாலும், அக்கவிதையை முழுதும் படிப்பவர்கள் நர்மதாசங்கர் ''இந்து'' எனக் குறிப்பிடுவது இந்து சமூகத்தினரை மட்டுமல்ல, இந்திய மக்கள் யாவரையுமே, எனத் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள்.

அவரது எழுத்துக்களில் பல இடங்களில் 'இந்து, இந்து' என்று அவர் குறிப்பிட்டிருப்பதால் அவர் ஒரு 'இந்து வெறியர்' எனச் சிலர் வர்ணித்துள்ளார்கள். பெருமதிப்புக்குரிய அறிஞரான காலஞ்சென்ற திரு. ஜே. ஈ. ஸஞ்சனாவும்கூட நர்மதாசங்கரைப் பற்றி எழுதும்போது இத்தவறைச் செய்கிறார். இது ஓர் அநியாய மான குற்றச்சாட்டு என்பதே என் கருத்து. நர்மதாசங்கர் வாழ்ந்த காலத்திய சூழல், புழக்கத்திலிருந்த சொல் வழக்குகள் ஆகியவை தொடர்பான அறியாமையை இக்குற்றச்சாட்டு வெளிப் படுத்துகிறது. அதிர்ஷ்டவசமாக, வேறெந்த எழுத்தாளரோ அல்லது விமரிசகரோ நர்மதாசங்கரை இவ்வாறு குற்றம் சாட்ட வில்லை.

கூட்டு மொத்தமாக அவருடைய இயல்புகளைக் கணிக்க முற்படு கையில், நம்மை உடனடியாகக் கவருபவை உழைப்பும் நேர்மையும் தான். பிரபல ஃபிரெஞ்சு ஓவியர் தோலூ லாட்ரெக் தமது மரணப் படுக்கையிலிருந்தபோது தனது தாயாரிடம் கூறிய சொற்களை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாயிருக்கும்: ''தாயே, நான் குடி காரன், ஸ்திரீலோலன், இன்னும் எத்தனையோ விதங்களில் தவறிழைத்திருப்பவன். ஆனால் நான் ஓவியமும் தீட்டி வந்துள் ளேன்.'' இதே பாணியில் நர்மதாசங்கர் பற்றியும் நாம் கூறலாம்: அவர் ஸ்திரீலோலர், குடிப் பழக்கமுள்ளவர் ஆனால் அதே சமயத் தில் தன் இறுதி மூச்சு வரையில் தனது மொழியும் இலக்கியமும் வளம் பெறவும் தனது சமூகமும் நாடும் மேன்மையுறவும் கடுமை யாக உழைத்தவர்.

இதனால்தான் அவருடைய மொழி பேசுகிறவர்களும் எழுதுகிற வர்களும் இன்றும் அவரை வியந்து போற்றி வருகின்றனர். நவீன குஜராத்தி இலக்கியத்தின் முக்கியப் புள்ளிகளில் ஒருவரான கே. எம். முன்ஷி, ''நவீன எழுத்தாளர்களுள் முதலிடம் பெறு பவர்'' என நர்மதாசங்கரை வர்ணித்துள்ளார். அவருடைய நண் பரும், அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளவருமான நவல்ராம், ''தனது காலக்கட்டத்தின் ஆன்மா'' என அவரைச் சிறப்பித்துள்ளார். மற்றொரு சிறந்த அறிஞரான விசுவநாத் பட், அவரை ''வீர் நர்மத்'' என அழைக்கிறார். ராம் நாராயண் பாடக் என்ற இன்னொரு பிரபல எழுத்தாளர் நர்மதாசங்கரின் படைப்புகளின் ஒரே ஒரு அம்சத்தைப் பற்றி முழுப் புத்தக மொன்று எழுதியிருக்கிறார். இந்த நூலாசிரியரும் தமது முந்தைய கட்டுரை ஒன்றில், ''கவி—தேச பக்தர்—வசன இலக்கிய முன்னோடி'' என அவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சென்ற தொண்ணூறு ஆண்டுகளில் குஜராத்தி இலக்கியத்தில் குறிப்பிடத் தக்கவர்களாக விளங்கின புள்ளிகள் யாவருமே அவரைப் பற்றி

விரிவாக எழுதித் தள்ளியிருக்கிறார்கள்; இவர்களுள் நர்மதா சங்கரைப் புகழ்ந்து பேசாதவர்கள் அபூர்வம். இதற்குமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது? நமது சிறந்த கவிஞர் ஒருவர் குறிப்பிட்டதுபோல: ''வீர் ந ர் ம த், உனது வாழ்க்கைப் போராட்டத்தில் நீ வெற்றி பெற்றுவிட்டாய்'' நர்மதாசங்கரே, தனது மறைவு பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் கவிதை யொன்றில், ''எனக்காக யாரும் அழவேண்டாம்'' எனக் குறிப் பிட்டுள்ளார்.

அவருடைய விருப்பத்திற்கேற்ப, சோகத்தில் தோய்ந்து போகாமல், இத்தகைய ஓர் அரிய மனிதர் நம்மிடையே வாழ்ந்து தனது வாழ்நாள் முழுவதும் தாம் ஆற்றிய பணிகளை நமக்கு ஆதரிசமாகவும் செல்வமாகவும் விட்டுச் சென்றது குறித்து நாம் மகிழ்ச்சியில் திளைப்போம்!

நர்மதாசங்கர் 1886ஆம் ஆண்டில் மறைந்தார். இதற்கடுத்த ஆண்டில்—1887—குஜராத்தி இலக்கிய உலகில் வரலாற்று முக்கியத்துவம் உள்ள இரு அரிய நிகழ்ச்சிகள் நடந்தன. முதலா வது, கோவர்த்தன்ராம் திரிபாடியின் அமரப் படைப்பான ''சரஸ்வதி சந்திரா''வின் முதல் பாகம் வெளிவந்தது; இரண்டா வது, நரசிம்மராவ் திவேட்டியாவின் ''குஸு-ம் மாலா'' என்ற கவிதைத் தொகுதி வெளிவந்தது. ஒன்று வசன நூல்; மற்றொன்று கவிதை நூல். தற்கால குஜராத்தி இலக்கியத்தின் ஊற்றுக்களாக விளங்கும் இரு பெரும் படைப்புகளாக இவற்றைக் குறிப்பிடலாம். வசனம், க வி தை என்ற இரு துறைகளிலும் நர்மதாசங்கர் உழைத்த உழைப்பு, அவர் உருவாக்கிய முன்மாதிரிகள், இவை யில்லாமல் மேற்சொன்ன இரு படைப்புகளும் சாத்தியமாகி யிருக்குமா? தெரியாது. ஆனால் அவருடைய முயற்சிகள் பலனற்றுப் போகவில்லையென்ற உணர்வு நமக்கு நிச்சயம் உண்டாகிறது. எனவே, ''எனக்காக அழவேண்டாம்'' என்ற அவருடைய ஆணையை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். இந்த வாக்கியம் கல்லில் பொறிக்கப்படவேண்டுமென்று நர்மதாசங்கர் விரும்பினார். கல்லில் பொறிக்கப்படாவிடினும், அவருடைய நாட்டு மக்களின் நெஞ்சில் என்றென்றைக்கும் இவ்வாக்கியம் பொறிக்கப்பட்டுவிட்டது.

## நர்மதாசங்கரின் நூல்கள்

| எண் | வெளியான ஆண்டு | நூலின் பெயர் |
|---|---|---|
| 1 | 1850–51 | மண்டளி மளவாதி ததா லாப் |
| 2 | 1856 | வியபிசார் நிஷேதக் |
| 3 | 1856 | முவான் பச்வாடே ரோவா கூட்வானி கேலாயி |
| 4 | 1856 | ஸ்வதேசாபிமான் |
| 5 | 1856 | நிராச்ரித் பிரத்யே ஸ்ரீமந்தனு தர்மா |
| 6 | 1857 | பிங்கள் பிரவேஷ் |
| 7 | 1857 | ஸ்திரீனு தர்மோ |
| 8 | 1857 | குரு அனே ஸ்திரீ |
| 9 | 1858 | நர்ம கவிதா—1, 2 |
| 10 | 1858 | அலங்கார் பிரவேஷ் |
| 11 | 1858 | ரஸ பிரவேஷ் |
| 12 | 1858 | கரீபாய் விஷே பிகாரி தாஸ்னே ஸம்வாத் |
| 13 | 1858 | கவி அனே கவிதா |
| 14 | 1859 | ஸம்ப் |
| 15 | 1859 | விஷயி குரு |
| 16 | 1859 | குருனி ஸத்தா |
| 17 | 1859 | நர்மகவிதா—3, 4, 5, 6, 7, 8 |
| 18 | 1860 | நர்மகவிதா—9, 10 |
| 19 | 1860 | தயாராம் கிருத் காவ்யஸங்க்ரஹ |
| 20 | 1860 | புனர்விவாஹ் |
| 21 | 1860 | லக்ன ததா புனர்லக்ன |
| 22 | 1860 | பக்தி |
| 23 | 1860 | ஸாகார் |
| 24 | 1860 | மன்ஹர் பத் (மனேகர் ஸ்வாமினுன் பத்) |
| 25 | 1859–1863 | துல்ஜி வைதவ்ய சித்ரா (உரையாடல் வடிவில்) |
| 26 | 1861 | நர்ம கோஷ்—1 |
| 27 | 1861 | ருது வர்ணன் |

| | | |
|---|---|---|
| 28 | 1862 | நர்ம கவிதா—முதல் தொகுதி (முந்தின ஏழு ஆண்டுகளில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு) |
| 29 | 1862 | நர்ம கோஷ்—2 |
| 30 | 1863 | நர்ம கவிதா—தொகுதி 2 |
| 31 | 1864 | ஹிந்துவோனி படதீ |
| 32 | 1864 | நர்ம கவிதா (முழுமையான தொகுப்பு) |
| 33 | 1864 | தாண்டியோ (இப்பெயருள்ள பத்திரிகையின் துவக்கம்) |
| 34 | 1864 | நர்ம கோஷ்—3 |
| 35 | 1864 | ரணமா(ன்) பாச்சா(ன்) பகலா(ன்) நா கரவா விஷே |
| 36 | 1865 | நர்ம கத்ய |
| 37 | 1865 | கவி சரித்ர |
| 38 | 1865 | தயாராம் கிருத் காவ்ய ஸங்க்ரஹ் |
| 39 | 1865 | நர்ம வியாகரண்-முதல் தொகுதி |
| 40 | 1865 | சூரத்னி முக்தேஸர் ஹகீகத் |
| 41 | 1865 | நர்ம வியாகரண்—முதல் தொகுதி, பாகம் 1 |
| 42 | 1865 | நர்ம கோஷ்—4 |
| 43 | 1866 | நாயிகா விஷய் பிரவேஷ் |
| 44 | 1867 | மேவாட்னி ஹகீகத் |
| 45 | 1868 | ஸஜீவாரோபண் |
| 46 | 1868 | ஸ்திரீ கேளவணி |
| 47 | 1868–69 | குஜராத்தியோனி ஸ்திதி |
| 48 | 1869 | கேளவணி விஷே |
| 49 | 1869 | குள மோடப் |
| 50 | 1869 | உத்யோக் ததா விருத்தி |
| 51 | 1869 | ஸுக் |
| 52 | 1870 | ராமாயணனுஸார் |
| 53 | 1870 | மகாபாரத்னுஸார் |
| 54 | 1870 | இலியத்னுஸார் |
| 55 | 1870 | மகாபுருஷோனு(ன்) சரித்ர |
| 56 | 1870 | நர்ம கதாகோஷ் |
| 57 | 1870 | நாகர் ஸ்திரீ மா(ன்) கவாதா(ன்) கீத் |

| | | |
|---|---|---|
| 58 | 1872 | பிரேமானந்த் கிருத் தசம் ஸ்கந்த் |
| 59 | 1873 | நர்ம கோஷ் (முழுமையானது) |
| 60 | 1874 | மகா தர்சன் (ஜகத்னு பிராசீன் இதிகாஸ்னுா ஸமக்ர தர்சன்) |
| 61 | 1874 | ராஜ்ய ரங்க்–1 (ஜகத்னு பிராசீன் ததா அர்வாசீன் இதிஹாஸ்) |
| 62 | 1875 | பிரேமானந்த் கிருத் நாளாக்யா(ன்) |
| 63 | 1876 | ராம் ஜானகி தர்சன் |
| 64 | 1878 | ஸ்ரீ திரௌபதி தர்சன் நாடக் |
| 65 | 1878 | சீதா ஹரண் நாடக் (அச்சாகவில்லை) |
| 66 | 1881 | ஸ்ரீ ஸார சாகுந்தல (சாகுந்தலம்) |
| 67 | 1883 | பாலகிருஷ்ண விஜய் நாடக் |
| 68 | 1886 | தர்ம விசார் |
| 69 | 1889 | காதியவாட் சர்வ ஸங்க்ரஹ் |

## தேதியிடப்படாத நூல்கள்

70 ராஜ்யரங்க்–தொகுதி 2
71 ஆர்ய தர்சன்
72 கிருஷ்ண குமாரி நாடக்
73 ஸ்ரீமத் பகவத் கீதா
74 குஜராத் சர்வ ஸங்க்ரஹ்
75 தேஷ் வியவஹார் வியவஸ்தா
76 ''மாரி ஹகீகத்'' என்ற அவருடைய சுயசரிதையை 1866ஆம் ஆண்டு அவர் எழுதி முடித்துவிட்டாலும், 1933ஆம் ஆண்டு அவருடைய நூற்றாண்டு விழாவின்போது தான் இது வெளியாயிற்று.

## நர்மதாசங்கரைப் பற்றின நூல்கள்

### குஜராத்தியில்

| எண் | நூலின் பெயர் | எழுதியவர் |
|---|---|---|
| 1 | கவி ஜீவன் | நவல்ராம் லக்ஷ்மிராம் |
| 2 | வீர் நர்மத் | விசுவநாத் மகன்லால் பட் |
| 3 | நர்மத் சதாப்தி கிரன்த் | மும்பயி நர்மத் சதாப்தி ஸமிதி |
| 4 | கவி நர்மத் சதாப்தி ஸ்மாரக் சித்ராவளி | குஜராத்தி ஸாகித்ய பரிஷத் |
| 5 | நர்மத்—அர்வாசினோமா ஆத்ய | கே. எம். முன்ஷி |
| 6 | நர்மதாசங்கர் கவி | ராம் நாராயண் வி. பாடக் |
| 7 | நர்மத்—அர்வாசீன் கத்ய பத்யனோ ஆத்ய பிரணேதா | ராம் நாராயண் வி. பாடக் |
| 8 | நவபுக்னோ பிரஹரி—நர்மத் | போகிலால் காந்தி |

### ஆங்கிலத்தில்

| | | |
|---|---|---|
| 9 | நர்மதாசங்கர்—கவி—தேசபக்தர்—வசன இலக்கிய முன்னோடி | குலாப்தாஸ் ப்ரோக்கர் |
| | Narmadashankar——Poet-Patriot——Pioneer–Prose-Writer | *Gulabdas Broker* |

# இந்திய இலக்கியச் சிற்பிகள்

## இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்

லட்சுமி நாத பெஸ்பருவா (ஹேம் பருவா) *க. த. திருநாவுக்கரசு* | கபீர் (பிரபாகர் மாச்வே) *தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார்* | கேசவஸுதர் (பிரபாகர் மாச்வே) *இராம. கோபிநாதன்* | ஈசுவர் சந்திர வித்யாசாகர் (ஹிரண்மய் பானர்ஜி) *இராம. கோபிநாதன்* | ராஜாராம் மோகன் ராய் (சௌமியேந்திரநாத தாகூர்) *க. த. திருநாவுக்கரசு* | பிரேம் சந்த் (பிரகாஷ் சந்திர குப்தா) *சரஸ்வதி ராமநாத்* | குமாரன் ஆசான் (கே. எம். ஜார்ஜ்) *கே. சி. சங்கரநாராயணன்* | தாருதத் (பத்மினி ஸென் குப்தா) *ஆ. சீனிவாசராகவன்* | வீரேசலிங்கம் (வி. ஆர். நார்லா) *நா. பார்த்தசாரதி* | ஸ்ரீ அரவிந்தர் (மனோஜ் தாஸ்) *பி. கோதண்டராமன்* | மீராபாய் (உஷா நில்சன்) *எஸ். கந்தசாமி 'துறைவன்'* | B. M. ஸ்ரீகண்டய்யா (A. N. மூர்த்திராவ்) *இரா. மதிவாணன்* | சந்துமேனன் (டி. சி. சங்கரமேனன்) *கு. இராஜவேலு* | காஸி நஸ்ருல் இஸ்லாம் (கோபால் ஹால்டார்) *கே. பி. எஸ். ஹமீத்* | வள்ளத்தோள் (ஹிருதயகுமாரி) *மா. இளையபெருமாள்* | பசவேஸ்வரர் (H. திப்பேருத்ர சுவாமி) *T. K. நாகாம்பாள்* | பாணபட்டர் (கே. கிருஷ்ண மூர்த்தி) *பெ. திருஞான சம்பந்தன்* | பக்கிம் சந்திர சாட்டர்ஜி (சு. ச. ஸென் குப்தா) *அசோகமித்திரன்* | மகரிஷி தேவேந்திரநாத தாகூர் (நா. சௌதுரி) *கா. மீனாட்சிசுந்தரம்* | தாராசங்கர் பந்தோபாத்யாயார் (மஹாஸ்வேதாதேவி) *கு. இராஜவேலு* | நானாலால் (U. M. மணியார்) *நா. பார்த்தசாரதி* | ஜீவனானந்ததாஸ் (சி. தாஸ் குப்தா) *க. த. திருநாவுக்கரசு* | பாரதியார் மூலமும் தமிழாக்கமும் (பிரேமா நந்தகுமார்) | வேதம் வேங்கடராய சாஸ்திரிகள் (வேதம் வேங்கடராய சாஸ்திரி) *சி. செல்லப்பன்* | புத்ததேவ போஸ் (அலோகரஞ்சன் தாஸ் குப்தா) *த. வே. வீராசாமி* | மாணிக்கவாசகர் மூலமும் தமிழாக்கமும் (G. வன்மீக நாதன்) | ஜெயதேவர் (சுநீதிகுமார் சாட்டர்ஜி) *டி. எஸ். பார்த்தசாரதி* | மாணிக் பந்தோபாத்யாயர் (சரோஜ் மோகன் மித்ரா) *எஸ். கந்தசாமி 'துறைவன்'* | தமிழ்த் தாத்தா (கி. வா. ஜகந்நாதன்) கல்ஹணர் (சோம்நாத் தர்) *எஸ். கிருஷ்ணமூர்த்தி* | சரளாதாசர் (கிருஷ்ண சந்திர பாணிகிராகி) *தே. ஆண்டியப்பன்* | தத்தகவி (அனுராத போட்தார்) *இராம. கோபிநாதன்.*

*(அடைப்புக்குள் உள்ளது மூல ஆசிரியரின் பெயர்)*

Indian Institute of Advanced Study
117395
14/12/04
SHIMLA

''நர்மத்'' என்ற பெயரில் பிரபலமாக விளங்கிய நர்மதாசங்கர் லால் சங்கர் தவே (1833–1886), குஜராத்தி மொழியின் படைப் பிலக்கிய மற்றும் விமரிசன இலக்கியத்துறைகளில் புதிய பாதை களைத் தோற்றுவித்த முன்னோடியாக அறியப்படுகிறார்.

சூரத்தில் பிறந்த நர்மதாசங்கர் தமது ஆரம்பக் கல்வியை அந்நகரி லேயே பெற்று, பின்பு பம்பாய் நகரில் மேற்படிப்பை முடித்துக் கொண்டார். சமூக சீர்திருத்த இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்றார்.

''புத்தி—வர்த்தக் சபை'' என்ற அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான இவர், எழுத்தை சமூக சீர்திருத்தத்துக்கான ஆயுத மாகக் கண்டு, அதன் பொருட்டே முழுநேர எழுத்தாளரானார்.

நவீன குஜராத்திக் கவிதை மற்றும் வசன இலக்கியத்தின் தந்தை யாக நர்மதாசங்கர் கௌரவிக்கப்படுகிறார். நவீன இலக்கியத்தின் கூறுகளென இன்று உணரப்படுகின்ற அம்சங்கள் குஜராத்தி மொழியில் முதன் முதலில் இவருடைய படைப்புகளிலேயே இடம் பெற்றன. இச்சிறு நூலில், பிரபல குஜராத்தி எழுத்தாளரான குலாப்தாஸ் ப்ரோக்கர், தமக்கே உரிய சிறப்பான பாணியில் நர்மதாசங்கரின் எழுத்து மற்றும் வாழ்க்கையின் அம்சங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நர்மதாசங்கர் பற்றி—குஜராத்தி மொழிக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் பற்றி—துல்லியமான மதிப்பீடுகளை இந்நூலாசிரியர் வழங்கியுள்ளார்.

Library IIAS, Shimla
T 891.471 809 2 N 167 B
00117395

அட்டை அமைப்பு : சத்யஜித் ராய்
உருவப்படம் : ரவிசங்கர் M. ராவல் உதவியது

SAHITYA AKADEMI
R REVISED PRICE Rs. 15·00